


# 1

அந்த அறையில் மாட்டப்பட்டிருந்த கடிகாரத்தில் 'குக்...குக்...குக்...' என்று பத்துமுறை வெளியில் தலையை காட்டிவிட்டு கதவை மூடிக்கொண்டு அடங்கின இரண்டு குருவிகள்.

திலகன் யோசனையாய் நிமிர்ந்தான். நம்பாமல் தன் மணிக்கட்டை திருப்பி கைக்கடிகாரத்தில் நேரம் பார்த்தான். அதுவும் பத்து என்று தான் சொன்னது. மேசைமேல் விரித்து வைத்திருந்த கோப்புகளில் பார்வை பதியவில்லை.

அவன் இருப்பிடத்திலிருந்து பத்தடி தொலைவில் கண்ணாடி தடுப்பிற்கு பின்னால் போடப்பட்டிருந்த நாற்காலியும், மேசையும் இவனைப் போலவே சோர்ந்துபோய் இருப்பது போல் வெறுமையாய் இருந்தது.

ஏன் இன்னும் வரவில்லை?

மணி ஒன்பது அடிக்குமுன்பே டாணென்று வந்துவிடுபவளுக்கு இன்று என்ன வந்தது? இந்த அலுவலகத்தில் அவள் சேர்ந்து இரண்டு ஆண்டாகிவிட்டது. ஆனால் ஒரு நாளென்றாலும் ஒரு நாள்கூட விடுமுறை எடுத்தவளுமில்லை. காலம் தாழ்த்தி வந்ததுமில்லை.

'ஒருவேளை... அவளுக்கு உடல்நலமில்லையோ? ஆனால், இதுவரை அப்படி ஆரோக்கிய கேடு என்று படுத்தவளில்லையே?'

'அதுசரி... மனுசனாப் பொறந்தா... உடல்நலமில்லையென்று கூடவா படுக்கமாட்டார்கள்? ஒரு நாள் இல்லையென்றால் ஒரு நாள் படுக்க மாட்டார்களா?' ஒருபுறம் மனம் கேலி பண்ணியது.

ஆனாலும் அந்த சமாதானத்தை அவன் மூளை ஏற்றுக்கொள்ள வில்லை.

'வேறு ஏதாவது காரணமாயிருக்குமோ? ஒருவேளை அவளை பெண் பார்க்க யாரேனும்...?' அப்படி நினைத்தமாத்திரத்தில் உடம்பு ஒருமுறை விலுக்கென்று அதிர்ந்தது.

'கடவுளே... அப்படி மட்டும் ஏதும் நடந்துவிடக்கூடாது. அவள் காய்ச்சல் என்று பத்து நாள் படுத்தால் கூடப் பரவாயில்லை. பெண் பார்க்கிறேன் என்று மட்டும் எவனும் என்னவளை பார்க்கக்கூடாது!' அவன் காதல் இதயம் அவசரமாய் கடவுளிடம் விண்ணப்பித்தது.

பலதையும் நினைத்துக் குழம்பியதில் இதயம் படக்... படக்... என்று

அடித்துக்கொண்டது. ஜில்லென்று குளிர்ந்த நீரை தொண்டைக்குள் சரித்துக்கொண்டு ஆசுவாசப்படுத்தியவன் மேசை மேலிருந்த அழைப்பு மணிக்கான சுவிட்சை அழுத்தினான்.

அடுத்த இரண்டாவது விநாடியில் வேலன் அங்கு நின்றிருந்தான்.

வேலன்– ஆபீஸ்பாய்!

"குட்மார்னிங் சார்!"

"ம்...ம்... ஆபீசுக்கு எல்லாரும் வந்தாச்சா?"

"வந்தாச்சு சார்! ஆனால் இந்தம்மா மட்டும்தான் இன்னும் வரலை!" காலியான அவளின் நாற்காலியை சுட்டிக்காட்டினான்.

"ஏன் வரலை? அவங்க ஆபீசுக்கு போன் பண்ணினாங்களா?"

"இல்லை சார்! இதுவரைக்கும் பண்ணலை!"

"சரி... நீபோ...! அப்படியே மோகனை கொஞ்சம் உள்ளே அனுப்பு!"

"சரிங்க சார்!"

போய்விட்டான்.

'போன் பண்ணியும் சொல்லலையாமே! என்ன காரணமாய் இருக்கும்? ஏன் வரவில்லை?' மீண்டும் காரணத்தை கண்டுபிடிக்கும் ஆராய்ச்சியில் இறங்கிவிட்டான் திலகன்.

"சார்... சார்..." ஐந்தாவதுமுறையாக அழைத்தான் மோகன். சேல்ஸ் எக்சிக்யூடிவ் பொறுப்பில் இருப்பவன். திலகனின் கீழ் வேலை பார்த்தாலும், சமவயது, ரசனை, பொதுஅறிவு இவர்களை நட்பு கயிற்றில் பிணைய வைத்திருந்தது.

"உட்கார் மோகன்!"

மோகன் புன்னகைத்தபடி அமர்ந்தான்.

"உடம்பு சரியில்லையா சார்!"

"உதைப்படுவே ராஸ்கல்! இங்கே நாம ரெண்டுபேர் மட்டும்தானே இருக்கிறோம். அப்புறம் எதுக்கு சார், மோரெல்லாம்?"

"சரி... சரி... மன்னிச்சிடு தலைவா! சொல்... உடம்புக்கு என்ன?"

"என்ன உடம்புக்கு? நல்லாதானே இருக்கேன்!"

"முகம் ஏன் பறிச்சிபோட்ட பூவாட்டம் வாடிப்போயிருக்கு?"

'அடக்கடவுளே... முகமே காட்டிக் கொடுக்குதா? சும்மாவா சொன்னார்கள் பெரியவர்கள்? அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்று!' தனக்குள் நகைத்துக்கொண்டான்.

"ஒ...ஒண்ணுமில்லே... இரவெல்லாம் சரியா தூக்கமில்லே...!"



"க்கும்...!" கனைத்துக்கொண்டான் மோகன்.

"ஏய்... என்னடா கிண்டலா?"

"அடப்பாவி! நான் எங்கடா கிண்டல் பண்ணினேன்!"

"மனசே சரியில்லை மோகன்!"

"ஏன்?"

"தெரியலை!" என்றான் விட்டத்தை பார்த்து பெருமூச்சுவிட்டபடி.

"நான் சொல்லவா?" கண்களில் குறும்பு மின்னியது.

"சொல்லேன் பார்ப்போம்!" என்றான் அலட்சியமாய்.

"தலைவி இன்னும் ஆபீசுக்கு வரலையேன்னு கவலை!"

"மோ...க...ன்...!" திடுக்கிட்டுப் போனான் திலகன்.

'இவனுக்கு எப்படித் தெரியும்? என் உயிருக்கும் உடலுக்கும் மட்டுமே தெரிந்த இரகசியம் இவனுக்கு எப்படி? அதுவும் அவளுக்கே இன்னும் தெரியாத இரகசியமல்லவா இது?'

"என்ன திலகன்! கடப்பாறையை விழுங்கினவன் மாதிரி முழிக்கிறே?"

"மோகன்... உனக்கு... இது... எப்......"

"புகையை மறைச்சிடலாம். நெருப்பை மறைச்சிட முடியாது திலகன். இருதயத்தின் கண்ணாடி கண்கள்னு சொல்வாங்க! நீ அவளை பார்க்கிறப்போவெல்லாம், அவளைப் பத்தி பேசறப்போவெல்லாம், பளபளன்னு மின்னி, எங்கும் உன் கண்கள் காட்டிக்கொடுத்து விடுகிறதே... நண்பா! என்ன செய்ய?"

"இல்லடா... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லே...." சமாளித்தான்.

"அப்பாடா... இப்பத்தான்டா நிம்மதியா இருக்கு. சரி விடு. நானே அவளுக்கொரு அப்ளிகேசன் போடணும்னு நினைச்சிட்டிருந்தேன். லைன் கிளியராய்டுச்சு" என்றான் மோகன்.

"டேய்... டேய்... என்னடா சொல்றே?" பதறினான்.

"ஏன்டா பதர்றே?"

"உண்மையை சொல்லிடறேன்... அவளை... அவளை... நான்...!"

"வந்தாயா வழிக்கு? இதை வெளிப்படையா சொல்றதுக்கு என்னடா தயக்கம்? எதை ஆறப்போட்டாலும் இதை மட்டும் ஆறப்போடக் கூடாது. சீக்கிரம் இதைப்பத்தி அவன்கிட்டே பேசிடு...!"

"எ...எப்படி மோகன்? அவளுக்கு என்மேல அப்படி ஒரு எண்ணமிருக்கான்னு தெரியலையே...! அப்புறம் எப்படி நான் பேச முடியும்?"

"ரொம்ப நல்லது! இப்படியே நீ தயங்கிட்டிரு. அவன் அதற்குள்

பேரன் பேத்தியெல்லாம் எடுத்துவிடுவாள்!"

"ஏன்டா இப்படியெல்லாம் பேசறே?"

"பின்னே என்னடா? இந்த விசயத்தில் இப்படிப்பட்ட நாகரீக தயக்கம் வேண்டாம் புரியுதா? அவள் மனசில் என்ன இருக்குன்னு பேசினால்தானே தெரியும்! பேசிடு சரியா?"

"ம்...!" என்றவன் பேப்பர்வெயிட்டை உருட்டியபடி யோசித்துக் கொண்டிருந்தபோதுதான்...

"சார்...!" என்ற குரல் கேட்டது.

குரலா அது?

பியானோ வாசித்தது போலிருந்தது.

ஆவலாய் நிமிர்ந்தான் திலகன்.

முகமெல்லாம் புன்னகைபூக்க எதிரே நின்றிருந்தாள் நந்தினி!

## 2

"குட்மார்னிங் சார்...!" பவ்யமாய் அவனைப் பார்த்து சொன்னாள் நந்தினி.

'நினைத்தேன் வந்தாய்... நூறு வயது...!' என்று பாடவேண்டும் போலிருந்தது திலகனுக்கு.

"நான் வரட்டுமா சார்? அப்படியே நான் சொன்னதையும் கொஞ்சம் சிந்திச்சி பார்த்தா நல்லது!" நமட்டாய் சிரித்துவிட்டு போய் விட்டான் மோகன்.


"குட்மார்னிங்... மிஸ் நந்தினி! என்னைக்குமில்லாத அதிசயமா இன்னைக்கு ஏன் இவ்வளவு தாமதம்னு தெரிஞ்சுக்கலாமா?"

"சாரி... சார்! வழக்கம் போல நான் சரியான நேரத்துக்குத்தான் கிளம்பி வந்தேன். பாரீஸ்கார்னர்ல இறங்கி இன்னொரு பஸ் பிடிக்கிற அவசரத்துல ரோடு தாண்டினப்ப... ஆட்டோ ஒன்னு..."

"அய்யோ... அடிபட்டிருச்சா? எங்கே ரொம்ப பலமாவா? மருத்துவமனைக்கு போனீங்களா?" சீட்டை விட்டே எழுந்துவிட்டான் திலகன்.

நந்தினி அவனை புரிந்தும்புரியாமல் பார்த்தாள். இதயத்தில் சந்தோச நீரூற்று குப்பென்று பீய்ச்சி அடித்தது.





'திலகன்... உங்கள் மனதில் நானிருக்கிறேனா?' கோடிட்டு காட்டிய அவன் செயல் நந்தினியை மகிழவைத்தது.

"இல்லை... நீங்கள் நினைப்பது போல் அப்படி எதுவும் நடக்க வில்லை. எதிரே வந்த ஆட்டோ, என்மேலே சேற்றை வாரியிறைத்து விட்டு போய்விட்டது என்றுதான் கூறவந்தேன்."

'அப்பாடா!' நிம்மதியாய் மூச்சுவிட்டாள். அதேநேரம், தன்னை மீறிய அவளைப் பற்றிய அக்கறை உணர்ச்சி வெளிப்பட்டுவிட்டதே என்று சற்றே வெட்கமும் எழுந்தது.

"அதனால்... உடைகளை மாற்ற மறுபடி வீட்டுக்கு போய் வரவேண்டியிருந்தது. வர்றதுக்கு கொஞ்சம் லேட்டாயிட்டு... மன்னிச்சிடுங்க சார்!"

"பரவாயில்லே நந்தினி... மிக அவசரமாக பார்த்து முடிக்க வேண்டிய வேலைகள் நிறைய இருக்கு. நான் நேத்து அந்த மேட்டர் விசயமா சில குறிப்புகள் கொடுத்தேனே... முதல்ல வண்டலூருக்கு, நம்ம பாஸ் பெயருக்கு ஒரு பேக்ஸ் அனுப்பிடுங்க!"

"சரி சார்" நந்தினிக்கு பலூனில் ஊசி குத்தியது போலிருந்தது.

'தன்னைப் பற்றி அக்கறையாய், அன்பாய் மேலும் நாலு வார்த்தை பேசுவான்' என்று எதிர்பார்க்க... அவனோ சடாரென்று வியாபார விசயத்திற்கு தாவி கட்டளையிடுகிறான்... இருக்கட்டும். எத்தனை நாளுக்கு கண்ணாமூச்சி ஆடுகிறார் என்று பார்ப்போம்! ஒரு ஆண் பிள்ளைக்கு இந்தளவு தயக்கம் அவசியமா? பெண்களாய் வலிய போய் தன் மனதை வெளிப்படுத்தினால், 'ஒரு மாதிரியான கேஸ்' என்று சடுதியில் வேறு மாதிரி கணக்குப் போடும் உலகமிது.

உம்... இவர் எப்போது மனசை திறந்து பேசி... பழகி, உல்லாசமாய் பறந்து திரிந்து, பூங்கா, கடற்கரை, சினிமா என்று சுற்றி, வீட்டில் சொல்லி திருமணம் செய்து, தாம்பத்யம், குழந்தை என்று குடும்பமாய் செட்டிலாவது எப்போது? சரியான... சாம்பிராணி, சாமியார், ச்சே...!

"நந்தினி... ஏன் ஒரு மாதிரியாயிட்டீங்க? பேக்ஸ் கொடுக்கச் சொன்னது...!"

"காதில் விழுந்தது சார்!" பட்டென்று பதிலளித்துவிட்டு தன் இருக்கையில் அமர்ந்தாள். அப்படி இப்படியென்று மதிய உணவு இடைவேளை வரைக்கும் அவன் பக்கம் திரும்பிக்கூடப் பார்க்க வில்லை நந்தினி.

திலகனுக்கு ஒரு மாதிரியாகிவிட்டது.

'திடீரென்று என்னாகிவிட்டது இவளுக்கு? சே... எனக்கும்தான் மூளை பிசகிவிட்டது. எத்தனை அருமையான வாய்ப்பு? மெல்ல நம்



மனதில் உள்ளதை வெளிப்படுத்தக்கூடிய அற்புதமான சந்தர்ப்பத்தை பாழாய்போன கோழைத்தனத்தால்... கெடுத்து...சே! அவள் முகத்தைப் பார்த்தால்... அதிலும் ஊடுருவிப் பார்க்கும் அந்த கண்களை சந்திக்கும் எப்பேர்பட்ட மாவீரனும் ஊமையாகிவிட மாட்டானா! இதில் நான் எம்மாத்திரம்?' தனக்குத்தானே சமாதானம் சொல்லிக் கொண்டான்.

'நீ உருப்படவேப் போறதில்லேடா!' கோபமாய் கண்களை உருட்டினான் மோகன், மனதிற்குள் நுழைந்து.

'போடா... காதலிச்சிப் பார்த்தால்தானே தெரியும்... எப்படி தைரியம் வருமென்று?'

திலகனுக்கு எந்த வேலையிலும் மனம் ஒட்டவில்லை. என்றும் இல்லாமல் இன்று அடிக்கடி மனம் தாவி தாவி நந்தினியிடம் ஓடிக்கொண்டிருந்தது.

அவளையே பார்த்தான்.

சராசரி உயரம்! சிவப்பும், மஞ்சளும் கலந்த தங்க நிறம். ஜெயப்பிரதாவைப் போல் சற்றே எழும்பி இறங்கிய நீள்மூக்கு. ஆளை அடித்துப்போடும் கண்கள். மை தீட்ட வேண்டிய அவசியமே இல்லாத அடர்த்தியான இமைகள். அழகு நிலையம் சென்று சீர்படுத்திக் கொள்ள தேவையில்லாத வளைந்த புருவங்கள். எப்போதும் ஈரத்தில் பளபளக்கும் அதரங்கள். நடுவில் குழிவைத்து, கொஞ்ச சொல்லும் மோவாய். வழவழவென்று சற்றே நீண்ட கழுத்து. ஒற்றை செயின், பின்னங்கழுத்தில் சுருள்சுருளாய் முடி...

வாயால் உப்பென்று ஊதி முத்தமிட சொல்லும். சரேலென்று வளைந்து இறங்கும் இடுப்பும், இடுப்புக்கு மேலேயும்... போதையேற்றும் அழகு. உடை உடுத்துவதிலும் நேர்த்திதான். சுடிதாரிலும் அசத்துவாள். சேலையிலும் ஆச்சரியப்படுத்துவாள். நீளமாய் வளர்த்து சாயம் பூசியிருக்கும் விரல் நகங்கள்கூட நளினமாய் கம்ப்யூட்டரில் நர்த்தனமாடுவதை இன்றைக்கெல்லாம் பார்த்துக்கொண்டேயிருக்க சொல்லும்.

'நந்தினி... 'நீ எனக்கு கிடைப்பாயா?' ஏக்கமாய் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

நர்மதா இன்டர்நேசனல்!

திலகன் பணிபுரிந்துகொண்டிருப்பது இதன் சென்னைக் கிளையில். மானேஜரான இவனுக்கு செயலாளர்தான் நந்தினி!

'நர்மதா இன்டர்நேசனல்' மாநிலங்களில் மட்டுமல்ல, அயல்நாடு களிலும் அதன் கைகள் விரிந்து பரந்திருந்தன. இதுதான் என்றில்லாமல்,

எல்லா வியாபாரத்திலும் மூக்கை நுழைத்து சக்கைப்போடு போட்டுக்கொண்டிருந்தது.

தாராளமான சம்பளம், ஊக்க போனசு, வாகன வசதி என்று கம்பெனி நிர்வாகம் ஊழியர்களை தன்வசப்படுத்தி, விசுவாசமாய் செயல்பட வழிகாட்டியது. நிலகனுக்கு கொஞ்சம் அந்த விசுவாசம் அதிகப்படியாகவே இருந்தது. காரணம் இல்லாமலில்லை. அவன் தாயின் பெயரும் நர்மதாதான். இந்த விசுவாசமும், கம்பெனி விசுவாசமும் சேர்ந்து... தன் சொந்த கம்பெனியைப் போல் அதிகமாய் உழைக்க வைத்தது. வேலை நேரத்துக்கு முன்னதாகவே வந்து, மாலை பணியாளர்கள் புறப்பட்டு போன வெகுநேரம் பின்பே போவான்.

# 3

"என்னடி அதுக்குள்ளே எந்திரிச்சிட்டே? வைத்ததே மூணு இட்லிதான். அதிலேயும் ஒன்னை மிச்சம் வைச்சிருக்கே... என்னதான் நினைச்சிட்டிருக்கே உன் மனதில்?" ராணியம்மாள் வருத்தமும், கோபமுமாய் கேட்டாள்.

"இதுல நினைக்க என்ன இருக்கும்மா? சாப்பிட பிடிக்கலே... அவ்வளவுதான்!" கைகளை துண்டால் துடைத்தபடி சொன்னாள் நந்தினி.

"நாளைக்கு ஆப்பம் செய்யட்டுமா?"

"சரி" என்றாள் சிரித்தபடி. தாயின் அன்பு நெகிழ வைத்தது. எதற்கு ஈடாக சொல்ல முடியும் இந்த அன்பிற்கு? தந்தையைவிட, சகோதரனைவிட, சகோதரியைவிட, ஏன், கணவன், மனைவியை விடவும் ஒருபடி மேலான எதிர்பார்ப்பில்லாத, சுயநலமில்லாத அன்பல்லவா தாயின் அன்பு!

தன் குழந்தை உறங்க கண்களை விளக்காகவும், கைகளை தொட்டிலாகவும் ஆக்கி வளர்ப்பவளாயிற்றே தாய்!

இப்படிப்பட்ட அன்பான தாயை திருமணம் என்ற பெயரில் பிரியவேண்டியிருக்கிறது! அதேசமயம் தாயை பிரியமுடியாது என்று திருமணத்தை மறுக்க முடிகிறதா?

திருமணம் ஒரு புறாக்கூடு. உள் இருப்பவர் வெளியே வரவும், வெளியே இருப்பவர் உள்ளே வரவும் ஆசைப்படும் மாய உலகம். அந்த உலகத்திற்காக இந்தத் தாயை பிரியத்தானே வேண்டும்?



அப்படிச் சுற்றி, இப்படிச் சுற்றி திருமணம் வரை போய் நின்றது.

இப்போதே லேசுபாசாய் அவள் கல்யாணத்தைப் பற்றி வீட்டில் பேச ஆரம்பித்துவிட்டார்கள். அவர்கள் யாரையாவது தேடிப்பிடித்து கட்ட நினைப்பதற்குள் நாம் வீட்டில் நிலகனைப் பற்றிக் கூறிவிட வேண்டும்.

ஆனால், முழுக்க அவரைப் பற்றி, அவர் விருப்பம் பற்றி தெரிந்துகொள்ளாமல்... என்னத்தை கூறுவது? சலித்துக்கொண்டாள்.

அவள் எதை எண்ணி பயந்தாளோ... அதைப் பற்றிதான் அம்மாவும் பேச ஆரம்பித்தாள்.

தக்காளி சாதமும், ஆம்லெட்டும், இரண்டு சப்பாத்தியும் டப்பாவில் அடைத்து அவளிடம் கொடுத்தாள் ராணியம்மாள்.

"மிச்சம் வைக்காமல் சாப்பிடு! வயசுப்பொண்ணா, லட்சணமா, வயசுக்கேத்த மாதிரி சாப்பிடாததானே வாக்கப்படற எடத்தில பெத்தவங்களை குறை சொல்லாமல் இருப்பாங்க?"

"அதிகமா உடம்புல எடைகூடினா இரத்த அழுத்தம் அது இதுன்னு கண்ட நோய்களும் இடம்தேடி உக்காந்துக்கும். பொண்ணுங்க ஒல்லியா இருந்தாதான் அழகு!

"அழகுப் போட்டி, அழகுப் பாட்டினு தெருவுக்கு தெரு போட்டி வைச்சா... ஏன்டியம்மா பேசமாட்டிங்க? சமூகம் ரொம்பதான் கெட்டுப்போச்சு. எங்க காலத்துல கணுக்கால் தெரிய சேலை கட்டினா... முதுகுல நச்சுனு ரெண்டு வைப்பா உங்க பாட்டி. இப்ப என்னடான்னா... அஞ்சுபு உடம்புக்கு ரெண்டங்குல துணி போதும்னு ஆயிடுச்சு. கருமம்டா... சாமி!"

நந்தினி அம்மா தோளை கைகளால் வளையம் போட்டு கட்டிக் கொண்டாள்.

"கவலைப்படாதே... எனக்கு அந்த மாதிரி போட்டியில் எல்லாம் கலந்துக்கற எண்ணமில்லை!"

"பொண்ணுங்கன்னா... பூசினமாதிரி இருந்தாதான் அழகு. முருங்கைக்காய் மாதிரி இருந்தா காசநோய் வந்தமாதிரி அசிங்கமா இல்லே இருக்கு!"

"அடடா... என்னம்மா நீ? இன்னைக்கு முழுக்க இந்த பேச்சை விடமாட்டியா? இப்ப என்ன நான் பார்க்க காசநோயாளி மாதிரியா இருக்கேன்?"

"சேச்சே... என் ராசாத்தி... உனக்கென்னடி குறைச்சல்? முன்னைக்கு கொஞ்சம் இளைச்சிட்டியேன்னுதான்... நானில்லே... சந்திரன்தான் வருத்தப்பட்டு சொன்னான்!"

"சந்திரன்? அவர் எப்போ என்னைப் பார்த்தார்?" ஆச்சரியமாய் கேட்டாள்.

"தினமும் பஸ் ஸ்டாண்ட்ல உன்னை பாக்கறதுக்காகவே வர்றானாமே! நீ பார்க்கலியா?"

"அப்படி தினமும் மறைந்திருந்து பார்க்கும் மர்மம் என்னம்மா?" ராகமாய் பாட.....

"அசூரி... தெரிஞ்சும் தெரியாத மாதிரி கேட்டா நான் என்னத்தை சொல்றது? உன் முறைப்பையன் அவன்... எதுக்காக பார்க்க வர்றான்னு தெரியாதா?"

"அம்மா... தயவுசெய்து இந்த முறைப்பையன், முறைக்கிற பையன்னு பேச்செல்லாம் பேசாதே!"

"என்னடி சொல்றே?"

"நீ எந்த அர்த்தத்துல சொல்றியோ, உங்க அண்ணன் மகன் எந்த அர்த்தத்துல பார்க்க வர்றாரோ... அதே அர்த்தத்தோட இதுமாதிரி கனவு காண வேண்டாம்னு சொல்கிறேன்!" நந்தினியின் முகம் சிவந்து போனது.

"நந்தினி... ஏன்டி இப்படியெல்லாம் பேசறே? எனக்கு பயமா இருக்குடி... நீ பிறந்ததிலேர்ந்து நீ சந்திரனுக்குன்னு முடிவு பண்ணிய விசயமாச்சே?"

"யாரைக் கேட்டு பண்ணினே? என்னைக் கேட்டியா?"

"குழந்தைக்கிட்டே போய் இதைக் கேப்பாங்களா?"

"இப்பவும் தான் குழந்தை இல்லையேம்மா! நல்லது கெட்டது எதுன்னு புரியற வயசு. தன்னம்பிக்கையும், உலகத்தை எந்த வழியிலும் எதிர்கொண்டு வென்றுவிடுவேன் என்கிற நம்பிக்கையும் உள்ள வயசு வந்தாச்சம்மா! எனக்கு எது வேணும்... வேணாங்கறதை தீர்மானிக்கிற பக்குவமிருக்கும்மா...!"

"அப்ப... சந்திரனை வேணாங்கறியா?"

"ஆமாம்...!" அழுத்தமாய் சொன்னாள்.

"அவன் உன்மேல ரொம்ப ஆசை வைச்சிருக்கான்டி!"


"எனக்கில்லையேம்மா!"

"அதான் ஏன்?"

"அது இயல்பா வரணும்மா! அடிச்சி வரவழைச்சிட முடியாது."

"அவனுக்கென்னடி குறைச்சல்? எங்கண்ணனுக்கு ஒரே பையன். அழகில்லையா? பணமில்லையா? வங்கியில் உத்தியோகம்... இன்னும் என்னடி வேணும்?" கோபத்தில் அம்மாவின் முகம் இரத்தமாய் சிவந்தது.





"பொய்... வாய் நிறைய பொய் பேசறவர்! ஒரு சின்ன விசயத்துக்கு கூட பத்து பொய் சொல்லி சமாளிக்கப் பார்க்கிறவர். போற வர்ற இடத்துலேர்ந்து சின்ன சின்ன பொருட்களை திருடி பாக்கெட்ல போட்டுக்கிட்டு வர்ற பழக்கம்... இன்னும் போகலியே...!"

"அது ஒரு நோய்ன்னு வைத்தியர் சொன்னார்."

"அப்படிப்பட்ட நோயாளி எனக்குத் தேவையில்லேம்மா... நேரமாகுது... நான் வர்றேன்!"

நந்தினி படியிறங்கி போய்விட்டாள்.

வாயடைத்து நின்றிருந்தாள் ராணியம்மாள்!

அவள் மனக்கோட்டை சரிந்து விழுந்ததில் கண்கள் பனித்தன. சந்திரனுக்கு, நந்தினியை கட்டிவைத்துவிட வேண்டும் என்பதில் இரு வீட்டாருக்கும் பல கால கனவு. ஆனால், இந்த விசயத்தில் நந்தினியின் தகப்பனார் சோமசுந்தரத்துக்கு உடன்பாடில்லை என்றுதான் சொல்லவேண்டும். நந்தினி அவருக்கு செல்ல பெண்.

"சொந்தத்தில் மாப்பிள்ளை பார்க்க வேண்டாம் ராணி! விஞ்ஞான பூர்வமா அது சரியில்லை. அப்படி கல்யாணம் பண்ணிக்கிட்டா, பிறக்கிற குழந்தைங்க ஊனமா பிறக்கும்னு ஆய்வு சொல்லுது! எல்லாத்துக்கும் மேல நீ பிடிவாதமா நின்னாலும், நந்தினியின் விருப்பம் தான் முதலில்! அதன் பிறகுதான் இந்த கல்யாணப் பேச்செல்லாம் எடுக்கணும்... புரியுதா?" என்று அடிக்கடி கீறல் விழுந்த ரெக்கார்டாய் புலம்புபவர் ஆயிற்றே... அவரிடம் இதை சொன்னால் வானத்துக்கும் பூமிக்குமாய் மகிழ்ச்சியில் குதிப்பவராயிற்றே இந்த மனுசன்!"

மனம் வெதும்பியது ராணிக்கு!

## 4

"திலகா... என்னடா இது... கண்ணெல்லாம் உள்வாங்கி, குழி விழுந்து பேயறைஞ்சவன் மாதிரி இருக்கே! உடம்புக்கு என்னடாப்பா பண்ணுது? வேப்பிலையும், மிளகையும் இடித்து கசாயம் வைச்சு தரட்டுமா?" மீனாட்சி பாட்டி திலகனை கவலையாய் பார்த்தாள்.

கொல்லென்று தும்பைபூவாய் நரைத்திருந்த தலை. சுற்றி வளைத்து செருகியிருந்த கண்டாங்கிச்சேலை ஆயாசமும், களைப்பும் தெரிந்தாலும், பாசமும் கருணையும் விஞ்சித் தெரிந்த கண்கள். மகளையும், கணவனையும் அடுத்தடுத்து எமனுக்கு வாரிக் கொடுத்துவிட்டு வாழ்க்கையில்



பிடிப்பின்றி இருந்தவளுக்கு ஒவ்வொரு நாளின் விடியலும் அர்த்தமனமாய் இருந்தவன் திலகன் மட்டும்தான்.

பேரனின்றி ஒரு அணுவும் அசையாது அவளுக்கு. ஒரு வரியில் சொல்வதானால், கதையில் வரும் மந்திரவாதியின் உயிர் ஏழு மலை தாண்டி, கடல் தாண்டி சிறு வண்டுக்குள் இருப்பது போல், பாட்டியின் உயிர் திலகனிடம்தான் இருந்தது.

திலகன் பாட்டியைப் பார்த்து பெருமையாய் சலித்துக்கொண்டான்.

"அடடா... தும்மினால் கூட கசாயம் வைச்சு கொடுத்துடணுமா? பாட்டிம்மா... எனக்கு ஒண்ணுமில்லே... இரவெல்லாம் தூங்கவே இல்லே..."

"அய்யோ... ஏன்டாப்பா... உன் காய்ச்சல் அடிச்சாக்கூட இப்படித் தான் தூக்கம் வராம உடம்பு படுத்தும்... டாக்டர்கிட்டே போய் வரலாமா ராசா?"

திலகன் தலையில் அடித்துக்கொண்டான்.

"சும்மாயிரு பாட்டி... எனக்கு ஒண்ணுமில்லே!"

மீனாட்சி பேரனை அங்குலம் அங்குலமாக பார்வையால் அளவெடுத்தாள்.

என்னமாய் வளர்ந்துவிட்டான்? அவன் அம்மா இருந்திருந்தால்... எப்படி சந்தோசப்படுவாள்? புள்ளை மனசுல எதையோப் போட்டு குழம்பி தவிக்கிறான். என்னதான் தாயானாலும், பாட்டியானாலும், பொண்டாட்டிக்கிட்டே தன்னோட சுக துக்கங்களை பங்கு போட்டுக் கிட்டா கிடைக்கிற நிம்மதியே தனிதான். திலகனுக்கும் வயசாகிட்டேப் போகுது. சீக்கிரம் வர்ற தைக்குள்ள முடிச்சிடணும்!"

"என்ன அப்படிப் பாக்கறே? விட்டா அப்படியே ஆளை விழுங்கி தண்ணி குடிச்சிடுவே போலிருக்கே!"

"பேசமாட்டே பின்னே? உன் கொட்டத்தை அடக்க சீக்கிரமே இந்த வீட்டுக்கு ஒரு 'சீமை பசுவை' கொண்டுவரப் போறேன்!"

"போ... பாட்டிம்மா... இவ்வளவு சீக்கிரம் எனக்கு கல்யாணம் வேணாம்!" வெட்கமாய் மறுத்தான்.

"பிள்ளையடிக்காமல் இடி இடிக்குமா? வாய்தான் பேசுது. டேய் படவா... உன்னைபத்தி உன்னைவிட எனக்குத்தான் நல்லாத் தெரியும். இரவெல்லாம் வயசு புள்ளைக்கு தூக்கம் வரலேன்னா... என்ன அர்த்தம்?"

"ஒரு அர்த்தமுமில்லே... எனக்கு கல்யாணத்துக்கு அவசரமுமில்லே... இன்னும் நாலைஞ்சு வருடம் போகட்டும்!"

"விளைவது அரிசியானாலும், உமி போனால் விளையாது திலகா! அதது நடக்கவேண்டிய நேரத்துல நடந்தாதான் மதிப்பு!"

திலகன் பாட்டியை மேலும் சீண்டிப் பார்க்க ஆசைப்பட்டான்.

"அரிசி விளையணும்னு கட்டாயமா என்ன?"

"வீண் இழவாம் வெங்காத்தானாம்... பிடுங்க பிடுங்க பேரிழவாம்... அப்படி இருக்கு உன் பேச்சு. என் வம்சம் உன்னோட முடிஞ்சி போயிடணுமா ராசா? நான் என்னவெல்லாம் மனக்கோட்டை கட்டி வைச்சிருக்கேன்னு தெரியுமா உனக்கு? ஏன்டா, இப்படி அபசகுனமா பேசறே? அதனால இந்த கிழவி மனசு என்ன பாடுபடும்னு தெரியுமா உனக்கு?" மீனாட்சியின் குரல் கம்மியது.

விட்டால் ஒரு பாட்டம் ஒப்பாரி வைத்துவிடுவாள் போல் தோன்றியது.

"அடடா... என்ன பாட்டிம்மா இது? இதுக்கெல்லாமா கலங்குவாங்க? சரி... போனாபோகட்டும்... உனக்காக நல்லா கவனி... உனக்காக இப்ப கல்யாணம் பண்ணிக்க சம்மதிக்கிறேன். ஆனால், நான் எதிர்பார்க்கிற அத்தனை தகுதியும் அந்த பொண்ணுகிட்டே இருந்தாதான் பண்ணிப்பேன்...!"

உச்சி குளிர்ந்தது மீனாட்சிக்கு.

"இந்த மட்டுமாவது சம்மதிச்சியே... சந்தோசம்டா திலகா. சொல்லு எப்படி எதிர்பார்க்கிறே?"

பொங்கிவந்த சிரிப்பை அடக்க சிரமப்பட்டு தொண்டையை செருமி விழுங்கிக்கொண்டான்.

"பொண்ணு ரொம்ப அழகா இருக்கணும். பெரிய பணக்கார அப்பனுக்கு ஒரே மகளா இருக்கணும். படிப்பு ஓரளவு இருந்தா போதும். பட்டதாரியா இருக்கக்கூடாது. பணக்காரியா இருந்து படிச்சவளாவும் இருந்துட்டா... நம்ம பேச்சுக்கு அடங்கமாட்டா! உன்னைவிடவும் நல்லா சமைக்கத் தெரியணும்!"

"அப்ப நான் நல்லா சமைக்கலேன்னு சொல்றியா?"

"எல்லாத்தையும் வெளிப்படையா சொல்ல முடியுமா பாட்டிம்மா?"

பேரனின் குறும்பு புரிய... ஒரு முறைப்பு முறைத்துவிட்டு, "சரி... சொல்லு!" என்றாள்.

"மாடர்ன் டிரஸ் தவிர வேறு எதையும் போடக்கூடாது...!"

"அட.... அப்புறம்?"

"மீதி... யோசிச்சி அப்புறமா சொல்றேன்!"



"அது...சரி...!"

"என்ன அலுத்துக்கறே?"

"இதெல்லாம் கண்டிசனா? வெடிகுண்டா?"

"ஏன் பாட்டி அப்படிச் சொல்றே?"

"பின்னே என்னடா? வீட்டுக்கு விளக்கேத்த குத்துவிளக்கை கேட்டா... நீ அலங்கார விளக்கையல்லவா கொண்டுவரச் சொல்றே! ஒன்னை மட்டும் நல்லா புரிஞ்சுக்க திலகா... வடக்கு பார்த்த மச்சு வீடு காட்டிலும், தெற்கு பார்த்த குச்சு வீடு நல்லது!"

"அப்படீங்கறே?"

"ஆமாண்டா ராசா!"

"சரி... உனக்காக என் முடிவை மாத்திக்கறேன். உன் ரேஞ்சுக்கு ஒரு பொண்ணை பார்த்துடுவோம்!"

"அந்த பொறுப்பை என்கிட்டே விட்டுடு. எப்பேர்ப்பட்ட பொண்ணை தேடிப் பிடிக்கறேன் பார்!"

"அய்யோ... பாட்டி! வயசான காலத்துல உனக்கு ஏன் சிரமம்? அதெல்லாம் நானே பார்த்துக்கறேன்!" அலறினான் திலகன்.

மீனாட்சி பேரனை உற்றுப் பார்த்தாள்.

"திருட்டுப் பயலே... எனக்கே காது குத்தறியா! எல்லாம் பார்த்து முடிச்சிட்டியா?"

"சேச்சே..."

"என்ன சேச்சே?"

"பார்த்துக்கிட்டே இருக்கேன்!" என்றவன் ஒரே ஓட்டமாய் மொட்டை மாடிக்கு ஓடிப் போனான்.

மனம்கொள்ளா மகிழ்வோடு தன் பேரனை தொடர்ந்து விரட்ட முடியாமல்... மூச்சுவாங்க நின்றுவிட்டாள் மீனாட்சி!

**ப**ளிச்சென்று சிரித்துக்கொண்டிருந்த கண்கள் நீர்க்கமான நாசியில் ஒற்றைக்கல் மூக்குத்தி. சிரிப்பை அடக்கவோ, மறைக்கவோ சற்றே இறுக்கமாக உதடுகளை மூடியதாலோ என்னவோ... இரண்டு கன்னங்களிலும் லேசாய் குழிவிழ... நாலு சட்டத்திற்குள் அடைபட்டிருந்த நர்மதாவின் போட்டோவிற்கு சந்தன மாலை போடப்பட்டிருந்தது. அணையாவிளக்கு எரிந்துகொண்டிருந்தது.

மீனாட்சி போட்டோவிலிருந்த மகளையே இதயம் கனக்க பார்த்தாள்.

'சாகக்கூடிய வயசாம்மா உனக்கு? எதையும் அனுபவிக்கப்

பார்க்காமல் போய் சேர்ந்துட்டியே கண்ணம்மா! நம்ம திலகனைப் பார்த்தியா? உன்னை மாதிரியே குறும்பு பேச்சு, பிடிவாதம், துறுதுறுப்பு... எல்லாம் அவன்கிட்டேயும் இருக்கு! அம்மான்னு அவன் வாயால் ஒரு வார்த்தை உன்னை கூப்பிடுமுன்பே... கூட்டிச்செல்ல அந்த எமனுக்கு எப்படி மனசு வந்தது? முன்னே மாதிரி உடம்பு நான் சொல்றதை கேக்கறதில்லே! ஒரு சின்ன அதிர்ச்சியைகூட மனசு தாங்கிக்க மாட்டேங்கிறது. எங்கே... திலகனுக்கு ஒரு நல்ல வழிபண்ணாமல் போய்டுவேனோன்னுதான் கவலையா இருக்கு! அவன் யாரையோ மனசுல நினைச்சு மருகிட்டிருக்கான். உன் புள்ளைக்கு, தெய்வமா, பக்கபலமா நின்னு அவன் மனசுப்படி நல்லதை நடத்தி வைச்சிடு நர்மதா!'

"என்ன? அம்மாகிட்டே என்னைப் பத்தி கோள்மூட்டிட்டு இருக்கியா? ரொம்ப நேரமா முணுமுணுன்னு உனக்கு நீயே பேசிட்டிருக்கே?" திலகன் பாட்டி பின்னே வந்து நின்றான்.

"போடா... போக்கிரி! உனக்கு எல்லாமே விளையாட்டுதான். வா... நேரமாகலே... சாப்பிடுவே...!"

"கொண்டுவா விசத்தை!"

"டேய்...!"

"உன் சமையலை சொன்னேன் பாட்டி!"

"வரவர ரொம்ப கிண்டல் பண்றே! பார்த்துட்டே இரு! ஒரு நாளைக்கு சாப்பாட்டுல பேதி மாத்திரை கலந்து கொடுக்கத்தான் போறேன்!"

"முதல்ல அதை செய்! உன் சமையலை சாப்பிட்டு வயிறே கெட்டுப்போய் கிடக்கு. சுத்தமாக்கும் ஆகும். செய்... செய்!"

"திமிர்... திமிர்!"

"பரம்பரைச் சொத்தாச்சே! என்ன டிபன்? வழக்கம் போல இட்லி, வடை, சாம்பார்தானா?"

"கூடுதலா ரவை பொங்கலும் பண்ணியிருக்கேன் ராசா!"

"செத்தேன் போ!"

"வாயிலேயே போடுவேன். எப்ப பார்த்தாலும் விசம், சாவு, கொலைன்னு! நல்ல வார்த்தையே வராதா?"

"நெருப்புன்னா... வாய் சுட்டுடுமா? இந்த வீட்ல விளையாட, பேச, நாலஞ்சு பேரா இருக்காங்க? உன்னைவிட்டா வேற யார் இருக்கா? இதே மாதிரி விளையாட்டா, உன்னை தவிர வேற யார்கிட்டே பேசவேண்டு? போ... எல்லாத்துக்கும் கோவிச்சுக்கறே... நான் பேசவேபோறதில்லே!"



"டேய்... டேய்... அப்படியெல்லாம் பேசாதேடா! என்கிட்ட பேசாம மட்டும் இருந்துடாதே கண்ணா!" உதடுகள் துடிக்க விழியோரம் ஈரம்கசிந்தது.

நெகிழ்ந்துபோனது திலகனுக்கு.

"சாரி... சாரி... பாட்டியம்மா! சிரி... சிரிக்கமாட்டியா! சரி... நான் அப்படி பேசினதுக்கு நானே எனக்கு தண்டனை கொடுத்துக்கிறேன். அந்த ரவை பொங்கலை நிறைய போடு... ஆயுள் தண்டனையைவிட மோசமான தண்டனையல்லவா... இதை சாப்பிடுவது!" முகத்தை பரிதாபமாக வைத்துக்கொண்டான்.

பாட்டியம்மாள் செல்லமாய் முதுகில் ஒரு அடி அடித்தாள்!

## 5

பேருந்து நிலையத்தில் கூட்டம் அதிகமிருந்தது. பள்ளி கல்லூரிக்கு செல்வோர், அலுவலகம் செல்வோர் தவிர, மீன் கூடைகளுடனும் ஏழெட்டு பேர் பஸ்ஸிற்காக காத்திருந்தனர்.

ஆகாய நீலத்தில் கறுப்பு பூக்களிட்ட காட்டன் சேலை, ஆகாய நீலத்தில் ரவிக்கை. பின்னலிட்ட கூந்தலில் கும்மென்று வாசனைபரப்பி இடம்பிடித்திருந்த மல்லிகை! லேசாய் பவுடர் பூசப்பட்ட முகம், மஸ்காரா உபயத்தில் பட்டாம்பூச்சியாய் படபடத்த இமைகள், பட்டும்படாமல் ஒற்றியெடுக்கப்பட்டது போல் உதட்டு சாயம்! சின்னதாய் நீலநிற ஸ்டிக்கர் பொட்டு! எளிய தேவதையாய், பஸ்ஸிற்காக காத்திருந்தாள் நந்தினி! எல்லாவற்றையும் மீறி கவலையும், குழப்பமும் கண்களில் எட்டிப்பார்த்தன.

அன்றைய சம்பவத்திலிருந்து அம்மா அவளிடம் சரிவர பேசுவதில்லை.

'சாப்பிட வா! இந்த பொரியல் வைக்கவா? டிபனில், இட்லியும், மிளகாய்பொடியும், தேங்காய் சாதமும் வைத்திருக்கிறேன்' அவ்வளவு தான். அதற்குமேல் பேசினால் பாவம் என்பது போல் தனித்திருந்தாள். முகத்தை தூக்கி முதுகில் வைத்துக்கொண்டாள். அப்பா எதையும் தெரிந்தது போல் காட்டிக்கொள்ளாமல் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தார்.

ஆனால், இவளுக்கடுத்த இரண்டு தங்கைகளும் இவளை குற்றவாளியாக்கி கேள்வி கேட்டனர்.

"அத்தானை கட்டிக்க மாட்டேன்னு சொல்லிட்டியாமே! உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு?" என்றான் யோகா. முழுப்பெயர் யோகநந்தினி. கல்லூரியில் இறுதி ஆண்டு படித்துக் கொண்டிருப்பவள்.

நந்தினியின் முழுப்பெயர் உஷாநந்தினி. அவளை கண்ணாடி முன் நிற்கவைத்தால்... எதிர்ப்படும் பிம்பம்தான் யோகா! ஒரே உருவ அமைப்புக் கொண்ட இரட்டையர். ஒரு மணி நேர பிறப்பின் இடைவெளியே யோகாவை தங்கையாக்கிவிட்டது. சற்று வித்தியாசம் உணரமுடியாத ஆச்சரியமான 'வித்தியாசமான உருவ ஒற்றுமை. ஆனால் இரட்டையருக்கே உரிய குணாதிசயங்கள் இவர்களிடம் இல்லை. இவளுக்கு காய்ச்சல் வந்தால் அவளுக்கும் வரும் என்று சொல்ல முடியாது.

பெற்றவர்கள் இதில் யார் நந்தினி, யார் யோகா? என்பதறிய யோகாவிற்கு முதுகுவரை கூந்தலை கத்தரித்துவிட்டிருந்தனர். அதுமட்டுமே அவளை இனம்பிரித்துக் காட்டியது.

யோகா கொஞ்சம் வித்தியாசமானவள். மனதில்பட்டதை பட்டென்று வெளிப்படுத்திவிடும் குணம்.

இடுப்பில் கைவைத்து நந்தினியை முறைத்துப் பார்த்தாள்.

"சந்திரன் அத்தானுக்கு என்ன குறைச்சல்! அவரைப் போய் வேண்டாம்னு சொன்னா, சந்தேகமில்லாம உனக்கு பைத்தியம் பிடிச்சிருக்குன்னு சத்தியம் பண்ணி சொல்வேன். ஏன்டி, லவ்வு, கிவ்வுனு எதுலயாவது மாட்டிக்கிட்டியா? ஒன்னை சொல்றேன் கேட்டுக்க... நீ விரும்பற ஆளைவிட, உன்னை விரும்பற ஆள்தான் வாழ்க்கைக்கு தேவைன்னு... அன்றைய ராமசாமியிலேர்ந்து, இன்றைய ரஜினிகாந்த் வரைக்கும் சொல்லியிருக்காங்க. கொஞ்சம் நிதானமா யோசி நந்தினி! சந்திரனுக்கு என்ன குறைச்சல்? பார்க்க, பழக, எல்லாத்துலேயும் பாஸ் மார்க் வாங்கற பர்சனாலிட்டி!"

"இதப்பார் யோகா! வாழப்போறவள் நான்! இதுல மூணாவது நபரோட ஆலோசனைக்கே இடமில்லே. சந்திரனை பிடிச்சிருந்தா... நீயே கல்யாணம் பண்ணிக்கலாமே! அதைவிட்டுட்டு இப்படி என் உயிரை வாங்கவேண்டாம்!" சிடுசிடுத்தாள் நந்தினி.

யோகா நந்தினியை பார்த்து பெருமூச்சுவிட்டாள்.

"நான் ரெடி நந்தினி! என் வரையில் என் வாழ்க்கையில் காதல் கத்தரிக்காய்க்கெல்லாம் இடமில்லை. அப்பா, அம்மா பார்த்து இவன்தான் உன் கணவன், கழுத்தை நீட்டுனு சொன்னா, மறுபேச்சில்லாமல் நீட்டி தாலியை வாங்கிப்பேன். அதுக்காக காதலை நான் வெறுக்கலே. நான் காதலிக்கமாட்டேனே தவிர,





# ஆண்மை குறைவு, நரம்பு தளர்ச்சி

[illegible]

பாண்டிச்சேரி டாக்டர் N. தர்மராஜன் அவர்களின்

ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு – பாண்டிச்சேரி சுற்றுப்பயண விவரம்:

| | | | |
|---|---|---|---|
| சென்னை விஜயம் பிரதி மாதம் 1-ந் தேதி ஹோட்டல் இம்பீரியல் எக்மோர் ரயில் நிலையம் எதிரில் | காஞ்சிபுரம் விஜயம் பிரதி மாதம் 2-ந் தேதி ராஜன்ஸ் லாட்ஜ் நெல்லுக்காரத் தெரு | வேலூர்(N.A.) விஜயம் பிரதி மாதம் 3-ந் தேதி [illegible] லாட்ஜ் (அனெக்ஸ்) S. K. V. S. செட்டித் தெரு | ஒசூர் விஜயம் பிரதி மாதம் 4-ந் தேதி காலை ஸ்ரீநிவாசா லாட்ஜ் பாகலூர் ரோடு |
| திருவண்ணாமலை பிரதி மாதம் 4-ந் தேதி மாலை ஹோட்டல் ஆகாஷ் பஸ் ஸ்டாண்டு எதிரில் | சேலம் விஜயம் பிரதி மாதம் 7-ந் தேதி [illegible] லாட்ஜ் பழைய பஸ் ஸ்டாண்டு அருகில் | ஈரோடு விஜயம் பிரதி மாதம் 8-ந் தேதி ஹோட்டல் கல்யாண் லாட்ஜ் மேட்டூர் ரோடு | கோவை விஜயம் பிரதி மாதம் 9-ந் தேதி ஹோட்டல் சோனா காந்திபுரம் |
| தூத்துக்குடி பிரதி மாதம் 12-ந் தேதி மாலை ராஜா லாட்ஜ் முனிசிபல் ஆபீஸ் எதிரில் | திருநெல்வேலி விஜயம் பிரதி மாதம் 13-ந் தேதி நெல்லை லாட்ஜ் [illegible] | நாகர்கோவில் பிரதி மாதம் 14-ந் தேதி ஹோட்டல் [illegible] ஹெட் போஸ்ட் ஆபீஸ் அருகில் | மதுரை விஜயம் பிரதி மாதம் 15-ந் தேதி காலை [illegible] டவுன்ஹால் ரோடு |
| தேனி விஜயம் பிரதி மாதம் 15-ந் தேதி மாலை ராஜா லாட்ஜ் மதுரை ரோடு | காரைக்குடி பிரதி மாதம் 17-ந் தேதி P.S.R. லாட்ஜ் பழைய பஸ் ஸ்டாண்டு எதிரில் | தஞ்சாவூர் விஜயம் பிரதி மாதம் 18-ந் தேதி அசோக் லாட்ஜ் [illegible] | திருச்சி விஜயம் பிரதி மாதம் 19-ந் தேதி ஹோட்டல் [illegible] திருவள்ளுவர் பஸ் ஸ்டாண்டு எதிரில் |

பாண்டிச்சேரி [illegible] பிரதி மாதம் 5, 6, 10, 15 மற்றும் 25-ந்தேதி முதல் 31-ந்தேதி [illegible]

ஒரு மாத சிகிச்சை கட்டணம் ரூ. 2100, 1250, 900, 500, 300. [illegible]

டாக்டர் N. தர்மராஜன் வைத்தியசாலை

278, [illegible]

காதலிக்கிறவங்களை ஆதரிப்பேன்..."

"பிச்சிக்கனும் போலிருக்கு!" நந்தினி தலையைப் பிடித்துக் கொண்டாள்.

"இன்னும் நான் பாயிண்ட்டுக்கே வரலே! சந்திரன் அத்தான் என்னை கல்யாணம் பண்ணிக்க ஆசைப்பட்டா... நான் மறுக்க மாட்டேன். ஆனா, நாம ரெண்டு பேரும் அச்சுல வார்த்தது போல ஒரே மாதிரி இருந்தாலும் சந்திரன் விரும்பறது உஷாநந்தினியைத் தான். இந்த யோகாவை இல்லை! இதுலேர்ந்து உனக்கு என்ன புரியுது? சந்திரன் கண்ணுக்கும் கருத்துக்கும் உன் உள்ளம்தான் கவர்ந்திருக்கு! பாவம்டி... அத்தானை ஏமாத்தாதே!"

"ஆமாக்கா... அத்தான் ரொம்ப நல்லவர். அவரையே கல்யாணம் பண்ணிக்கக்கா!"

அதுவரை பொறுமையாய் புத்தகங்களை பைக்குள் அடுக்கி வைத்துக்கொண்டிருந்த பத்தாம் வகுப்பு படிக்கும் ரோகிணி வாயைத் திறந்தாள். வீட்டிற்கு கடைக்குட்டி.

"வாயை மூடு! மூளைச்சி மூணு இலை விடல்லே... அதுக்குள்ளே என் கல்யாணத்துக்கு அட்வைஸ் பண்ண ஆரம்பிச்சிட்டியா?" நந்தினியின் கோபம் அதிகமானது.

"மூணு இலை என்ன... அதுக்கு மேலேயே விட்டாச்சு. பெரியவளாகி ரெண்டு வருடம் ஆயாச்சு. அதை நினைவுல வச்சுக்கோ..." கொஞ்சமும் அலட்டிக்கொள்ளாமல் புத்தகப் பையை எடுத்துக்கொண்டு புறப்பட்டாள்.

போகும்முன் திரும்பிப் பார்த்து, "எதுக்கும் நான சொன்னதை நிதானமா யோசிச்சி பாரு!"

"பாரேன் திமிரை!" நந்தினி அடிக்க கையை ஓங்க... சிரித்தபடி வெளியேறிவிட்டாள்.

தொப்பென்று சேரில் அமர்ந்து டேபிளில் முகத்தை கவிழ்த்துக் கொண்டாள்.

"என்ன நந்தினி?" யோகா அவள் தோளைப் பற்றினாள்.

"பிளீஸ்... என்னை தனியா விடு..."

"ஆபீசுக்கு நேரமாகலை?"

"ஒரு மணி நேரம் தாமதமா போறதால ஒண்ணும் குடிமுழுகிடாது."

"இல்லை... பாவம் பஸ் ஸ்டான்ட்ல சந்திரன் காத்தி..."

"அடி செருப்பால..."

நந்தினி கத்திய கத்தலுக்கு அடுத்த நொடி அம்மா அருகே



நின்றிருந்தாள் யோகா.

தயாராய் இருந்த டிபன்பாக்சை எடுத்துக்கொண்டவள் அம்மா விடம், "சமையல் எல்லாம் முடிச்சாச்சா?"

"ம்... ஆச்சு... அப்பாவுக்கு ஒரு கப் காப்பி கொடுத்தேன்னா... நானும் சித்த உக்காந்து ஓய்வு எடுப்பேன்..." சேலை முந்தானையால் கழுத்தை துடைத்துக்கொண்டாள்.

"ரொம்ப சிரமப்படாதே! பாலை கொண்டுபோய் நந்தினி மேல வைச்சி எடுத்துட்டு வந்துடு... நொடியில் கொதிச்சிடும்..."

"என்னடி சொல்றே?"

"அவ்வளவு சூடா இருக்கான்னு சொல்றேன்!"

நந்தினி நெற்றியை பிடித்துக்கொண்டாள்.

ஒரு பெண்ணுக்கு திருமண வாழ்க்கை என்பது எத்தனை பிரச்சினைகளோடு தொடங்குகிறது? கட்டாயப்படுத்தி கட்டி வைத்துவிட்டால்... மனநிறைவோடு வாழ்ந்துவிட முடியுமா? ஏனோதானோவென்று மனசு ஒட்டாமல் காலம் முழுக்க வாழ்வதை விட, கண்ணுக்கும் கருத்துக்கும் இனியவரோடு கால்மணி நேரமாவது வாழ்ந்து முடித்தால் கூட போதுமே!

இத்தனை பிரச்சினைகளுக்கும் யார் காரணம்? திலகன்!

'ஏன் திலகன் இவ்வளவு தயக்கம்? உங்கள் மனதில் நானிருக்கிறேன் என்பது எனக்கு மிக நன்றாகவே தெரியும். அதை வெளிப்படுத்த காலதாமதம் ஏன்? இனி முடியாது திலகன்! வீட்டில் நம் காதலை தெரியப்படுத்தியாக வேண்டிய நிலையில் இருக்கிறேன். வேறு வழியில்லை. நானே முதலில் என் மனதை வெளிப்படுத்துகிறேன்!'

தீர்மானித்தாள் நந்தினி.

பரபரவென சுழன்று கொண்டிருந்தான் திலகன். வரிசையாய் தொலைபேசி அழைப்புகளும், 'பேஜர்' அழைப்புகளும் அவனை 'பேஜார்' பண்ணிக்கொண்டிருந்தன.

அலுவலகத்தில் நினைத்த நபர்களை அழைத்து உத்தரவுகளை பிறப்பித்துக்கொண்டிருந்தான்.

நந்தினி தன்னையே நொந்தவளாய் அவ்வப்போது நிமிர்ந்து பார்த்து அரைகுறை மனதாய் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தாள்.

இன்றைக்குப் பார்த்துதானா அந்த செய்தி வரவேண்டும்? கம்மாவே பிசி! அந்த செய்தி இன்னும் அதிகமாய் திலகனை பிசியாக்கிவிட்டது.

அழைக்கப்பட்டதால் மோகனும் அவன்முன் வந்து நின்றான்.

"சார்... அழைத்தீர்களாமே!"

"ஆமாம் மோகன்! உங்களுக்கும் விசயம் தெரிந்திருக்குமென்று நினைக்கிறேன்!"

"தெரியும் சார்! கல்கத்தா கிளையிலிருக்கிற நம்ம எம்.டி. முதன் முதலா இங்கே வரப்போகிறார்!"

"அவரைப்பத்தி தெரியவில்லை... அவர் நம்ம பாஸோட ஒரே மகன்!"

"தெரியும் சார்! ஆனால், எப்பவும் வராதவர் இப்ப எதுக்காக இங்கே வர்றார்னு தெரிஞ்சுக்கலாமா?"

"பாஸோட செயலாளர் போனில் சொன்ன செய்தி இது. எந்தளவு உண்மையென்று தெரியவில்லை. பாஸ் குடும்பத்தோட இன்னும் ரெண்டு வருடத்துல இந்தியாவிலேயே அதுவும் சென்னையிலேயே வந்து செட்டிலாகப் போகிறாராம்!"

"சரி...!"

"அதனால கல்கத்தா கிளையில் உள்ள தன் மகனை நம்ம கிளைக்கு அனுப்பி பொறுப்பேற்றுக்கொள்ளச் சொல்லியிருக்கிறார். ஆனால், அவருக்கு இங்கே வருவதில் அவ்வளவாய் நாட்டமில்லை. அநேகமாய் ஒரு சுற்றுப்பயணம் போல் இங்கே வந்துவிட்டு உடன் போய்விடுவார் என்றே கேள்விப்பட்டேன்!"

"அப்படியா?"

"அவருடன் சில நண்பர்களும் உடன் வருகிறார்கள். இன்னும் இரண்டு நாளில் வந்துவிடுவார். ஓட்டல் 'ரெசிடென்சி'யில் நாலைந்து அறைகள் ஒதுக்கச் சொல்லியிருக்கிறேன். தயவுசெய்து அங்கே சென்று, வசதியும், பாதுகாப்பும் போதுமான அளவிற்கு இருக்கிறதா என்று பார்த்துவர முடியுமா மோகன்!" தயவாய் கேட்டான் திலகன்.

"நிச்சயமாய்! ஆனால் ஒரு கேள்வி! அடையாறில் அரண்மனை கணக்காய் பெரிய பங்களா இருக்கும்போது எதற்கு ஓட்டலில் அறை ஏற்பாடு செய்ய வேண்டும்?"

"கட்டப்பட்டதோடு சரி! இதுவரை அந்த பங்களாவில் யாரும் வசித்ததில்லை. சுத்தம் செய்ய ஆட்களை அனுப்பியிருக்கிறேன். அந்த வேலை முடிய நாலைந்து நாட்களாகும். எம்.டி. வருவது குறித்த செய்தி இன்றுதானே கிடைத்தது! வேறென்ன செய்ய முடியும் சொல்?" அலுப்பாய் சொன்னான்.

மோகன் திலகனருகே குனிந்து அவனுக்கு மட்டுமே கேட்கும்படி கேட்டான்.

"நந்தினி முகமே சரியில்லையே... ஏன்?"



# மூக்குத்தி பரிசு பெற்றவர்கள்!

"ராணி முத்து" வாசகர்களுக்கு நாள்தோறும் வெள்ளைக்கல் மூக்குத்தி பரிசு வழங்கப்படும் என்று அறிவித்திருந்தோம்.

ஆயிரக்கணக்கான வாசகர்கள் மூக்குத்தி கேட்டு பரிசு கூப்பன் அனுப்பியிருந்தார்கள். குலுக்கல் முறையில் அன்றாடம் ஒரு வாசகர் தேர்ந்து எடுக்கப்பட்டார். செப்டம்பர் 1 முதல் 15 வரை மூக்குத்தி பரிசுபெற்ற அதிருஷ்டசாலிகள் விவரம் வருமாறு:–

1. வீ. அருள்ஜோதி, உடையார்குடி.
2. ஜே. ஜெயா, ஓட்டப்பிடாரம்.
3. சுகந்தா ஜெயராமன், அகமதாபாத்.
4. ஏ. டெய்சி, மதுரை.
5. எஸ். ஜோதி, கடலூர்.
6. மு. வாணி, சங்கரன்கோவில்.
7. கீதா ராஜாமணி, மும்பை.
8. பி. மீனாகுமாரி, கோவில்பட்டி.
9. எம். லெட்சுமி, சென்னை.
10. எஸ். மெகந்திபாரதி, களங்கம்.
11. பாலாம்பாள், புவனகிரி.
12. எஸ். கீதா, பட்டுக்கோட்டை.
13. அ. காயத்ரி, சந்தவாசல்.
14. ப. அம்சவதி பலராமன், சத்துவாச்சேரி.
15. கோ. லெட்சுமி, சிறுமயங்குடி.

(பரிசு கூப்பன் 43–ம் பக்கம்)

"தெரியவில்லை...!"

"பேசிவிட்டாயா?"

"எதை?"

"பாட்டி வடை சுட்டாளே அதை!"

"டேய்...!"

"பின்னே என்னடா? தெரியாதது போல் கேட்டாயானால் உதைதான் விழும். சொல்லிவிட்டாயா?"

"ப்ச...!"

"ஏன்?"

"பயமாய் இருக்கிறது!"

"சத்தியமாய் சொல்கிறேன்..."

"................"

"நீ ஆண்பிள்ளையே இல்லை!"

அடுத்த நிமிடம் மோகன் அங்கு இல்லை!

அவன் சொல்வதை எல்லாம் குறிப்பெடுத்துக்கொண்டாள்.

"அவ்வளவுதான் மிஸ் நந்தினி! இந்த கடிதத்தை உடனடியாக கம்ப்யூட்டரில் பதிவுசெய்துவிடுங்கள். நான் கேட்ட 'கோப்புகள்' தயாராக இருக்கிறதா?"

"தேதிவாரியாக அடுக்கி வைத்திருக்கிறேன் சார்!"

"நல்லது! எம்.டி. பார்க்க வசதியாக இருக்கும். அவருக்காக ஏற்பாடு செய்யப்பட்ட அறையில் ஏ.சி. எல்லாம் ஒழுங்காக வேலை செய்கிறதா என்று பார்த்துவிட்டு வருகிறேன்... நான் சொன்ன கடிதத்தை தயார் செய்து வைத்துவிடுங்கள்" என்று எழுந்தவன், திரும்பி நடந்த நந்தினியை, "ஒரு நிமிசம் நந்தினி!" என்றான்.

"சொல்லுங்கள் சார்!"

"உடம்பு சுகமில்லையா உங்களுக்கு?"

"இல்லையே... சுகமாகத்தான் இருக்கிறேன்...!"

"இல்லை... ஒரு வாரமாக உங்கள் முகமே சரியில்லை அதான் கேட்டேன்...!"

நந்தினிக்குள் இனம்புரியா உணர்வு தலைதூக்கியது. 'ஒரு வாரமாய் என் முகத்தை கவனித்திருக்கிறார்! இனி தள்ளிப்போடக்கூடாது... இதுதான் சந்தர்ப்பம் சொல்லிவிட வேண்டியதுதான்!'



"அது... வந்து... வீட்டில்...!"

"குக்..., குக்... குக்...!" மேசைமேல் இருந்த போன் அலறியது.

"அப்புறம் பேசலாம் நந்தினி!" என்று அந்த பேச்சை அறுத்து, ரிசீவரை கையில் எடுத்து 'அலோ' என்றான்.

நந்தினிக்கு ஆத்திரத்தில் அழுகை வர எத்தனித்தது.

திலகனிடமிருந்து போனை பறித்து சுக்குநூறாய் உடைத்தெறிய வேண்டும் போல ஆவேசம் எழுந்தது.

## 6

அலுவலகம் முழுக்க அலங்கரிக்கப்பட்டிருந்தது. வாயிலில் மாவிலைத் தோரணங்கள் அசைந்தாடி கொண்டிருந்தன.

திலகன் உட்பட... முக்கிய உயர் அதிகாரிகள் சந்தன மாலையோடு எம்.டி. வரவிற்காக காத்திருந்தனர்.

நந்தினி திலகனையேப் பார்த்துக் கொண்டிருந்தாள். பரபரப்பாய் அங்குமிங்கும் ஓடியாடிக் கொண்டிருந்ததில் குண்டூசி முனைகளாய் முகத்தில் வியர்த்திருந்ததை அவ்வப்போது கைக்குட்டையால் ஒற்றியெடுத்துக்கொண்டிருந்தான்.

ஆறடி தொடும் உயரம். மாநிறத்துக்கும் கூடுதலான கவர்ச்சியான நிறம். சுருள் சுருளாய் சிலும்பி நின்ற முடி. அதை அடிக்கடி பின்னோக்கி அழுத்திவிட்டுக்கொள்ளும் லாவகம். கண்களாலேயே ஆளை எடை போட்டு விடும் அழுத்தமான பார்வை. அறிவாளி என்பதற்கு அடையாளமாய் கொஞ்சம் அகன்ற நெற்றி! சரேலென இறங்கும் நாசி. சற்று பருத்த உதடுகளை மறைக்கும் அடர்த்தியான மீசை! மொத்தத்தில் மிக எளிதாய் பெண்களை வசப்படுத்தும் மாய கவர்ச்சிகள் அவனிடம் நிறையவே இருந்தன.

திடுமென அந்த இடம் தீப்பற்றிக்கொண்டது போல் பரபரப்பானது.

வெளிநாட்டு கார் அலுவலக கேட்டினுள்ளே நுழைந்தது. காரில் யாருமே இல்லை.

அவன் மட்டுமே முன் கதவை திறந்து இறங்கினான். குழுமியிருந்தவர்களை பார்த்து சிரித்தவன் கைகூப்பி பொதுவாய் வணக்கம் சொன்னான்.

திலகன் முதலில் சென்று மாலை அணிவித்து வணங்கி... தன்னை

அறிமுகப்படுத்திக்கொண்டான்.

சில கணங்கள் அவனையே பார்த்த எம்.டி. அவன் கையை பற்றி குலுக்கினான்.

"நான் நந்தகுமார்!"

"வெல்கம் சார்!"

ஒவ்வொருவராக மாலையிட்ட பின் குளிர் கண்ணாடியோடு உள்ளே நுழைந்தான்.

செக்கசெவேல் என்று நடிகர் அப்பாசை நினைவுபடுத்தினான் நந்தகுமார்.

திலகன் ஒவ்வொருவராக அவனிடம் அறிமுகப்படுத்தினான்.

நந்தினியிடம் வந்தான்.

"இவங்க மிஸ் நந்தினி! என் செயலாளர்!"

"அ...லோ!" திகைப்பாய் கண்களிலிருந்து கண்ணாடியை கழற்றினான்.

"வணக்கம் சார்!" மெல்லிய புன்னகையோடு கைகூப்பினாள் நந்தினி.

நந்தகுமார் அசையாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான். தன்னிடமிருந்து எதுவோ ஒன்று இடம் மாறுவதை உணரமுடிந்தது.

"ந...ந்...தி...னி...!" வாய்விட்டு ஒருமுறை அந்த பெயரை உச்சரித்துப் பார்த்தான். நெஞ்செல்லாம் இனித்தது.

"சார்...!" அவன் உத்தரவை எதிர்பார்த்து காத்திருந்தாள்.

"ரொம்ப நல்ல பெயர்!" அர்த்தமாய் ஒரு புன்னகையை வீசிவிட்டு மனமேயின்றி நகர்ந்தான்.

திலகன் இதை கவனிக்கத் தவறவில்லை. எனினும் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை.

அறிமுகம்... இத்யாதி முடிந்தபின் ஒரு மணிநேரம் கழித்து ஓட்டலுக்கு புறப்பட்டான். திலகன் அவனை பாதுகாப்பாய் அழைத்துச் சென்று விட்டுவிட்டு வந்தான்.

**ந**ந்தகுமாரோடு உடன் மூன்று நண்பர்களும் வந்திருந்தனர்.

இரண்டு நாளாய் சென்னை முழுக்க சுற்றிவிட்டு, ஆயாசமாய் பால்கனியில் அமர்ந்திருந்தனர்.

அவர்களின் முன்னே வட்டமான சிறிய கண்ணாடி மேசையில், நாலு கண்ணாடி தம்ளர்களில் சிவப்புநிற திரவம் அவர்கள் தொடகாத்திருந்தது.



பொன்னிறமாய் வறுக்கப்பட்ட கோழி தொடையை எடுத்து கடித்த வினோத், "இனிமேலும் தாக்குப்பிடிக்க முடியாதுப்பா!" என்றான்.

"என்ன சொல்றே?"

"இந்த சென்னையை... வறுத்தெடுக்கிற வெயிலை சொல்றேன்!"

"நீ சொல்றது சரிதான்!" தம்ளர் எடுத்து ஒரு 'சிப்' சாப்பிட்ட முரளி அதை ஆமோதித்தான்.

"ஒரு வாரம் சென்னையில் டேரா போடணும்னு புரோகிராம் போட்டோம்... இனி ஒரு மணி நேரம்கூட இருக்க முடியாது. சுத்த போர்! நீ என்ன சொல்றே நந்து? நாளைக்கே ஊருக்கு போயிடுவோமா?"

சிகரெட்டை உள்ளிழுத்து. அதை வளையம் வளையமாய் வெளியே விட்டவன்... ரோட்டையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இரவு நேர சென்னை, அலங்கரிக்கப்பட்ட பெண்ணாய் தகதகத்தது. பிசியான போக்குவரத்து சாலை அது. வரிசையாய் ஊர்ந்து சென்ற வாகனங்கள் முதுகில் கோழி கொண்டையாய் சிவப்பு விளக்குகள் கண்சிமிட்டி சென்ற அழகு... நிச்சயமாய் எந்த கவிஞனையாவது இரண்டு வரி கவிதை எழுத சொல்லும்!

"நந்து...!" மறுபடி கூப்பிட்டான் முரளி.

"உம்... என்ன முரளி?" தன்னிலை மீண்டான்.

"என்ன... உனக்கும் ஊர் நினைவு வந்திடுச்சா?"

'இல்லை... நந்தினி ஞாபகம்தான்' சொல்லவில்லை. சிரித்தான்.

"நீ என்ன சொல்றே நந்து? நாளைக்கே கிளம்பிடலாமா? இந்த ஊர் ரொம்ப போரடிக்குதுப்பா!"

நந்தகுமார் கூட சென்னையில் காலடி வைத்தபோது மிஞ்சிபோனால் மூன்று நாள் இருந்துவிட்டு, அப்பாவிடம் 'இந்த ஊர் பிடிக்கலைப்பா... நான் கல்கத்தா அலுவலகத்தையே பார்த்துக்கிறேன். சென்னைக்கு வேற ஆளை போட்டுக்குங்க' என்று போனில் சொல்லிவிட்டு மூட்டைகட்டி, சென்னைக்கு 'டாட்டா' காட்டிவிட்டு போகவே எண்ணியிருந்தான்.

ஆனால் இன்றைய நிலைமையோ வேறு! இப்போதுள்ள நந்தகுமாரும் வேறு.

"இல்லை முரளி... நான் வரலை!"

"ஏன்?" என்றனர் ஒரே குரலில் மூவரும் ஆச்சரியமாய்!

"இந்த சென்னை கிளையிலேயே பொறுப்பேத்துக்கறதா முடிவு பண்ணிட்டேன்!" சிகரெட் முனையை தட்டி சாம்பலை உதிர்த்தான்.

"பேசறது நந்துதானா? ரொம்ப ஆச்சரியமாயிருக்கு!"



"இதுல ஆச்சரியப்பட ஒன்றுமில்லே வினோத்! இந்த ஊரில் எம்.டி. ரிடையர்டாகி போனபிறகு ஒரு வருடமா அந்த சீட்டுக்கு ஆள் போடலை. அதனால் வியாபாரம் கொஞ்சம் இழுபறியாயிடுச்சி! நான் இருந்து சரிபண்ண வேண்டிய அவசியம் இப்போது!"

"எப்படிடா சென்னையில் இருப்பே? முடியுமா உன்னால்?"

"நிச்சயமாய் முடியும்!" தீர்மானமாய் சொன்னான்.

நண்பர்கள் சென்றபிறகு நந்தகுமார் தீவிரமாய் அலுவலக பணிகளில் மூழ்கிப்போனான்.

அடையாறு பங்களா தயாரானதும் அங்கேயே போய் தங்கிக் கொண்டான். அவன் தேவைக்கு மூன்று வகை கார்கள் போர்டிகோவில் இளைப்பாறின. பங்களாவைச் சுற்றி பூங்கா அமைக்கப்பட்டிருந்தது. ஒருபுறம் நீச்சல்குளம், மறுபுறம் டென்னிஸ் விளையாட வசதியாக வலை கட்டப்பட்டு தயாராக இருந்தது.

மூன்று மாடி கொண்ட பங்களா. பல அறைகள். அதை பராமரிக்க நான்கு வேலையாட்கள். இரண்டு தோட்டக்காரன், ஒரு காவலாளி, இரண்டு உயர்ரக நாய்கள். சமையலுக்கு ஐந்து நட்சத்திர ஓட்டலில் பணிபுரிந்த மீரான் நாயர் அமர்த்தப்பட்டிருந்தார். இவர்கள் அத்தனை பேரையும் கட்டிமேய்க்க துரைக்கண்ணு நியமிக்கப்பட்டிருந்தார். நந்தகுமாரின் தூரத்து உறவினர்.

வீட்டிலிருக்கும்போது அவன் தேவைகளை அறிந்து செய்து முடித்தார் துரைக்கண்ணு.

நந்தகுமாரிடம் ஒரு நல்ல குணம் உண்டு! தந்தையார் பல தலைமுறைக்கும் சொத்து சேர்த்து குவித்திருந்தார். 'இது வேண்டுமே!' என்று அவன் நினைக்க தொடங்குமுன்பே... அந்த பொருள் அவன்முன் வைக்கப்பட்டிருக்கும். அப்படி பணத்தால் வளர்ந்தவன் பணிவாகவும் வளர்ந்தான். தன்னைவிட வயதில் குறைந்தவர்களிடம்கூட மரியாதையாக பேசுவான். பணத்திமிரை காட்டி யாரையும் துன்புறுத்தியதோ, மன வருத்தம் ஏற்படுத்தியதோ... செய்ததில்லை. வறியவர்களை கண்டால் இரக்கப்படுவான், உதவிகள் செய்வான்.

அந்தமட்டிலும் எந்தவித 'பந்தா'வும் காட்டாமல் அலுவலகத்தில் அனைவரிடமும் தோழமை பாராட்டியதில் மகிழ்ந்துபோயினர் ஊழியர்கள்.

அன்று...

பார்க்கவேண்டிய கோப்புகளை கவனித்து கையெழுத்திட்டபின் உள் இணைப்பு தொலைபேசியில் திலகனை அழைத்தான் நந்தகுமார்.

கையில் இரண்டு கோப்புகளோடு அவன் அறைக்கு வந்தான் திலகன்.

இன்னும் இரண்டு நாள் கழித்து நடைபெற போகும் 'மீட்டிங்'கில் பேசவேண்டிய குறிப்புகளை அவனிடம் பவ்யமாக நீட்டினான் திலகன்.

திலகனை விழிகள் அகல பார்த்து புன்னகைத்தான்.

"உங்கள் பணி, சுறுசுறுப்பு, நேர்த்தி எல்லாமே என்னை ஆச்சரியப் படுத்துகின்றன மிஸ்டர் திலகன். என் அப்பாவிடம் உங்கள் பதவி உயர்விற்காக சிபாரிசு செய்யப்போகிறேன்!"

திலகன் அவனிடமிருந்து இப்படியொரு பாராட்டை சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

"ந...நன்றி... சார்!" என்றான் உணர்ச்சிவசப்பட்டு.

"நன்றி எல்லாம் எதற்கு? உங்கள் திறமைக்கு கிடைக்கவேண்டிய பரிசு. அதற்குத்தானே ஏற்பாடு செய்யப்போகிறேன்? நான் நினைக்கிறேன்... இப்படியெல்லாம் நீங்கள் திறமையாக செயல்படுவதற்கு காரணம்... சுறுசுறுப்பாக செயல்படுவதற்கு உங்கள் செயலாளர் நந்தினியும் என்று... சரிதானே?"

ஏனோ, அவன் நந்தினியின் பெயரை உச்சரித்ததும் உள்ளுக்குள் உறுத்தியது. பதில் கூறாமல் சிரித்தான். பேச்சை மாற்ற எண்ணி...

"சார்... மீட்டிங்கை ஓட்டல் இம்பீரியலில் ஏற்பாடு செய்துவிட லாமா?"

"நீங்கள் எங்கே ஏற்பாடு செய்தாலும் எனக்கு சம்மதமே மிஸ்டர் திலகன். ஒன்று கேட்க நினைத்து மறந்துவிட்டேன் பாருங்கள். உங்களுக்கு டென்னிஸ் விளையாட தெரியுமா?"

"தெரியும் சார்!"

"அப்படியானால் இன்று மாலை அலுவலகம் முடிந்ததும் என்னுடன் என் வீட்டிற்கு வருகிறீர்கள். நாமிருவரும் விளையாடுகிறோம்... சரியா?"

மகிழ்ந்துபோனான் திலகன். அதேநேரம் திகைத்துப்போனான்.

"என்ன மிஸ்டர் திலகன்? அப்படிப் பார்க்கறீங்க? முடியலைன்னா பரவாயில்லை..."

"அய்யோ... இல்லை சார்! இப்படி ஏழை பணக்காரன், முதலாளி தொழிலாளின்னு பாகுபாடில்லாமல் பேசுவீங்க, பழகுவீங்கன்னு நான் கொஞ்சம்கூட நினைச்சே பார்க்கலே சார்!"

அடக்கமாய் சிரித்தான் நந்தகுமார்.

"எல்லாரும் மனிதர்கள்தானே திலகன்? பணக்காரங்க மட்டும் தாயின் வயிற்றில் பதினைந்து மாதம் இருந்து பிறக்கிறாங்களா? நிலையில்லாத பணத்தை வைச்சு மனிதர்களை எடை போடக்கூடாது. இதெல்லாம் என் அப்பா கற்றுக்கொடுத்த பாடம்!"



"நீங்க இப்படி பேசறதை கேட்க ரொம்ப மகிழ்ச்சியா இருக்கு சார்!" நெக்குருகிப் போனான்.

"அப்ப டென்னிஸ் விளையாட....."

"கண்டிப்பா வந்திடறேன் சார்!"

விளையாடி முடித்து புல்வெளியில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளில் வந்தமர்ந்தனர். ஒரு டர்க்கி டவலை திலகனிடம் கொடுத்துவிட்டு, தானும் வியர்வையைத் துடைத்துக்கொண்டான்.

வேலைக்காரன் வைத்துவிட்டுப்போன பானங்களில் ஒரு கப்பை எடுத்து திலகனிடம் நீட்டினான். சற்றே சங்கடப்பட்டு வாங்கிக் கொண்டான்.

பொதுவாய் அலுவலகம், வியாபார எதிரிகள், பங்குதாரர்கள் என்று பேசினான் நந்தகுமார்.

"உங்களுக்கொன்று தெரியுமா திலகன்? சென்னைக்கு வருவதில் எனக்கு கொஞ்சமும் நாட்டம் இருந்ததில்லை. வந்த உடனே கல்கத்தா சென்றுவிடவே முதலில் நினைத்திருந்தேன். ஆனால், வந்த முதல்நாளே... இந்த ஊர், மக்கள், அலுவலகம், பணியாளர்கள், குறிப்பாக... குறிப்பாக... உம்... எல்லாமே எனக்கு பிடிச்சிருந்தது."

"அது நாங்கள் செய்த புண்ணியம் சார்!"

"அது போகட்டும் திலகன்... உங்கள் வீட்டில் மொத்தம் எத்தனை பேர்?"

"நானும், பாட்டியும் மட்டும்தான்!"

"ஓ... சாரி!" புரிந்தவனாய் மேற்கொண்டு அவனைப் பற்றி கேட்கவில்லை.

"உங்க செயலாளர்... பேரென்ன சொன்னீங்க?"

"நந்தினி!"

"ஆமா நந்தினி... அவங்க எங்கே குடியிருக்காங்க?"

"திருவல்லிக்கேணி!"

"அவங்ககூட பிறந்தவங்க எத்தனை பேர்?"

'அவளைப் பற்றிய அநாவசிய கேள்விகள் எதற்கு?'

கருகருவென்று கோபம் ஏறியது.

"தெரியாது சார்! அந்தளவு அவங்களோட எனக்கு பழக்கமில்லை!"

அந்த பதிலுக்காக மனதிற்குள் கடவுளுக்கு நன்றி கூறினான் நந்தகுமார்.

மேகம் கறுத்த முகமாய் விசித்துக்கொண்டிருந்தன.

யோகா வாட்ச் நனைந்துவிடாமலிருக்க அதன்மேல் கர்ச்சிப் கட்டினாள். அந்த வாட்ச்சை அவளுடைய பிறந்த நாளிற்காக சந்திரன் பரிசளித்தது. பத்து பைசா பெறுமானமுள்ள பரிசுப் பொருளாயினும்... அதை பத்திரமாய் பாதுகாப்பதில் யோகாவுக்கு நிகர் யோகாதான்.

நனையாமலிருக்க குடையை இன்னும் கொஞ்சம் உயர்த்திப் பிடித்தாள்.

அப்போதுதான்...

அவன் வந்தான்... சந்திரன்.

"வாயேன் நந்தினி... பஸ் வர லேட்டாகும். அதுவும் மழையில... கூட்டமா இருக்கும்... பைக்லே போய்விடலாம்... வா!" தயங்கித் தயங்கி சொன்னான்.

'எப்படியாவது இன்று என் மனதை இவளுக்குத் தெரியப்படுத்தாமல் விடப்போவதில்லை' தனக்குள் சபதம் எடுத்துக்கொண்டான்.

"பைக்லேயா? உங்ககூடவா? எங்கே?" யோகா அவனை சீண்டிப் பார்த்தாள்.

"உன்... ஆபீசிற்குத்தான்!"

"அதுசரி... கல்லூரிக்கு யார் போவதாம்?" உதட்டோரம் குறும்பு மின்னியது.

சந்திரனுக்கு தூக்கிவாரிப் போட்டது. அவளையே உற்றுப் பார்த்தான்.

அதே கண்கள், அதே உதடு, அதே நிறம்... எல்லாமே! சர்வார் கமீசில், உயரத் தூக்கிப்போட்ட நதியா டைப் கொண்டை... ச்சட்! அதான்... கொண்டை போட்டதால் வித்தியாசம் தெரியாமல் போயிடுச்சி! என் நந்தினிக்கு இடுப்புத் தாண்டி ஊஞ்சலாடுமே!

"ஹி...ஹி... யோகாவா?" அசடுவழிந்தான்.

"வழியாதீங்க..."

"நான் நந்தினியோன்னு நினைச்சேன்..."

"நல்லவேளை... காதல் வசனம் எதையும் எடுத்துவிடாமல் இருந்தீங்களே... அதுவரைக்கும் சந்தோசம்... ஏன் அத்தான், தெரியாமத்தான் கேக்கறேன். நீங்களும் அக்கா முன்னாடி சுத்தி சுத்தி வர்றீங்க... இதுவரைக்கும் என்னதான் முன்னேற்றம் தெரிஞ்சது?"

"இன்னைக்கு எப்படியாவது 'அது'பத்தி பேசிடணும்னு முடிவோடதான் வந்தேன்!"

"எங்கிட்டேயா?"

"அடையாளமே தெரியலே யோகா! ரெண்டு பேரும் ஒரே மாதிரி



இருக்கறதால... குழம்பிட்டேன். நந்தினி இன்னும் வரலையா?"

"நீ லேட்!" அவள் சீக்கிரமாவே போயிட்டா! இருந்தாலும் நான் ஒண்ணு சொல்றேன். கேப்பீங்களா?"

"என்ன?"

"நந்தினியைவிடவும் உசத்தியான பொண்ணு உங்களுக்கு கிடைக்காமலயா போவா?"

"என்ன சொல்றே யோகா!" மழையிலும் வியர்த்தது.

"அம்மா மட்டுமில்லே... நானும் எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேன்..."

"........"

"அவள் பிடிகொடுத்து பேசலை! நான் நினைக்கிறேன்... அவள் யாரையோ காதலிக்க..."

"ப்ளீஸ்... யோகா... ப்ளீஸ்... அந்த வார்த்தையை சொல்லிடாதே. நந்தினி... நந்தினி... எனக்குத்தான்!" உடைந்துபோய் குரல் கரகரத்தது.

பரிதாபமாய் அவனைப் பார்த்தாள் யோகா!

"அத்தான்... உடைஞ்சுப்போயிடாதீங்க! எதிர்பார்க்கறதெல்லாம் நடக்கறதில்லே. நடக்கறதெல்லாம் துன்பமானதுமில்லே! பிடிச்சவனோட வாழறதுக்கு கொடுத்து வைக்கலேன்னா... அவனை வாழ்த்தறதுக்கு நல்ல மனசாவது இருக்கணும். அது நிச்சயம் உங்ககிட்டே இருக்கு. எதுவுமே தானா கனியணும். தடியால் அடிச்சி கனிய வைக்கக்கூடாது. அது ருசிக்காது. நீங்கள் ஆண்பிள்ளை. ஆண் அழுவது விவேகமல்ல. நான் வரட்டுமா? அதோ... நான் போகும் பஸ் வந்துவிட்டது."

யோகா கனத்த மனதுடன் ஏறிப் போய்விட்டாள்.

சந்திரன் நனைவதுகூட பொருட்படுத்தாமல் நெடுநேரம் அங்கேயே நின்றிருந்தான் சிலை போல்!

## 7

பேப்பர் வெயிட்டை உருட்டியபடி திலகனை பார்த்தான் நந்தகுமார்.

'தங்கபிரேமிட்ட அந்த கண்ணாடி அவன் முகத்திற்குதான் எவ்வளவு அழகாய் இருக்கிறது!' திலகனுக்கு முதல் முறையாய் பொறாமை எட்டிப் பார்த்தது.

அந்த நிறம், அடங்காத கரிய கேசம் முன்நெற்றியில் வந்து விழும் அழகு. கோட்டும், சூட்டும், கையில் கட்டியிருக்கும் தங்கத்தாலான கைக்கடிகாரத்தில் வைரங்களும் பதிக்கப்பட்டிருந்தன.

பிறந்தால், இப்படி ஒரு பணக்காரனாக அல்லவா பிறக்க வேண்டும்!

அவனை பார்வையால் அளந்துகொண்டே வந்தவன் மேசை மீது கிடந்த சிறிய குறிப்பெழுதும் நோட்டின் மீது கண்கள் நிலைகுத்த... இதயத்தை ஊசியால் குத்தியது போல் வலி.

அந்த நோட்டு முழுக்க நந்தினி, நந்தினி என்று கிறுக்கியிருந்தது.

"சார்... அவசரமா வரச்சொன்னீங்களாம்!" முகம் மட்டுமல்ல, குரலும் இறுகிப்போயிருந்தது திலகனுக்கு.

"மிஸ்டர் திலகன்... எனக்கொரு அந்தரங்க காரியதரிசி ஏற்பாடு பண்ண சொல்லியிருந்தேனே..."

"அதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கிறது சார். "தினத்தந்தி", "இந்து" போன்ற தினசரிகளில் விளம்பரம் கொடுத்து, அதன்மூலம் வந்த விண்ணப்பங்களில் ஐம்பது பேருக்கு அடுத்த வாரம் நடைபெறும் நேர்முகத்தேர்விற்கு வரச்சொல்லி கடிதம் அனுப்பி இருக்கிறோம் சார்!"

"நல்லது... ஆனால் எனக்கொரு யோசனை தோன்றுகிறது..."

"சொல்லுங்கள் சார்!"

"தொழில்துறை நண்பர்களிடம் திறமையாக பேச, ஓட்டல் அங்கு இங்கு என்று நடக்கும் மீட்டிங்கில் கலந்துகொள்ள தேவையான குறிப்புகளை உடனுக்குடன் எழுதித்தர, எடுத்துத்தர... திறமையான பெண்ணாக, முன் அனுபவமுள்ள பெண்ணாக இருந்தால் நல்லதல்லவா?"

"ஆமாம் சார்! நேர்முகத் தேர்விற்கு வரப்போகும் பெண்கள் ஏற்கனவே வேறு அலுவலகங்களில் பணிபுரிந்த முன் அனுபவம் உள்ளவர்கள்தான்! அப்படித்தான் தேர்வு செய்திருக்கிறோம்."

"அதை கூற வரவில்லை மிஸ்டர் திலகன். என்னதான் அவர்களில் ஒருவரை தேர்ந்தெடுத்தாலும், அந்த பெண்ணுக்கு நம் அலுவலகம் புதியதுதானே? நம் அலுவலக நடைமுறை விசயங்களை ஆரம்பத்தில் இருந்து சொல்லித் தரவேண்டும். அதையெல்லாம் சொல்லித் தருவதற்கெல்லாம் எனக்கு நேரமில்லை. ஆகவே..."

"..........."

"இதோ... உங்கள் செயலாளர் நந்தினியை என் அந்தரங்க காரியதரிசியாக நாளையிலிருந்து நியமித்துள்ளேன். அதற்கான கடிதமிது. முறைப்படி நீங்களும் ஒரு கையெழுத்திட்டு... நந்தினியிடம் சேர்ப்பித்து விடுங்கள். புதிதாக தேர்வுபெறும் பெண்ணை நந்தினி இடத்திற்கு போட்டுவிடுங்கள்!"



"சா...ர்...!"

"பிளீஸ் மிஸ்டர் திலகன். எனக்கு வெளியில் அவசரமாய் ஒரு வேலை இருக்கிறது. வருகிறேன்!"

ஹோல்டிங் சேரில் சுழற்றி போடப்பட்டிருந்த கோட்டை எடுத்து அணிந்து, திலகன் தோளில் அன்பாய் தட்டிவிட்டு போய்விட்டான் நந்தகுமார்.

நந்தினியே தன் கைவிட்டு போவது போல் பிரமை.

'என்ன நடக்கிறது இங்கே?'

'ஏனிந்த திடீர் பதவி மாற்றம்?'

'நந்தினி இதற்கு சம்மதிப்பாளா?'

சம்மதிக்காமல் என்ன? இது தலைமை உத்தரவு. ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும். போதாதற்கு ஆயிரம் ரூபாய் கூடுதலாய் சம்பளம்!

திலகனின் இதயத்தில் யாரோ ஏறி அழுத்தி துவம்சம் செய்வது போல் வலித்தது.

"வாழ்த்துக்கள் மிஸ் நந்தினி!"

குரல் கேட்டு டேரென பாம்பு போல் தலைநிமிர்ந்தாள்.

"எதற்காக சார்?" நெற்றியில் சுருக்கம் விழுந்தது.

"இதோ... இந்த கடிதத்தை படியுங்கள்!"

வாங்கி படித்தவளுக்கு உள்ளங்கை வியர்த்தது.

"ஏன் சார்... திடீரென்று..."

"உங்கள் திறமைதான் காரணம் மிஸ். நந்தினி!"

"எனக்கு பிடிக்கவில்லை என்று மறுத்தால்...?"

குப்பென்று தென்றல் வீசியது திலகனுக்குள்.

'நீ என்னவள் நந்தினி! உன் இதயத்தை என்னைத் தவிர யாராலும் தொடமுடியாது. இதுபோதுமே எனக்கு!'

"இது... இது... தலைமை உத்தரவு. மீறமுடியாது மிஸ். நந்தினி தவிர, மறுப்பது மரியாதை குறைவெனப்படும். சம்பளமும் அதிகம்!"

'மனப்பூர்வமாய் உங்களுக்கு இதில் சம்மதமா திலகன்? பாவி... இப்போதாவது வாயைத் திறந்து சொல்லேன்... ஐ.லவ்.யூ நந்தினி என்று சொல்லேன்!' இவன் சட்டையை கொத்தாகப் பற்றி கேட்கவேண்டும் போலிருந்தது.

"ஆமாம்... பெரிய இடத்திற்கு போகப் போகிறேன். சம்பளமும் அதிகம். மறுப்பது முட்டாள்தனம்தான்! எனவே நல்ல செய்தியை

தந்ததற்கு மிக்க நன்றி சார்!" அழுதுவிடுவேன் என்பதுபோல் உதடுகள் துடித்தன. அதை மறைக்க முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டாள்.

அந்த முகச்சுளிப்பை தாங்கமாட்டாமல் அவ்விடத்தைவிட்டு அகன்றான் திலகன்.

**ச**ன்னமான இரவு விளக்கின் வெளிச்சத்தை ரசித்து... மினுமினு என்று ஜொலித்தபடி சுற்றிக்கொண்டிருந்த மின்விசிறியையே பார்த்துக் கொண்டிருந்தான் நந்தகுமார்.

அந்த ஜொலிப்பெல்லாம் ஒன்று சேர்ந்து நந்தினியின் முகமாக மாறியது.

"ந...ந்...தி...னி..." தவிப்பும், ஏக்கமுமாய் வந்தது குரல்.

"நானா இப்படி மாறிப்போனேன்? எப்படி மாற்றிவிட்டாய் நந்தினி? விதியின் மேல் எனக்கு நம்பிக்கையே இல்லை. ஆனால், இப்போது நம்புகிறேன். பிடிக்காத இந்த ஊருக்கு வலிய என்னை வரவழைத்தது விதிதானே? உன்னைப் பார்த்த விநாடியே அழுத்தமாய் 'நீ என்னவள்' என்ற வார்த்தை பதிந்ததே... அது ஏன்? என்னிடமுள்ள தவிப்பு உன்னிடமிருக்கிறதா? உன்னை நினைத்தாலே உடம்பெல்லாம் அனலாய் கொதிக்கிறதே! உனக்கும் அப்படி நேர்கிறதா? எப்போதும் உன்னையே நினைத்துக்கொண்டிருக்கிறேனே...! நீயும் என்னை நினைத்துப் பார்க்கிறாயா? நந்தினி... நந்தகுமார் பெயர்கூட எவ்வளவு அழகாய் பொருந்தியிருக்கிறது? அதை நினைத்து லேசாய் ஆச்சரியப்படுகிறேன். நீயும் அப்படி ஆச்சரியப்படுகிறாயா?

நான் கடவுளை நம்புகிறேன். என் மனதில் உண்டாக்கிய காதல் தீயை உன்னிடமும் எரிய வைத்திருப்பான் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. உன்னை யாராவது உற்றுப் பார்த்தால் கூட என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை நந்தினி! அதனால் உன்னை எப்போதும் என் அருகிலே வைத்துப் பார்க்கவே... வேறு யார் மூச்சுகாற்றும் உன் மீது பட்டுவிடக்கூடாது என்பதற்காகவே... என் செயலாளராக மாற்றிக்கொண்டேன். விரைவில் என் மனைவியாகவும் பதவி உயர்வு தருவேன். ஏற்றுக்கொள்வாய்தானே? ஏற்றுக்கொள்வாய். மறுக்கக் கூடிய காரணம் என்னிடம் தேடினாலும் கிடைக்காதே கண்மணி! அழகு, பணமிருந்தும், கர்வம் துளியும் இல்லை. அந்த மமதையில் பெண்களை வலையில் வீழ்த்தி களைக்கும் நாயுமல்ல நான். நல்ல கணவன்! நான் உனக்கு கிடைக்க நீ புண்ணியம் செய்திருக்க வேண்டும் நந்தினி!'

நந்தினி... நந்தினி... நந்தினி...

அவன் உணர்வுகள் உறங்கியபின்பும் கனவிலும் நந்தினியின் ஆக்கிரமிப்பு தொடர்ந்துகொண்டே இருந்தது. அணுஅணுவாக, அவன் உடலின் ஒவ்வொரு செல்களிலும் அவள் கலந்து, அவன் விடும் மூச்சுக்கூட 'நந்தினி' என்றே பெயர் சொன்னது.



**அ**ந்திப்பொழுது!

அந்த நீண்ட அறையில் இருமருங்கும் நாற்காலிகள் போடப்பட்டு நடுவில் மேசை மீது வெள்ளை வெளேனர் விரிப்பும், அதன்மேல் கொறிக்க, பருக என்று தின்பண்டங்களும் பானங்களும் வைக்கப்பட்டிருந்தன.

நந்தகுமார் அமைதியாய், அதேசமயம் அழுத்தமாய் பேசி மற்றவர்களை கவர்ந்துக்கொண்டிருந்தான். ஐந்து கோடி ரூபாய்க்கான திட்டம், அவன் கைவசம் வருவதில் அதிகம் சிரமம் படவில்லை. பேச்சுவார்த்தை வெற்றியில் முடிந்ததும், பக்கத்தில் அமர்ந்திருந்த நந்தினிக்குதான் முதலில், "ரொம்ப நன்றி நந்தினி" என்றான்.

"எ...எதுக்கு சார்?"

"நீ... சாரி... நீங்கள் பக்கத்திலிருந்து உடனுக்குடன் குறிப்புகள் எடுத்துக் கொடுத்ததால்தான் என்னால் தடுமாற்றமின்றி பேச முடிந்தது"

"என் வேலையை சிறப்பாக செய்வதில் எனக்கும் அக்கறை இருக்கிறது சார்!"

"தோற்றம் மட்டுமல்ல... பேச்சும் அழகாக இருக்கிறது!"

அவன் பேச்சு வெட்கத்தையும், கொஞ்சம் பயத்தையும் தந்தது.

அவன் முகம், துளைத்துவிடும் பார்வை, எதையோ உள்ளடக்கி பேசுவதுப் போல் தோன்றியது.

இவனை எந்தளவு நம்புவது? முதலில் பார்வையால், பிறகு பேச்சால், கடைசியில் படுக்கையில் வீழ்த்தும் ரகமா இவன்? பார்த்தால் அப்படி தெரியவில்லை. இருந்தபோதிலும் எச்சரிக்கையாய் இருப்பது நல்லது.

அதற்கடுத்து சில நாட்கள் கழித்து, யாரோ தொழிலதிபர் வீட்டு திருமண வரவேற்பிற்கு செல்ல வேண்டியிருந்தது. நந்தகுமார் நந்தினியையும் உடன் வரச்சொல்ல... சங்கடமாய் அவனைப் பார்த்தாள்.

இது அலுவலகப் பணியல்லவே! இந்த நிகழ்ச்சிக்கெல்லாம் உடன் செல்வது... கொஞ்சம் அநாகரிகமான செயலாக பிறர் பார்வையில் படும். திலகன் கூட என்ன நினைப்பார்?

"ப்ளீஸ் நந்தினி! எனக்கு உதவுங்கள்! யோசிக்க வேண்டாம். இந்த ஊர் புதிது. மனிதர்கள் புதிது. திருமண நிகழ்ச்சிக்கு போவதும் புதிது. கொஞ்சம் சங்கடமாகவும் இருக்கிறது. நீங்கள் உடன் வந்தால்... யானை பலம் எனக்கு... ப்ளீஸ்... என்னை உங்கள் நண்பனாக நினைத்து உதவுங்கள்!"

அவன் ஒரேயடியாய் கெஞ்ச... அதற்குமேல் பிடிவாதமாய் இருக்க முடியவில்லை அவளால்.

சென்றாள்.

பட்டும், வைரமும் அந்த மண்டபத்தில் போட்டி போட்டு ஜொலிக்க...

மிக எளிமையாய், சிறிய பார்டரிட்ட பிரவுன் நிற மைசூர் சில்க் சேலை, அதே நிற ரவிக்கை, கழுத்தில் ஒரு முத்துமாலை, முத்து தோடு, தளர பின்னலிட்ட கூந்தலில் முல்லைச் சரம்! இந்த அலங்காரத்திலேயே நந்தினி நந்தவனமாய் தெரிந்தாள்.

ஆயிரம் பெண்களுக்கு மத்தியில் அவள் மட்டும் தனித்து தெரிந்தாள்.

காந்த சிரிப்பு, கர்வ சிரிப்பு, ஆளை அசத்தும் சிரிப்பு, புன்னகை, மென்னகை என்று பலவிதம் என்றாலும் மோனோலிசா புன்னகைக்கு மட்டும் தனித்துவம் உண்டல்லவா? அதில் சோகமும் ஒளிந்திருக்கும், காதலும் மினிர்ந்திருக்கும். அப்படிப்பட்ட தனித்துவம்தான் நந்தினியின் நளினமான அழகிலும் ஒளிந்திருந்தது.

நிமிடத்திற்கு நிமிடம் அவள்மேல் காய்ச்சல் போல் காதல் வெப்பம் ஏறிக்கொண்டே போனது. நந்தகுமாருக்கு தன் மேலேயே ஒரு பயம் வந்தது. எல்லை மீறிய அன்பிற்கு எந்த வகையிலாவது பங்கம் வந்துவிடுமோ? ஊகும்... இனியும் வாயை மூடிக்கொண்டிருப்பதில் அர்த்தமே இல்லை. நந்தினியிடம் இதுகுறித்து பேசிவிட வேண்டும்.

மண்டபத்தைவிட்டு வெளியே வந்ததும் நந்தினி அவனிடம், "சார்... ரொம்ப தாமதமாகிவிட்டது. நான் ஆட்டோ பிடித்து வீட்டிற்கு போய் விடுகிறேன்" என்றாள்.

நந்தகுமார் அவளை ஏற இறங்க பார்த்து வேதனைப்பட்டான்.

"நந்தினி... என்னை ஏன் இவ்வளவு அரக்கத்தனமாக எடை போட்டுவிட்டீர்கள்!"

"சார்... நான் தப்பாக... ஏதும்..."

"ஆமாம்... தப்பாகத்தான் பேசிவிட்டீர்கள்! இந்த இரவு நேரத்தில் உங்களை ஆட்டோவில் அனுப்பிவிட்டு, நான் மட்டும் காரில் சொகுசாக போவேன் என்று எப்படி எதிர்பார்த்தீர்கள்?"

"பரவாயில்லை சார்... நான்..."

"ப்ளீஸ்... காரில் ஏறுங்கள்...!" கதவை திறந்து வைத்தான்.

ஏறி அமர்ந்தாள்.

நந்தகுமார் எதையும் பேசவில்லை. கண்ணகி சிலை அருகே வந்தபோதுதான் வாய் திறந்தான்.

"முகவரி சொல்லுங்க!"

சொன்னாள்.

அவள் வீட்டின்முன் காரை நிறுத்தினான். சிறிய கிரில் கேட்! அதையொட்டி நித்யமல்லிகை கொடி. வெள்ளை நட்சத்திரங்களாய்



பூக்கள் சிரித்துக்கொண்டிருந்தன. ஒற்றைமாடி கொண்ட வீடு. 'என் நந்தினி இவ்வளவு சிறிய வீட்டிலா இருக்கிறாள்?'

"ரொம்ப நன்றி சார்! வீட்டிற்குள்ளே வந்தால் ரொம்ப சந்தோசப் படுவேன்!" நந்தினி தயவாய் கேட்டாள்.

"வருகிறேன் நந்து! இப்போதல்ல... வரவேண்டிய முறையோடு... வரட்டுமா... பை!" காரை திருப்பி போய்விட்டான்.

ஆனால், நந்தினி அப்படியே நின்றிருந்தாள்.

நந்து! நந்தினி போய் நந்துவாகிவிட்டேன்.

முறையோடு என்றால்...?

ஒன்றும் ஒன்றும் இரண்டு என்று புரிய... நந்தினி வெலவெலத்துப் போனாள்.

## 8

அலம்பிவிட்ட முகமாய் வானம் பளிச்சென்றிருந்தது. அதில் திலகமிட்டது போல் பவுர்ணமி நிலவு! ஆனால், நந்தினியின் உள்ளம் நான் குழம்பிய குட்டை போல் கலங்கிப் போயிருந்தது.

நந்தகுமாரின் மனவோட்டம் முழுதாக தெரிந்தபின் உள்ளுக்குள் ஏதோ ஒன்று குடைந்துக்கொண்டே இருந்தது.

'நான் திலகனை நேசிப்பதை அறிந்தால் நாகுக்காய் ஒதுங்கி விடுவானா? அல்லது நாகரீகம் மறந்து சினிமாவில் வருவதுப் போல் வில்லத்தனம் செய்வானா?'

"இந்த காதல் விசயத்தில் பெற்றோருக்கே பயப்படாதவள்... இவனுக்கேன் பயப்பட வேண்டும்? எது எப்படியெனினும் திலகனிடம் நாளை எல்லாவற்றையும் உடைத்து சொல்லிவிட வேண்டும். அந்த கூமுட்டை கடைசிவரை வாயே திறக்காது. வெட்கத்தை விட்டு நாம் தான் சொல்லியாகணும்.'

தீர்மானித்தபின்பே இமைகள் ஒன்று சேர சம்மதித்தன.

'ஓரளவுக்கு என் மனதை வெளிப்படுத்திவிட்டேன். புரிந்துகொண்டு விட்டாயா நந்தினி? அப்போது உன் முகம் அதிர்ச்சியை பிரதிபலித்ததா? வெட்கத்தை வெளியிட்டதா? சே! தெருவிளக்குகள் ஏன் இத்தனை மோசமாய் இருக்கிறது? என் கண்மணியின் முகத்தை வெளிச்சத்தில் காணமுடியாமல் சதிபண்ணிவிட்டதே!

'நந்தினி... என்னையே உனக்கு அர்ப்பணிக்கிறேன். காலமெல்லாம் என் பக்கமிரு! நான் உன்னை நேசிப்பது உண்மையென்றால் நிச்சயம் நீ எனக்கு கிடைப்பாய்! நந்தினி... நாளை உன்னிடம் நேரடியாக கேட்கப் போகிறேன்... உள்ளத்தைத் தருவாயா?'

இதுதான் எல்லை என்றளவையும் மீறி அவன் காதல் வேகம் கூடிக்கொண்டே போனது.

"நந்தினி..." பத்தடி தொலைவில் கண்ணாடி தடுப்பிற்குள் அமர்ந்திருந்தவளை அவன் இடத்திற்கே வந்து அழைத்தான், நந்தகுமார்.

"எஸ்... சார்!" என்றாள் வியப்பாய்.

"கொஞ்சம் வாங்க பிளீஸ்!" என்றுவிட்டு தன்னிடத்தில் அமர்ந்து கொண்டான்.

அவன் நடவடிக்கை, பேச்சு, பதட்டம் எல்லாவற்றையும் புரியவைக்க, தன்னை திடப்படுத்திக்கொண்டு பின்னே சென்றாள்.

"உக்காருங்க நந்தினி..."

அமர்ந்தாள்.

இரு கைகளையும் கோர்த்துக் கோர்த்து பிரித்தவன் நந்தினியை நேராகப் பார்த்தான்.

"என்னைப்பத்தி என்ன நினைக்கறீங்க நந்தினி?"

"சார்...!"

"சொல்லுங்க... நான் எப்படிப்பட்டவன்?"

"ஜென்டில்மேன்...!"

அந்த பதிலுக்கு மகிழ்ந்தவன் அடுத்த கேள்வியைக் கேட்டான்.

"காதலைப் பத்தி என்ன நினைக்கிறீங்க?"

"........."

"என்னடா... இவன் இப்படியெல்லாம் பேசறான்னேன்னு தவறா எடை போட்றாதீங்க! ஒரு சில விசயங்களை பேசி தெளிவு பண்ணிக்க விரும்பறேன்... பிளீஸ் நந்தினி!"

சற்றே நிதானித்து சொன்னாள்.

"காதல்ங்கறது பனிக்கட்டி! அன்பே உருவானவர்களிடம் அது கிடைத்தால் உருகாமல் காப்பார்கள். முரட்டுத்தனமாக கையாள நினைத்தால்... வெயிலில் வைத்த கதையாகிவிடும்... சரி... இப்போது என்னிடம் இந்த கேள்வி எதற்காக சார்?",

"அழகான உதாரணம் நந்தினி! எதற்காகக் கேட்டேன் தெரியுமா?



# "ராணி முத்து" வாசகர்களுக்கு நாள்தோறும் மூக்குத்தி பரிசு!



வாசகர்களுக்கு நாள் தோறும் ஒரு மூக்குத்தி பரிசு கொடுக்க "ராணி முத்து" முன்வந்திருக்கிறது!

வைரம் போலப் பளிச்சிடும் வெள்ளைக் கல் (அமெரிக்கன் டைமண்டு) பதித்த அழகான மூக்குத்தி! மூக்கிலே போட்டுக் கொண்டால் முக அழகே தூக்கி அடிக்கும்! வீட்டுக்காரர் பார்த்து மயங்கிப் போவார்!!

கீழேயுள்ள கூப்பனை நிரப்பி அனுப்புங்கள். பரிசுக்கு உரிய வாசகர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்து எடுக்கப்படுவார்கள்.

பெயர்: ..............................................

முகவரி: ..............................................

..............................................

..............................................

அஞ்சலக எண்: ☐☐☐☐☐☐

அனுப்பவேண்டிய முகவரி:
ஆசிரியர், "ராணி முத்து", சென்னை—600 007.

# தினத்தந்தி

வாரம் இருமுறை வழங்கும்
இலவச இணைப்புகள்

ஞாயிறுதோறும்
குடும்பமலர்







வெள்ளிதோறும்
சிறுவர்
தங்கமலர்

32 பக்க வண்ணப் புத்தகங்கள்

தவறாமல் படியுங்கள்


நான் அன்பானவன் நந்தினி...!"

"..........!"

"அந்த பனிக்கட்டியை உருகாமல் இதயத்தில் வைத்து பாதுகாப்பேன் நந்தினி...!"

"..........!"

"இன்னும் புரியவில்லையா நந்தினி! நான் உன்னை நேசிக்கிறேன். யாசிக்கிறேன். உன்னை கல்யாணம் செய்துக்க விரும்பறேன்... உன் உள்ளத்தை என்னிடம் கொடுத்துவிடு நந்தினி...!"

"சா...ர்...!"

"பேசாதே... முழுவதையும் நான் பேசிவிடுகிறேன். நான் உன்னிடம் உள்ளத்தை கொடுப்பாயா? என்றுகூட கேட்கவில்லை. கொடுத்துவிடு என்றுதான் கேட்கிறேன். காரணம் உன் பதில் எனக்கு சாதகமாகத்தான் இருக்க வேண்டும்...!"

"சா...ர்...! நான்..."

"ப்ளீஸ்... இப்போது எதையும் பேசாதே! நான் இப்படி கேட்பேன் என்று எதிர்பார்த்திருக்க மாட்டாய்! அதனால் அதிர்ந்துவிட்டாய்... இவன் பணக்காரன், எம்.டி. என்கிற மரியாதை கலந்த பயம்தான் எண்ணமெல்லாம் நிறைந்திருக்கும். நான் உன்னவன். உன் நந்தகுமார். உன்னைத்தவிர உன்னதமாக எதையும் நினைக்காதவன். யோசி... பயப்படாமல் நம்பிக்கையோடு யோசி! நாளை நீ எனக்கு நல்லபதிலைத் தரவேண்டும்...!"

"சா...ர்...!"

"ஒன்றுமட்டும் நிச்சயம் நந்து... நீ இல்லாவிட்டால் நான் இல்லை...! இப்போது நீ போகலாம்!"

காதலை வெளிப்படுத்துவான்... ஆனால் அதை இவ்வளவு மூர்க்கமாக வெளிப்படுத்துவான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை.

முதன்முதலாக அவன்மீது கோபம் கோபமாய் வந்தது.

'நானென்ன இவன் அடிமையா? எப்படி சட்டமிட்டமாய் பேசுகிறான்? எனக்கென்று விருப்பு வெறுப்பு இல்லையா? எல்லாம் பணத்திமிர். இவனிடம் பணமிருந்தால் மயங்கிவிடுவேனா? அந்தளவு கேவலமாய் எடைபோட்டுவிட்டானே!" புழுவாய் துடித்தாள், நந்தினி.

தென்றலும், இருளும் தழுவிக்கொள்ளும் அந்திப்பொழுது. தெருவிளக்குகள் எரியத் தொடங்கின. கடற்கரை காற்று கூந்தலுக்குள் நுழைந்து சிக்கெடுத்துக்கொண்டிருந்தன

முகம் சிவந்து, ஜிமிக்கி ஆட, படபடவென நடந்தவைகளை எல்லாம் சொல்லிக்கொண்டிருந்த நந்தினியை இமைக்காமல்,

பார்த்துக் கொண்டிருந்தான் திலகன்.

"இத்தனை நடந்தபிறகும், இனியும் பொறுமையாய் வாய் மூடிக் கொண்டிருப்பதில் அர்த்தமில்லை திலகன். என்... என் மனதில் வேறு யாருக்கும் இடமில்லை... உ...உங்களைத்தவிர...!"

"ந...ந்...தி...னி...!"

"உங்கள் மனதில் எனக்கு இடமுண்டா திலகன்?" பொங்கியெழுந்த மகிழ்ச்சி அலை அவளை திக்குமுக்காட வைத்தது.

நடுங்கும் கைகளை அவன் முகத்தருகே எடுத்துச் சென்றவள்... தாமரையை தாங்குவதுப்போல் தாங்கி... மெல்ல தன் நெஞ்சில் பதிய வைத்தாள்.

உருகிப்போனான் நந்தினி.

"திலகன்...!"

"நந்து... என் நந்து... இந்த நெஞ்சில் உன்னைத்தவிர வேறு யாரும் சாய்த்துக்கொள்ள முடியாது நந்து...!"

"திலகன்!"

"உன் காதல் எவ்வளவு உத்தமமானது தெரியுமா? இதுவே கொஞ்சம் சபலபுத்தி உடையவராயிருந்தால்... பணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து... காதலை நசுக்கி இருப்பார்கள். ஆனால், என் நந்து...!"

"காதல் வலிமையானது திலகன்!"

"உலகையே வென்றுவிட்ட கர்வம் இப்போது எனக்குள்!"

"முதலில்... நந்தகுமாரை சமாளிக்கும் யோசனையைக் கூறுங்கள் திலகன். அவனை நினைத்தாலே ரொம்ப பயமாக இருக்கிறது!"

"இது பெரிய காரியமா? நாளையே உன் வேலையை ராஜினாமா செய்துவிடு!"

"திலகன்!"

"அவனிடம் வேலை செய்வதால்தானே பிரச்சினையும், பயமும்? நான் உனக்கு வேறு வேலைக்கு ஏற்பாடு செய்கிறேன். அதுவும் உனக்கு விருப்பமிருந்தால்! என் மனைவி வேலைக்குச் செல்வதில் எனக்கு உடன்பாடில்லை!"

"காதலி வேலைக்குச் செல்லட்டும். இல்லாவிட்டால் காதலனை அடிக்கடி எளிதாக சந்திக்க முடியாமல் போய்விடும். மனைவி வேலைக்குப் போகவேண்டாம் என்பதில் எனக்கும் சம்மதமே! நாளையே ராஜினாமா செய்துவிடுகிறேன்...!" என்றாள் நாணத்துடன்.

திலகன் அவள் கையைப் பற்றி அழுத்தி, உள்ளங்கையில் முத்தமிட... சிலிர்த்துப் போனாள் நந்தினி.



**கா**லை ஒன்பது மணிக்கெல்லாம் அலுவலகம் வந்துவிட்டான் நந்தகுமார்.

வேறு யாரும் இன்னும் வரவில்லை.

இதயம் சிட்டுக்குருவி சிறகாய் படபடத்துக் கொண்டிருந்தது.

'நந்தினி எப்போது வருவாய்? எப்படி வருவாய்? மங்களகரமாய் உடுத்தி, தலைநிறைய பூச்சூடி, முகம் நிறைய நாணத்தைச் சுமந்து, என்னை நிமிர்ந்து பார்க்கும் திறனின்றி... தட்டுத்தடுமாறி, "நானும் உங்களை காதலிக்கிறேன் நந்தா...!" என்று கூறும் அழகை காண இன்னும் எவ்வளவு நேரம் காத்திருப்பது?'

பாக்கெட்டிலிருந்து அந்த சிறிய பெட்டியை எடுத்துத் திறந்தான்.

வெல்வெட் படுக்கையில் சுகமாய் வீற்றிருந்தது விலை உயர்ந்த வைரமோதிரம்.

'என் செல்லமே... உன் பதிலை சொல்லி முடிக்க மறுவிநாடியே... நடுங்கும் உன் விரலை பற்றி... இதைப் போட்டுவிடுவேன். பதிலுக்கு நீ என்ன பரிசு தரவேண்டும் தெரியுமா? முத்தம். என் கன்னத்தில் ஒருமுறை உன் இதழால் ஒற்றியெடுக்க வேண்டும்!'

கற்பனைக்கென்ன பூட்டா சாவியா? அதுபாட்டுக்கு இஷ்டத்துக்கு விரித்துக்கொண்டே போனது.

நேரமாக... ஆக... ஏசி அறையிலும் வியர்த்தது. கிட்டத்தட்ட எல்லோரும் வந்தாயிற்று. நந்தினி மட்டும் இன்னும் வரவில்லை. ஏன்?

அவன் கேள்வி மேல் கேள்வி கேட்டு தலையை பிய்த்துக்கொள்ளும் நேரம்... வந்துவிட்டாள் நந்தினி.

ஆனால் அவன் எதிர்பார்த்த தோற்றத்திற்கு மாறாக!

சிவப்பு நிறத்தில் சல்வார் கமீஸ், சிவப்பு நிறபார் பாண்டில் அடங்கிய குதிரைவால். முகத்தில் நாணமில்லை. நேரெதிரே தைரியமாய் சந்தித்தன விழிகள்.

"வா... நந்தினி...!"

"........."

"ரொம்ப நேரமாக உனக்காகவே காத்திருந்தேன்..."

"........."

"ஏன் பேசமாட்டேன்கிறாய்? முதலில் உட்கார்..."

உட்கார்ந்தாள்.

"இரவெல்லாம் தூங்கியிருக்கமாட்டாய் என எண்ணுகிறேன்..."

"அப்படியெல்லாம் ஒன்றுமில்லை..."

"நான் சொன்னதை யோசித்தாயா?"

"ம்..."

"புத்திசாலித்தனமான முடிவெடுத்திருப்பாய் என நம்புகிறேன்..."

"ஆமாம்...!" என்றவள் கைப்பையை திறந்து அந்த கவரை எடுத்தாள்.

நந்தகுமார் சன்னமாக சிரித்தான்.

"நேரில் பேச வெட்கப்பட்டு, கடிதத்தில் எழுதிவிட்டாயா? கொடு!"

அதை வாங்கி பிரித்தான் உச்சபட்சமாய் அதிர்ந்துபோனான்.

"நந்தினி... என்ன இது?" இருக்கைவிட்டு எழுந்துவிட்டான்.

"என் ராஜினாமா கடிதம்!"

"எதற்காக?"

"உங்களுக்கு சாதகமான பதிலை சொல்ல முடியவில்லை என்பதற்காக!"

"ந...ந்...தி...னி!" அவன் இதயம் உள்ளே பொடிந்துப் போனது.

"ஏன் நந்தினி?" அவன் கேட்ட விதம் பரிதாபமாய் இருந்தது.

'என்ன இருக்கிறது என்னிடம்? எதற்காக மாய்ந்து மாய்ந்து காதலிக்கிறான்? தன் தகுதிக்கு கீழே இறங்கி யாசிக்க வேண்டும் என்று என்ன கட்டாயம்? ஆண்டவனே இவனை ஏன் சென்னைக்கு அனுப்பி வைத்தாய்?'

"என் மனதில் ஏற்கனவே வேறு ஒருவருக்கு இடம் கொடுத்து விட்டேன்!"

## 9

எதிர்காற்று முகத்தில் அறைய வேகமாக தன் யமகாவை செலுத்திக் கொண்டிருந்தான் திலகன். அவன் பின்னே. யாரேனும் பார்த்துவிடப் போகிறார்களோ என்ற பயத்துடன், அவனை ஒட்டி அமர்ந்திருந்ததால் ஏற்பட்ட படபடத்துடன் அமர்ந்திருந்தாள் நந்தினி.

"புதிய அலுவலகம் பிடித்திருக்கிற தா நந்து?"

"ம்... ஆனால் இன்னும் யாரிடமும் சரிவர பழகவில்லை. சேர்ந்து ஒரு வாரம்தானே ஆகிறது?"

"நல்லவேளை... அங்கு பணிபுரியும் அத்தனை ஆண்களுக்கும் மணமாகிவிட்டது!"

"ஏன் அதற்கு இவ்வளவு சந்தோசம்?"



"அங்கும் ஒரு நந்தகுமார் உருவாகிடக்கூடாதே!"

"இப்போது எதற்கு அவரைப் பற்றிய பேச்சு?" கடிந்துக் கொண்டாலும், இதய மூலையில் அவனைப் பற்றிய நினைவு எழுந்தாலே... நெருஞ்சிமுள்ளாய் தைத்தது.

"நாம் ஏன் அவன் பார்வையில் விழுந்தோம்? நான் வேறு ஒருவரை நேசிக்கிறேன் என்றதும்... அவன் முகத்தில் தெரிந்த ஏமாற்றம்... சே... பாவம்!

அந்த வேலையை விட்டு நின்றதும், தனக்கு தெரிந்த நண்பரின் அலுவலகத்தில் ஒரே வாரத்திற்குள் அவளுக்கொரு வேலைக்கு ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டான் திலகன்.

"திலக்..."

"ம்..."

"உங்க எம்.டி. எப்படி இருக்கார்?"

"நந்தகுமாரை கேக்கறியா?"

"ஆமாம்...!"

"இப்போதான் அவனைப் பத்தி பேச்சே எடுக்காதேன்னு சொன்னே!"

"இல்லே திலக்! நான் மறுத்ததும் அவர் முகத்தில் தெரிந்த வேதனை... நிச்சயம் ரொம்ப நாளைக்கு அதிலிருந்து மீளமாட்டார் என்றே தோன்றுகிறது. பயமாகவும் இருக்கிறது!"

"மண்டு... இதில் உன் தவறென்ன இருக்கிறது? நீயேன் பயப்பட வேண்டும்?"

"சரி... பயப்படலை... சொல்லேன்... எப்போதும் போல் கலகலப்பாக இருக்கிறாரா?"

"நந்து... பணக்காரர்களை பத்தி நீ சரியா புரிஞ்சுக்கலை. இந்த நந்தினி இல்லாவிட்டால்... இன்னொரு சுகந்தி! அவன் இந்த சம்பவத்தால் கவலைப்பட்டதாகவே தெரியவில்லை. இப்போதும் சந்தோசமாகத்தான் இருக்கிறான்!"

திலகன் பெரிய பொய்யை மனதறிந்து சொன்னான். நந்தகுமார் அலுவலகம் வந்தே பதினைந்து நாட்களாகிவிட்டன. திலகனை தவிர வேறு யாருக்கும் அதன் காரணம் தெரியவில்லை. மோகனுக்கு மட்டும் விசயத்தை சொல்லியிருந்தான் திலகன்.

உண்மையை சொன்னால்... நந்தினியின் மனம் கஷ்டப்படும். ஒரு நல்ல மாலைப் பொழுது வீணாய் போய்விடும்.

மீனாட்சி பாட்டியிடம் நந்தினியைப் பற்றி இரண்டொரு நாட்

ளுக்கு முன்புதான் சொல்லியிருந்தான். உடனே அவனை பார்த்தே ஆகவேண்டும் என்று வற்புறுத்த... இதோ. இப்போது தன் வீட்டிற்கு தான் அழைத்துச் செல்கிறான்.

"உங்க பாட்டி எப்படி திலக்? என்னை அவங்களுக்கு பிடிக்குமா?"

"இன்னும் அஞ்சு நிமிடத்தில வீடு வந்திடும்... அப்ப நீயே புரிஞ்சிப்பே...!"

"இதிலென்ன சஸ்பென்ஸ்?" நறுக்கென்று அவன் இடுப்பைக் கிள்ள...

"ஆவ்..." என அலறினான்.

வீடு வந்து சேர்ந்தார்கள்.

சிறிய வீடுதான்! ஆனாலும் கச்சிதமாக. சுத்தமாக இருந்தது.

மீனாட்சி பாட்டி நந்தினியை பார்த்து அசந்து நின்றுவிட்டாள்.

"டேய்... திலகா... தங்கவிக்கிரகம் மாதிரி இருக்காடா... உம் பேரென்னமா?" என்றபடி அவள் முகத்தை வழித்து திருஷ்டி கழித்தாள்.

"நந்தினி...!"

"சொந்த ஊரு?

"இதேதான்!"

"அம்மா, அப்பாவுக்கு திலகனைப் பத்தி தெரியுமா?"

"இல்லே... கூடிய சீக்கிரம் தெரியப்படுத்திடுவேன்!"

"சீக்கிரம் சொல்லிடும்மா... நீ சீக்கிரம் இந்த வீட்டுக்கு வரணும்! கூடபொறந்தவங்க எத்தனை பேர்?"

"ரெண்டு தங்கச்சிங்க மட்டும்தான்!"

"அடக்கடவுளே...மூணும் பொட்டபுள்ளைங்களா? இந்த காலத்துல ஒரு பொண்ணை கரையேத்தவே உன்னைப்பிடி, என்னைப்பிடின்னு கண்ணும்,முழியும் பிதுங்கிப் போகுது! நீ கட்டின சேலையோட வாம்மா! என் பேரன் உன்னை நகை போட்டு அழகு பார்ப்பான். பாவம்... அந்த நகை இருந்தா மத்த பொண்ணுங்களுக்கு போடலாமில்லையா?"

"பாட்டி...!" உணர்ச்சிவசப்பட்டு மீனாட்சியின் கைகளை பற்றி... கண்கலங்கினாள்.

"அடி அசடே... முதன்முதலா வீட்டுக்கு வந்திருக்கே! யாராச்சும் அழுவாங்களா இப்படி! கண்ணை தொடைச்சிக்க! அதோ... அந்த அறையில்தான் திலகன் இருக்கான். போய் பேசிட்டிரு... நான் பலகாரம் எடுத்திட்டு வாரேன்!"

"பாட்டி... நான் கூடமாட ஏதாச்சும் உதவி..."



"போம்மா... அப்புறம் அந்த முரட்டுப்பய எங்கிட்ட சண்டைக்கு வந்திடப் போறான். போ...!" சிரித்தபடி அடுக்களைக்குள் புகுந்து கொண்டாள் மீனாட்சி.

"திலக்... உங்க பாட்டியை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு!"

"அதுக்குள்ளே ஐஸ் வைச்சிட்டியா?" கிண்டலாய் கேட்டான்.

"எல்லாம் என் முகராசிதான்!"

"எனக்கு ரொம்ப... ரொம்ப சந்தோசமா இருக்கு நந்தினி... என் வாழ்க்கையில அதிகமா எதிர்பார்ப்பில்லே! ஆனால்,ரெண்டே ரெண்டு இலட்சியம் மட்டும் இருந்தது. ஒண்ணு. நான் விரும்பிய நந்தினி எனக்கு கிடைக்கணும்!"

"ம்... அப்புறம்?" கர்வ புன்னகை இதழ்கடையோரம் உற்பத்தியாக, கைகளை மார்புக்கு குறுக்கே கட்டிக்கொண்டு கேட்டாள்.

"பெரிய பணக்காரனா ஆகணும்!"

"என்னது?"

"உண்மைதான் நந்தினி! அதுக்காகத்தான் வியாபாரத்தைப் பத்தி படிச்சேன்! அந்த அறிவைக்கொண்டு வியாபாரம் பண்ணி, சமூகத்துல பெரிய ஆளா வரணும்னு! ஆனால் என்னிடம் பணமில்லை. வங்கியில் கடன் கேட்டா, செக்யூரிட்டி கேக்கறான். அந்த அளவுக்கு உத்தரவாதம் தர்ற பணக்கார நண்பர்கள் யாரும் எனக்கில்லை. குறைஞ்சது தற்போது மூணு இலட்சமாவது கிடைத்தால் போதும்... வியாபாரத்தை தொடங்கிடுவேன்!"

"........."

"என்ன அப்படி பார்க்கறே?"

"இந்த கூமுட்டைக்குள்ளே இப்படியொரு இலட்சியமா?"

"என்ன கிண்டலா? இன்னும் எண்ணி நாலே மாசம்தான். நான் நினைச்சதை சாதிச்சிகாட்டறேனா இல்லையா பார்!"

"பணம்? கொள்ளையடிக்கப் போறீங்களா?"

"உம்... திருடுவேன்...!"

"அப்புறம் திருடு என் ராசா! முதல்ல வந்து சாப்பிடுங்க!" பாட்டி வந்து அழைத்தாள்.

இருவரையும் உட்கார வைத்து பரிமாறினாள்.

பால் கொழுக்கட்டை, சவ்வரிசி பாயாசம், தேங்காய் பர்பி என அமர்க்களப்படுத்தினாள்.

விடைபெற்ற நந்தினியை அன்புடன் கையை பற்றி தன் மகள்

புகைப்படத்தருகே நிற்கவைத்தாள்.

"நர்மதா... பார்த்தியா? உன் மருமகள்... உனக்குப் பிடிச்சிருக்கா? பாவி... எதையும் இருந்து பார்க்காமல் போய் சேர்ந்துட்டியே...!" கண்களை துடைத்துக்கொண்ட மீனாட்சி கையில் வைத்திருந்த சிறிய நகைப்பெட்டியை திறந்து பவளம் பதித்த மோதிரத்தை எடுத்தாள்.

"திலகா... இதை நந்தினி விரல்ல மாட்டிவிடு!"

"பாட்டி... என்ன இது?" நந்தினி கேள்வியாய் பார்த்தாள்.

"இது திலகாவோட அம்மா போட்டிருந்த மோதிரம். பெண்ணுக்குப் பொன்னிட்டுப் பார்! சுவருக்கு மண்ணிட்டுப் பார்னு சும்மாவா சொன்னாங்க? மறுக்காமல் வாங்கிக்கம்மா!"

"பாட்டி... உங்க அன்பு என்னை ரொம்ப நெகிழ வைக்கிறது. இருந்தாலும் இதை வாங்கிக்க மறுக்கிறதுக்கு மன்னியுங்கள்! முறைப்படி மருமகளா இந்த வீட்டுக்கு வந்தபிறகு... இதை வாங்கிக்கறேன்!"

"நான் உன்னை இந்த வீட்டு மருமகளா எப்பவோ நினைச்சாச்சு!"

"இல்லே பாட்டி! இதை வாங்கினாலும் வீட்டுக்குத் தெரியாமல் மறைச்சுதான் வைக்கணும். இன்னும் கொஞ்ச நாள் பொறுத்துக்குங்க! வீட்டில் இவரைப்பத்தி சொல்லிடறேன்... அதுக்கப்புறம் நிச்சயம் வாங்கிப்பேன்...!"

"பணத்துக்கும், பொன்னுக்கும் ஆசைப்படாத பெண்! நர்மதா... அற்புதமான பெண்ணை இந்த வீட்டுக்கு கொண்டுவந்து சேர்த்திருக்கிறாய்!"

"சரி... இருட்டிப்போச்சு! திலகா பத்திரமா இவளை கொண்டு விட்டுட்டு வா!"

இருவரும் ஒரு சேர கிளம்பினர்.

அந்த ஜோடி பொருத்தத்தை இமைக்காமல் பார்த்து ரசித்தாள் மீனாட்சி.

"ஏன் திலக்... உங்க அம்மா எப்படி இறந்தாங்க?"

"நான் பிறந்ததும் அவங்க இறந்திட்டதா பாட்டி சொல்வா...?"

"அப்போ..."

"நான் அம்மா முகத்தை போட்டோவில் மட்டும்தான் பார்த்திருக்கிறேன்!"

"உங்க அப்பா?"

"அம்மாவுக்கு முன்னேயே ஏதோ ஒரு விபத்துல இறந்துட்டாராம்! பாட்டி மட்டும் இல்லேன்னா... இந்த திலகன் இல்லை. எப்படி



எல்லாமோ சிரமப்பட்டு படிக்க வைச்சு ஆளாக்கியிருக்கா! என்மேல அலாதி பிரியம் அவளுக்கு. அப்பா மேல ஏதோ கோபம் போலிருக்கு. அவர் போட்டோவெல்லாம் கிழிச்சி போட்டுட்டாளாம். அவரைப் பத்தி கேட்டாலே எதையும் பேசமாட்டா! நானும் கேக்கறதில்லே... இருந்தாலும் அப்பா முகத்தை கூட பார்க்காத துர்திருஷ்டசாலியாகி விட்டேன் நந்தினி!"

"திலக்..." அவன் தோளை அழுத்தினாள்.

"உங்கப்பா அம்மாகிட்டே கிடைக்காத அன்பை எல்லாம் சேர்த்து நான் தர்றேன் திலக்... நான் தர்றேன்...!"

துரைக்கண்ணு திரைச்சீலையை விலக்கி மெல்ல எட்டிப் பார்த்தார்.

மோட்டுவளையைப் பார்த்தபடி சிகரெட்டாய் ஊதித்தள்ளிக் கொண்டிருந்தான், நந்தகுமார்.

கண்களில் வெறுமை! கருமை!

மழமழவென்று அமுல்பேபி போல் இருந்த கன்னத்தில் கத்தி படாததில்... புற்கள் முளைத்து நோயாளி போலிருந்தான். குளிப்பது இல்லை. சாப்பிடுவதில்லை. இதோ காலையில் வைத்த டிபன்கூட சிந்தப்படாமல், எப்படி வைக்கப்பட்டிருந்ததோ... அதே பவித்ரதோடு தொடாமல் இருந்தது.

எப்போதும் சிந்தனை! அலுவலகம் சென்றே வாரக் கணக்கில் ஓடிவிட்டது. அறையினுள் நுழைந்தாலோ எரிந்து விழுந்தான். மடமடவென்று ஆங்கிலத்தில் திட்டி தீர்த்தான்.

'ஏன்... எதனால்? தொழிலில் நட்டமா? அதைக் கண்டு துவண்டு விடுபவனில்லையே இவன்? கோடிக்கணக்கில் பணம் குவிந்திருக்க... ஒரு சாதாரண நட்டத்தில் முடங்கிவிடும் கோழையல்லவே!


வேறு என்ன? இந்தளவிற்கு தன்னைத்தானே சிறைப்படுத்தி வருத்திக்கொள்ளுமளவிற்கு என்ன பாதிப்பு நேர்ந்தது? கேட்டாலும் சொல்லமாட்டான். பெரியப்பாவிற்கு தெரியப்படுத்தலாமா? பிறகு என்னிடம் அனுமதி கேட்காமல் ஏன் சொன்னாய்? என்று சண்டையிடுவானோ?'

'கடவுளே... என்னதான் செய்வது?' பெருமூச்சுவிட்டபடி அவன் அறைக்கதவை தட்டிவிட்டு உள்ளே நுழைந்தார் துரைக்கண்ணு.

"என்ன வேணும்?" எரிந்துவிடுவதைப் போல் அவரைப் பார்த்தான்.

"தம்பி... சாப்பிடலியா?"

"இல்லை..."



"இப்படியே இருந்தா உடம்பு என்னத்துக்காகும்!"
"நானே கவலைப்படலே... உனக்கேன் கவலை?"
"தம்பி... மதிய சாப்பாடு...!"
"எனக்கு வேண்டாம்!"
"நீங்க இப்படி இருக்கிறது எனக்கு பயமாயிருக்கு தம்பி!"
"இதுதான் உனக்கு கடைசி எச்சரிக்கை... என்னை தனிமையில் விடு!"
"தம்பி..."
"போகப்போறியா இல்லையா? இது வீடா இல்லை சுடுகாடா? ச்சே!"

அவன் உதைத்ததில் கண்ணாடி டம்ப்ளர் உடைந்துசிதறியது. புயலாய் எழுந்து வெளியேறி அதே வேகத்தில் காரை உசுப்பி புறப்பட்டான்.

'நந்தினி... என்னையா வேண்டாமென்றாய்? எப்படி மனசு வந்தது? என் மனசு புரியவில்லையா?'

'என் மனதில் ஏற்கனவே ஒருவருக்கு இடம் கொடுத்துவிட்டேன்!' நந்தினியின் குரல் காதில் முட்டி மோதி எதிரொலித்தது.

'இல்லை... நந்தினி... அதெல்லாம் கனவாய் இருக்கக்கூடாதா? என்னால் தாங்கிக்கொள்ள முடியவில்லை நந்தினி! உனக்கொன்று தெரியுமா? நான் இதுவரை யாரையும் காதலித்ததில்லை. எந்த பெண்ணும் உள்ளத்தில் புகவில்லை– உன்னைத் தவிர! ஆனால், எனக்கு மட்டும் உன் இதயக் கதவை மூடிவிட்டாயே நந்தினி!' மனம் ஓலமிட்டது.

கார் சிக்னலில் நின்றது. எதேச்சையாய் பார்வையை வலப்புறம் திருப்பியவனின் இதயம் அறுந்த பல்லியின் வாலாய் துடித்தது.

காரணம்... இளைஞனின் இடுப்பை அணைத்தபடி பைக்கில் நந்தினி!

## 10

அவன் எப்படி வீடு வந்து சேர்ந்தான் என்பது அவனுக்கே புரியாத விந்தை.

நந்தினி இன்னொருவனை காதலிப்பதை அறிந்த நம்பினாலும் மனம் மறுத்தது.

ஆனால், இன்று... எதை பார்க்கக்கூடாதோ... அதைப் பார்க்க நேர்ந்துவிட்டது.

என் நந்தினி... இன்னொருவனுடன்... நெருக்கமாய்...

இல்லை... இல்லை... இல்லை...!

'நந்தினி என்ன இல்லை என்னிடம்? என்னிடம் இல்லாத எது

நிலவிடம் கண்டாய்? அவளைவிட எல்லாவற்றிலும் பலமடங்கு நான் உயர்ந்தவன். பணத்தில், அழகில், அந்தஸ்தில்...

'என்னிடம் கைநீட்டி சம்பளம் வாங்குபவள்... அவளைவிட நான் எதில் குறைந்துபோனேன்?'

நந்தகுமாருக்கே தெரியாமல் ஒளிந்திருந்த இன்னொரு நந்தகுமார் இப்போது வெளிப்பட்டான்.

ஜாதி, அந்தஸ்து, அழகையெல்லாம் எடைபோட்டான்.

பகலில் தெரியாத நட்சத்திரங்கள் இரவில், இருட்டில் பிரகாசிக்கின்றன. மன இருளில் மறைந்திருக்கும் உணர்ச்சிகளும் இப்படித்தான் தனிமையில் வெளிவருகின்றன.

விளைவு?

முன்னிலும் அதிகமாய் தன்னை உலுக்கிக்கொண்டான். மதுவின் துணையின்றி ஒரு நிமிடமும் தன்னால் இருக்கமுடியாது என்றளவிற்கு தண்ணீரிலேயே மிதந்தான்.

ஒருநாள்... அந்த போதையிலேயே விஸ்கி பாட்டிலை உடைத்து... தன் மணிக்கட்டை சேதப்படுத்திக்கொண்டான்.

இரத்தம் பெருகி வழிந்து... மயக்கமாகி... கீழே விழ...

வந்து பார்த்த துரைக்கண்ணு பதறிப்போய் மருத்துவமனைக்கு தூக்கிக்கொண்டு ஓடியது மட்டுமல்லாது... ஆனது ஆகட்டும், வேலையே போனால் போகட்டும் என்று லண்டனுக்கு, நந்தகுமாரின் அப்பா ராம்குமாருக்கு போன் பண்ணி விபரத்தை கூறிவிட்டார்.

**ந**ந்தகுமார் இருந்த நிலையைப் பார்த்து ராம்குமாரும், சங்கீதாவும் துடிதுடித்துப் போயினர்.

"நந்தா... என்னடாது... என்ன கோலம் இது?" ராம்குமார் மனம் பதறியது.

"அய்யோ... எப்படியிருந்த என் பிள்ளை இப்படி பைத்தியக்காரன் மாதிரி கெடக்கிறான்? நந்தா... என்னப்பா? என்னாச்சு? எதுக்காக தற்கொலை முயற்சி பண்ணினே? என்னப்பா குறை வைச்சோம்? எதுக்காக இப்படி எங்களை உயிரோட கொல்றே?"

நந்தகுமாரின் பார்வை எங்கோ வெறித்தது.

ராம்குமார் அன்பாய் அவன் தோள் சேர்த்தணைத்தார்.

"சொல்லு நந்தா... உன்னை அடியோடு வாழ்க்கையே வெறுக்கவைச்ச காரணத்தை சொல்லு... லண்டன்லேர்ந்து பதறியடிச்சிட்டு ஓடிவர்றோம். எல்லாத்தையும் அப்படி அப்படியே போட்டுட்டு..."

அப்போதும் வாய் திறக்கவில்லை.

"இங்கே பாருங்க! நான் இனி லண்டன் வரமாட்டேன். இனி என்



மகனை ஒரு நிமிசம்கூட பிரிஞ்சி இருக்கமாட்டேன்..."

"நானும் அந்த முடிவுக்கு எப்பவோ வந்தாச்சு! சொல்லு நந்தா! பிரச்சினை என்னன்னு சொன்னா... நாங்க தீர்த்துவைக்க மாட்டோமா?"

நந்தகுமார் அப்பாவை ஏறிட்டான். கண்கள் கண்ணீரில் மின்னியது.

"உங்களால முடியாதுப்பா...!"

"முடியும்... முடிச்சுக் காட்டுவேன்... சொல்லு!"

"எல்லாம் கைமீறிப் போயாச்சு..."

"எது?"

"........."

"யாரந்த பொண்ணு நந்தா?"

"அ...ப்...பா!" அதிர்வாய் பார்த்தான்.

மென்மையாய் சிரித்து அவன் தலையை கோதிவிட்டார் ராம்குமார்.

"எப்படித் தெரியும்னு பார்க்கறியா? எதுக்கும் அசராத ஆண் பிள்ளையை அசைச்சு, கண்ணீர் விடவைக்கிற சக்தி ஒரு பொண்ணுக்கு மட்டும்தான் இருக்கு. யாருப்பா அவள்?"

"நந்தினி...!"

மெல்ல... அனைத்தையும் சொல்லி முடித்தான்.

"எனக்கு... என்னால் நந்தினி இல்லாமல் வாழ முடியாதுப்பா!"

பெற்றோர் கவலையாய் பார்த்தனர்.

"உன்னை வேண்டாம்னு சொன்னவளை நினைக்கறதே தப்பு. அவளுக்காக உன் உயிரையே இழக்கத் துணிஞ்சியே அது முட்டாள்தனம். நீ ஒரு போட்டின்னா... வரிசையா பொண்களை கொண்டுவந்து நிறுத்தறேன். கேவலம்... அவளை நினைச்சி..."

"அப்பா... ப்ளீஸ்... என் நந்தினியை திட்டாதீங்க! அவளை கேவலமா பேசாதீங்க! மீறிப்பேசினா... நான் உயிரோட இருக்கமாட்டேன்! எனக்கு அவதான் எல்லாமே! அவள் எனக்கு கிடைக்கலேன்னாலும் பரவாயில்லை... நான் வேற யாரையும் கல்யாணம் பண்ணிக்கமாட்டேன்!"

அவன் உறுதியாய் சொல்லவும் திகைத்துப் போயினர் இருவரும்.

"நந்தா..." சங்கீதா மகனின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

"நான் போறேன்... அந்த நந்தினி வீட்டுக்கே போய் அவளை கெஞ்சிக் கேட்டாவது உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன்..."

"சமாதானம் பண்றியாம்மா?" விரக்தியாய் சிரித்தான்.

"சத்தியம் பண்றேன் நந்தா... உன் மனசப்படியே நடத்திக் காட்டறேன்!"

ராம்குமார் மனைவியை பார்த்தப் பார்வையில் வியப்பு இருந்தது

ராணியால் நம்பவே முடியவில்லை! மீண்டும் தன் கண்களை கசக்கிப் பார்த்தாள்.

'நடப்பதெல்லாம் உண்மைதானா?'

நந்தினியின் தந்தைக்கும் மகிழ்ச்சி பிடிபடவில்லை. 'எவ்வளவு பெரிய கோடீசுவர சம்மந்தம்? என் மகள் அதிருஷ்டசாலி! நல்லவேளை... இவன்பாட்டுக்கு அண்ணன் மகனுக்கு என்று கட்டாயப்படுத்தி நிச்சயதார்த்தம் அது இது என்று பண்ணாமல் விட்டாளே... எல்லாம் கடவுள் சித்தம்!'

சோபாவில் அமர்ந்திருந்த சங்கீதாவைப் பார்த்தார்.

'பெரிய பணக்காரியாய் இருந்தாலும் எவ்வளவு எளிமையாய் இருக்கிறாள்? சிறிய பார்டரிட்ட காஞ்சிபுரம் பட்டுச்சேலை! கழுத்தில் ஓரிரண்டு நகைகள். கையில் காதில் கூட அதிகமில்லை. சிறிய கொண்டை! சுற்றி மல்லிகைப்பூ! ஒன்பது வெள்ளித்தட்டுகளில் பூ, பழம், சேலை என்று சம்பிரதாய பொருட்கள். வாசலில் காண்டசா கார்! உடன் யாருமில்லை. துரைக்கண்ணு மட்டுமே துணைக்கு வந்திருந்தார்.

"என் கணவருக்கு அவசர வேலை. அதனால் இப்போது வரவில்லை. என் மகனுக்கு உங்கள் மகள் நந்தினியை மிகவும் பிடித்துவிட்டது. அவன் கேட்டு எதையும் நாங்கள் மறுத்ததில்லை. கல்யாண விசயத்திலும் அவன் விருப்பமே எங்கள் விருப்பமும். எனவே மனப்பூர்வமாய் உங்கள் மகளை பெண் கேட்டு வந்திருக்கிறேன்!"

"அம்மா... நாங்கள் சாதாரண குடும்பத்தை சேர்ந்தவர்கள்."

"தெரியும்... இந்த வீட்டை தவிர வேறெதுவும் சொத்துக் கிடையாது. அய்யா... நான் பெண்ணை மட்டும்தான் கேட்டு வந்திருக்கிறேன். கடவுள் அருளால் அள்ள அள்ளக் குறையாத செல்வம் எங்களிடம் இருக்கிறது. உங்களின் மற்ற பெண்களின் திருமணத்தை சிரமமேயின்றி நந்தினியே நடத்திவிடமாட்டாளா என்ன?" சங்கீதா இனிமையாய் பேசினாள்.

"நாங்க ரொம்ப புண்ணியம் செய்திருக்கோம்மா!" ராணியும் நெக்குருகிப் போனாள்.

"பெண்ணை பார்க்கலாமா?"

"அவள் அலுவலகத்திலிருந்து இன்னும் வரவில்லை. வரும் நேரம்தான்!"

"யாருப்பா வந்திருப்பது?" என்றபடி உள்ளே அப்போதுதான் வந்துகொண்டிருந்தாள், நந்தினி.

"இவள் நந்தினி!" அப்பா சொன்னார்.

'மையல் மதிமயங்கி போனதற்கு காரணம் இல்லாமல் இல்லை. ஊரில் உள்ள அழகையெல்லாம் ஒரே இடத்தில் குவித்ததைப் போல் என்னவொரு அழகு!' நந்தினியைப் பார்த்து வியந்தாள் சங்கீதா.

"அப்பா... இவங்க யாருன்னே சொல்லலியே!" வாசலில் நின்றிருந்த காரைப் பார்த்ததும் புரிந்தது. அது நந்தகுமாரின் கார் என்று! உள்ளே நுழைந்ததும்... சூழ்நிலை... எதற்காக வந்திருக்கிறார்கள் என்று புரியவைக்க... ஆடிப்போனாள் என்றாலும் சுதாரித்துக்கொண்டாள்.

"இவங்க... உன் முதலாளியோட அம்மா..."

"யாரு? மிஸ்டர் சேகரோட அம்மாவா?"

"என் மகன் பேரு நந்தகுமார்!"

"ஓ... பழைய பாசை பற்றி சொல்றீங்களா? நான் இப்போ வேற இடத்துலே இல்லே வேலைக்குப் போறேன்! வணக்கம்மா!"

"வணக்கம்! உக்காரு நந்தினி!"

"எதுக்காக இவ்வளவு பெரிய பணக்காரங்க எங்க வீடு தேடி...?"

"பொண்ணு பார்க்க வந்தேன்!"

"யாரு... என் தங்கச்சியையா?"

"உன்னை!"

"என்னையா? நா...நான்தான் அப்பவே உங்க மகன்கிட்டே சொல்லிட்டேனே... எனக்கு இதிலே விருப்பமில்லே... என்னை மன்னியுங்கள்!"

"நந்தினி!" அப்பா அதட்டினார்.

"யார்கிட்டே என்ன பேசறோம்னு தெரிஞ்சி பேசு!"

"நீ முதல்ல உள்ளே வாடி!" அம்மா தரதரவென அவள் கையைப் பற்றி இழுத்துப் போனாள்.

சங்கீதா ஓரளவு இதையெல்லாம் எதிர்பார்த்தே வந்ததால் அமைதியாக இருந்தாள்.

"பைத்தியமா பிடிச்சிருக்கு உனக்கு?"

"........."

"எப்பேர்ப்பட்ட இடம்? கனவிலேயும் நினைச்சுப் பார்க்கமுடியாத வாழ்க்கை... கிடைக்குமாடி உனக்கு!"

"கிடைக்க வேண்டாம்!"

"நந்தினி..."

"ப்ளீஸ்ம்மா...! கல்யாண விசயத்திலே யாரும் வற்புறுத்த வேண்டாம்... நான் ஏற்கனவே ஒருத்தரை என் வாழ்க்கைத் துணைவரா தேர்ந்தெடுத்திட்டேன். அவரைதான் கல்யாணம் பண்ணிப்பேன்!"

"பளார்...!" கன்னம் சிவக்க அறைந்தாள் ராணி!

"காதலா?"

"ஏன் கூடாதா? இதோ அத்தம்மா... எதுக்கு வந்திருக்காங்க?

அவங்க பின்னை காதலிச்சதாலே! ஏன், உன் அண்ணன் மகன் என் பின்னாடி நாய் போல அலைஞ்சானே? அது ஏன்? அதுவும் காதல் தான்! அந்த காதல் எனக்கு வரக்கூடாதா?"

"படிச்சிட்ட திமிரா? இதோ பார்! வாயை மூடிட்டு நாங்க சொல்றவனுக்கு கழுத்தை நீட்டு! இதனால் உன் தங்கைகளுக்கும் ஒரு நல்ல வழி பிறக்கும்டி!" அம்மா தவமாய் கேட்டாள்.

"தங்கைங்களை கரையேத்தற பொறுப்பை நான் என்னிக்கும் மறக்க மாட்டேம்மா! அது என் கடமை! அந்த கடமையை நிறைவேத்த எனக்கு வேலையிருக்கு. இந்த தாலி வேணாம். அந்தம்மாவை அனுப்பு!"

"மெதுவா பேசடி!"

"ஏன்? நீ சொல்லமாட்டே... நானே பேசிக்கிறேன்!" அறையை விட்டு வெளியே வந்தவள் சங்கீதாவை பார்த்து கும்பிட்டாள்.

"இதுலே எனக்கு விருப்பமில்லேம்மா... உங்க மகனுக்கு என்னை விட நல்ல பெண்ணா நிச்சயம் கிடைப்பாள்..."

"நந்தினி... நல்லா யோசிச்சி...!"

"ரொம்பவே யோசிச்சி... உங்க மகன்கிட்டே என் பதிலை சொல்லியாச்சு... ப்ளீஸ்!"

அதற்குமேல் அங்கிருக்க சங்கீதாவால் முடியவில்லை. தன் மகன் முகம் கண்முன் தெரிய... உதடுகள் துடிக்க, அவமான உணர்வோடும், ஒருவித பயத்துடனும் வெளியேறினாள்.

'நந்தாவுக்கு என்ன பதிலை சொல்வது?'

உள்ளே குடும்பம் மொத்தமும் கைகளாலும், சொற்களாலும் வைசபாடுவது காதில் விழுந்தது.

"நீ... அலுவலகம் போய் சம்பாதிச்சி கிழிச்சது போதும். நாளையிலேர்ந்து வீட்டுப் படி தாண்டினியோ தெரியும் சேதி? எவனோ ஒரு பிச்சைக்கார பயலுக்கு வக்காலத்து வாங்கறியா? காதலுக்கு கண்ணில்லை அல்லவா? அந்த கண்ணே இல்லாமல் பண்றேன் பார்!"

பணக்கார சம்பந்தம் கைநழுவிப் போன ஏமாற்றம் நந்தினியின் அப்பாவின் பேச்சில் தெரிந்தது.

நந்தினி கண்களை இறுக மூடிக்கொண்டாள். கண்ணீர் வழிந்தோடியது.

'திலகன்... என்னை யாராலும் உங்களிடமிருந்து பிரிக்க முடியாது திலகன்!' அவள் உதடுகள் முணுமுணுத்தது.

ஆனால்...!!



# 11

தூக்கம் வராமல் புரண்டுகொண்டிருந்தார் ராம்குமார். பலவித சிந்தனைகள்... இதயத்தை பாரமாய் கனக்க செய்தன.

திடீரென்று உள்ளுணர்வு உறுத்தியது. படுக்கையைவிட்டு எழுந்தவர் தன்னிச்சையாய் நந்குமார் அறைக்குப் போனார்.

அங்கே...

"நந்தா...!" என்று கத்தியபடி ஓடிச்சென்று அவன் கையிலிருந்த பாட்டிலை தட்டிவிட்டார்.

பாட்டில் உடைந்து நஞ்சு தெறித்தது.

நடுங்கும் கைகளோடு மகனை இழுத்து அணைத்துக்கொண்டார்.

"என்ன காரியம் பண்றே நந்தா?"

"எம்ப்பா... எதுக்காக என்னை காப்பாத்தினீங்க!" சிறுகுழந்தையாய் விக்கி விக்கி அழுதான்.

"ராணி முத்து" மாதம் இருமுறை

இப்போது "ராணி முத்து" மாதம் இருமுறை வெளிவருகிறது. அக்டோபர் 16 இதழில்

தேவிபாலா எழுதிய

கண்ணை நம்பாதே

நாவல் இடம்பெறுகிறது.

"செத்துப்போயிட்டா... எல்லாம் சரியாயிடுமா?"

"இல்லேப்பா... நந்தினி இல்லாமல் என்னால் வாழமுடியாதுப்பா! அம்மா கேட்டும்கூட அவள் சம்மதிக்கலேப்பா... எனக்கு எதுலேப்பா தகுதி குறைஞ்சுபோச்சே? அந்த நிலவனைவிட எதுலே குறைஞ்சு போயிட்டேன்?"

செயலில் மட்டுமல்லாது பேச்சில்கூட விவேகம் குன்றி சிறுவனைப் போல் பேசினான் நந்தகுமார்.

என் நந்தா எவ்வளவு பெரிய புத்திசாலி? படிப்பில், விளையாட்டில் என்று எத்தனை பரிசுகள் வாங்கிக் குவித்தான்? சொல்வதை டக்கென்று புரிந்துக்கொண்டு செயல்படும் அறிவாளி! மீன் வாங்கித் தரும் தகப்பனைவிட, மீன் பிடிக்க கற்றுத்தரும் தகப்பனே சிறந்தவன். அப்படியொரு சிறந்த தகப்பனாய்... மகனுக்கு எல்லாவற்றையும் கற்றுத்தந்தார்.

அப்பேர்பட்ட பிள்ளை... இன்று காதல் போதைக்கு ஆட்பட்டு, அடிபட்டு கிடக்கிறானே! காதலித்து தோல்வியடையலாம். அது ஒரு சுகமான வேதனை. ஆனால் எதிர்பால் தன்னை காதலிக்காத ஒருதலை காதல் மரண வேதனையல்லவா? என் பிள்ளையை இதிலிருந்து மீட்கவேண்டும். அதற்காக எப்படிப்பட்ட காரியமாயினும் அதில் இறங்கியாக வேண்டும்.

முன்னால் குதிக்க வேண்டுமானால்... கொஞ்சம் பின்னால் போய்த்தான் ஆகவேண்டும்.

"நந்தா... போய் முகத்தை கழுவிட்டு வா! அப்படியே... உன் கோழைத்தனமான தற்கொலை எண்ணத்தையும் சேர்த்து!"

அசையாமல் நின்றிருந்தான் நந்தகுமார்.

ராம்குமாரே அவனை வாஷ்பேசினுக்கு அழைத்துச் சென்று முகத்தை கழுவித் துடைத்தார்.

பனிச்சிட்ட முகத்தை மீறிய சோகம் அப்பியிருந்து.

"உன்கிட்டே கொஞ்சம் பேசணும் நந்தா... உட்கார்!"

அவர் எதிரே சோபாவில் அமர்ந்தான்.

"நந்தினியை எவ்வளவு காலமா உனக்குத் தெரியும்?"

"சென்னை வந்தபிறகு..."

"எப்போதிருந்து அவளை காதலிக்க ஆரம்பிச்சே?"

"______"

"சொல்லுப்பா! என்னை உன் நண்பனா நினைச்சி சொல்லு.



உன்னைப்பத்தி, அவளைப்பத்தி, சுத்தி உள்ளவங்களைப் பத்தியெல்லாம் தெரிஞ்சாதான்... உனக்கும் என்ன செஞ்சா... உன் துக்கம் தீரும்ங்கற வழிய பத்தி யோசிக்க முடியும். சொல்லு நந்தா!

"முதல் முதலா அவளை நம்ம ஆபீஸ்ல பார்த்த அன்னையில இருந்தே..."

"அப்படியானால் கண்டதும் காதல்! இதை நான் எப்படி எடுத்துக்கறது? அவளோட பழகாம, கொள்ளாம, அவமனசுல என்ன இருக்கிறதுன்னு தெரிஞ்சுக்காம... அதெப்படிப்பா... அப்படியொரு திடீர் காதல்? அவக்கிட்ட எதுதான் உன்னை இந்த அளவுக்கு பாதிச்சது!"

"அழகு... அவள்கிட்ட கொட்டிக்கிடந்த தேவ அழகு! பார்த்ததும் தடாலடியா எதிராளியை வீழ்த்தற அழகு!"

"ஓ... புரியுது! நந்தினி கொஞ்சம் கறுப்பாயிருந்து மூக்கு சப்பையா இருந்து பார்க்க சுமாரா இருந்திருந்தா... இந்த காதல் வந்திருக்காது... அப்படித்தானே?"

"............"

"உனக்குத் தேவை அவளோட அழகு! அவளைவிட அழகானப் பொண்ணை பார்த்து நான்... உனக்கு கட்டிவைக்கிறேன். என்ன சொல்றே?"

"இதை சொல்லவா... இத்தனை வியாக்கியானமும் கேள்விகளும்?" என்பது போல் ஒரு பார்வைப் பார்த்துவிட்டு எழுந்தான் நந்தகுமார்.

ராம்குமார் அவசரமாய் அவன் கரத்தைப்பற்றி மீண்டும் அமர வைத்தார்.

"அவசரப்பட்டா எப்படி நந்தா?"

"..............."

"அந்தப் பொண்ணு இன்னொருத்தனை காதலிக்கறப்ப... இதுக்கு எப்படிப்பா சம்மதிப்பா?"

"தேவலம்... மாசக்கணக்குல வேலை செய்து சம்பளம் வாங்கற... நம்மகிட்டே வேலை செய்யற வேலைக்காரனைவிட, நான் எதிலே தாழ்ந்துப் போயிட்டேன்? அவன்கிட்டே நான் தோற்பதா? எனக்கு கிடைக்காத அந்த அழகு பெட்டகம் அந்த பஞ்சப்பராரிக்கு கிடைப்பதா? இதைவிட மானக்கேடான விசயம் வேறில்லை. ஒன்னு நான் ஜெயிக்கணும் இல்லே சாகணும்! வேற வழி தெரியலேப்பா... எனக்கு!"

ராம்குமார் நெற்றியில் கவலைக் கோடுகள் அதிகமாய் தென்பட கண்களை மூடி யோசித்தார்.

"சரி... நந்தா... நான் எப்படியாவது நந்தினியை உனக்கு கல்யாணம் செஞ்சுவைச்சிட்டா மட்டும்.. சந்தோஷமா வாழ்ந்துடுவியா? அவள் உனக்கு உரிமையான பின்னால், பழசெல்லாம் கேட்டு, குடைந்து அந்த திலகன்கூட பழகிய நாட்களையெல்லாம் நினைவுப்படுத்தி வார்த்தையால சுடமாட்டேன்னு என்ன நிச்சயம்?"

"எல்லாமே தெரிஞ்சுதானப்பா... அவளை நேசிக்கிறேன். அப்படியெல்லாம் மோசமா நடந்துக்கற அளவுக்கு நான் மோசமானவனில்லேப்பா! சத்தியமா சொல்றேன்... அந்த மாதிரியெல்லாம் நான் நடந்துக்கவே மாட்டேன். அதுப்பத்தி ஒரு வார்த்தை பேசமாட்டேன்!"

"சரி... போய் தூங்கு!"

"அப்பா... எதுவுமே சொல்லாமல்..."

"நான் எதையும். சொல்லிட்டு செய்யறதில்லே. செஞ்சிட்டு சொல்றவன்!"

"அப்படின்னா..."

"நந்தினி உன் மனைவிதான்!" ராம்குமார் நிதானமாய் சொன்னார்.

நந்தகுமாருக்கு களிப்பில் கண்கள் ஈரமானது.

"என்ன பண்றதுன்னே புரியலே திலகன்! அப்பாவை எப்படியாவது சரிக்கட்டிடலாம்னு நம்பிக்கையா இருந்தேன். இப்ப என்னடான்னா, அவர்தான் எதிர்க்கிறதுல முதல் ஆளா இருக்கார். வீட்டில் யாருமே சரியா முகங்கொடுத்து பேசறதில்லை... என்ன பண்ணலாம் திலகன்?"

"எல்லாம் தெரிஞ்சிருந்தும் நந்தகுமாரோட அம்மா, அப்பா, உன்னை அவனுக்கு கட்டி வைச்சிடணும்னு செயல்ல இறங்கியிருக்கிறதை பார்க்கிறப்ப... நிலைமை கட்டுக்கு மீறி போகுதுன்னு தோணுது நந்தினி!"

"எப்படியோ... எனக்கு நீங்க வேணும். வேலைக்கு போகவேண்டாம்னு சொல்லிட்டாங்க. இப்பக்கூட கோவிலுக்கு போறேன்னுதான் உங்களைப் பார்க்க வந்தேன். அடிக்கடி வரமுடியாது திலக்! நான் வந்துடட்டுமா? ஒட்டுமொத்தமா வீட்டைவிட்டு வந்துடறேன் திலக்! பின்னே ஏதாவதொரு கோயில்ல கல்யாணம் பண்ணிப்போம். நீங்க சொன்ன ரெண்டு வருடமெல்லாம் காத்திருக்க முடியாது திலக்!"

"அவசரப்படாதே நந்தினி! ரெண்டு வருடம் வேண்டாம். ரெண்டு மாசம் மட்டுமாவது பொறுத்திரு! அதுக்குள்ள முக்கியமான சில



ஏற்பாடுகளை செய்து முடிச்சிடறேன். ஏன்னா... கல்யாணத்துக்குப் பிறகு தொடர்ந்து நான் அங்கே வேலை செய்ய முடியாது!"

"நீங்க சொல்றதும் சரிதான் திலக்! ரெண்டு மாசம்தானே... காத்திருக்கிறேன்... வரட்டுமா? நேரமாச்சு!"

திலகன் அவளை பிரிய மனமின்றி அவள் நெற்றியில் இதழை ஒற்றியெடுத்தான்.

"சார்... பெரியய்யா... உங்களை வரச்சொல்றார்!" பியூன் வந்து அழைத்ததும் திலகன் புறப்பட்டான்.

மகனுக்கு பதில் தந்தையே அலுவலகம் வந்து கணக்குகளை பார்த்தார். முன்னறிவிப்பின்றி திடீரென்று வந்துவிட்டார். எந்நேரமும் அவரிடமிருந்து அழைப்பு வருமென்று எதிர்பார்த்த திலகன், அதற்கேற்றார்போல் கோப்புகளை தயார் நிலையில் வைத்திருந்தான்.

மரியாதைக்கு கதவை தட்டிவிட்டு, உள்ளிருந்து அழைப்பு குரல் வந்தபிறகு உள்ளே போனான் திலகன்.

"வணக்கம் சார்!"

"வணக்கம்... நீங்கதான் திலகனா?" கேட்ட தொனியில் சற்றே காரம் தென்பட்டது.

ராம்குமார் அவனை கண்களால் அளந்தார்.

அந்த முகம், பணிவு, பார்வை... அவரை என்னவோ செய்தது. அவனை இதற்குமுன் எங்கோ பார்த்து பேசி பழகியது போல் ஒரு பிரமை.

திலகனுக்கும்கூட அவரைக் கண்டதும் காலில் விழுந்து வணங்க வேண்டும் போலிருந்தது.

அலுவலக சம்மந்தமாய் எல்லாம் பேசி முடித்தபின், மெல்ல, விசயத்திற்கு வந்தார்.

"மிஸ்டர் திலகன்... என் மகன் நந்தகுமார் ரொம்ப மனசொடிஞ்சு போயிருக்கான். காரணம் தெரியும்னு நினைக்கிறேன்...!"

"..............."

"அவன் எனக்கு ஒரே மகன்! அவனுக்கு ஒரு சிறு சிரமம் ஏற்பட்டால்கூட தாங்கிக்கொள்ளக்கூடிய சக்தி கிடையாது. அவன் கேட்டு இதுவரை எதையும் மறுத்தது இல்லை. இப்போது அவன் கேட்பது உயிருள்ள ஒரு பொருளை. அதை வாங்கித்தருவது எளிதுதான். என்றாலும், எனக்கு முன் அதை இன்னொருவர் வாங்கிவிட்டார். எப்பாடுபட்டாவது எவ்வளவு பணம் செலவழித்

நாலது வாங்கியே ஆகணும்னு நிலைமை!"

"..................."

"புரிஞ்சிருக்கும்னு நம்புகிறேன். சொல்லுங்க... எவ்வளவு பணம் வேணும்? எத்தனை லட்சம் வேணும்? வாங்கிக்கிட்டு ஒதுங்கிடுங்க அப்புறம் நந்தினியை எங்க வழிக்கு கொண்டுவருவது எளிது!"

"..........."

"ஒண்ணுமே பேசாமல் இருந்தா எப்படி திலகன்?"

"உங்கமேல நான் நிறைய மரியாதை வைச்சிருக்கேன். அதை கெடுத்துக்காதீங்க!"

கனீரென அறைந்தது அவன் பதில்.

"இதுதான் உன் முடிவா?"

"ஆமா சார்!"

"சரி... நீங்க போகலாம். இந்த சம்பவத்தை இந்த இடத்துலேயே மறந்துட்டு... போய் வேலையை பாருங்க...!"

"நன்றி சார்!"

வெளியேறிப் போனவனை குரூரமாய் பார்த்தார் ராம்குமார்.

"பாட்டிம்மா... நான் புறப்படறேன்!"

"திலகா... கொஞ்சம் நில்லு!"

"என்ன பாட்டிம்மா?"

கொஞ்சநாளா உன் முகமே சரியில்லே... என்னப்பா? நந்தினிகூட சண்டையா?"

"ப்ச்... அதெல்லாம் ஒண்ணுமில்லே!"

நடந்த சம்பவங்கள் எதுவும் பாட்டிக்கு தெரியாது. வருத்தப் படுவாள் என்று சொல்லவில்லை.


"சரி... இன்னைக்கு உன் பிறந்த நாள் அல்லவா? சாயந்திரம் வரும்போதுகூட நந்தினியை அழைச்சிட்டு வர்றியா? உனக்கு பிடித்த அயிட்டமெல்லாம் சமைக்கப் போறேன். அவளும் இருந்தா நல்லாருக்கும்!"

"இல்லே பாட்டி... அவளுக்கு... வரமுடியாது... அலுவலகத்துலே நிறைய வேலை..."

"உங்களுக்குள்ள என்னமோ சரியில்லேன்னுதான் சொல்லுவேன். அந்தப் பொண்ணு உன்னைப் பத்தி அவங்க வீட்டில் சொல்லிடுச்சா?"

"இ- இல்லே...!"





"என்னமோப்பா! காஞ்சுபோன கார்த்திகையும், தீஞ்சுபோன தீபாவளியும் போய், மகராசன் பொங்கல் எப்ப வரும்? பதினாறு உருண்டையை வாயில் அடக்கி பசியாத்திக்கலாம்னு காக்கை கணக்கா காத்திருக்கேன். சீக்கிரம் கல்யாணத்துக்கு ஏற்பாடு பண்ணு ராசா!"

பதில் கூறாது சிரித்தபடி புறப்பட்டான் இலகன்!

## 12

சங்கீதா, கணவனை கவலையோடு பார்த்தாள். கோட்டும், சூட்டும் போட்டு, சென்ட்டை பீய்ச்சியபடி ஆளுயரக் கண்ணாடி முன் நின்று தன் பிம்பத்தை சரிப்பார்த்துக்கொண்டிருந்தார் ராம்குமார்.

"நீ தயாராய்ட்டியா சங்கீதா?"

"ஆச்சுங்க. ஆனா, எனக்கு ஒண்ணும் புரியலே. எந்த நம்பிக்கையில் திரும்பவும் அந்த பொண்ணு வீட்டுக்குப் போக நினைக்கறீங்க? அவள் என் பேச்சை மதிக்காமல், திமிரா பதில் சொல்லி அனுப்பிட்டா. இப்ப நீங்களும் அந்த பேச்சை வாங்கிக் கட்டிக்கணும்னு என்ன தலையெழுத்து? அப்படியென்ன அவள் பெரிய ரம்பை, மேனகை? போய் காலில் விழாத குறையாய் கெஞ்சணும்னு..."

"அவள் ரம்பையோ, மேனகையோ, நம்ப பிள்ளை விசுவாமித்திரரா ஆயிட்டாரே! அவளை மறந்துடுப்பான்னா... விஷ பாட்டிலை கையில் வைச்சுக்கிட்டு மிரட்டறான். அவள் போட்டோவை வைச்சுக்கிட்டு, தனியா உக்காந்து எதையெதையோ பினாத்தறான். அதைப் பார்த்து எனக்கே கொஞ்சம் பயமாயிருக்கு சங்கீதா! எப்பேர்ப்பட்ட பிள்ளை. இப்ப இப்படி பைத்தியக்காரன் மாதிரி ஆயிட்டான். என் ஒரே பிள்ளையை காதலுக்கு பலிகொடுத்துடுவோமோன்னு திகிலாயிருக்கு. அதான் எப்பாடுபட்டாவது... அவனுக்கு அந்த நந்தினியை முடிச்சிடணும்னு தீர்மானிச்சிட்டேன்."

"நீங்க சொல்றது சரிதாங்க. இருந்தாலும் அவள் சம்மதிக்கணுமே!"

"அடிக்கிற காத்துல அம்மியே நகரும்போது, இவள் எந்த மூலை? நான் பணத்தாலேயே அடிச்சிக் காட்டறேன். எனக்கு நம்பிக்கை இருக்கு. வாசல்ல புதுசா ஒரு மாருதி கார் நிக்குதே... பார்த்தியா?"

"ஆமா... கேக்கணும்னு நினைச்சேன். எதுக்கு திடீர்னு... அந்த காரை வாங்கினீங்க?"

"நான் எதிலும் வித்தியாசமானவன்! முதல் முதலா நான் என் மருமகள் வீட்டுக்குப் போகப்போறேன். வெறுங்கையோட போகறதா?



ஒரு சின்ன பரிசோட போக நினைச்சேன். அவ்வளவுதான்! இந்த ஒரு காரை வைச்சே... அவள் வாயை அடைக்கிறேனா இல்லையா பார்!"

தெம்பும், தீவிரமுமாய் பேசிய கணவனை ஆச்சரியத்தோடு மட்டுமல்ல, மனதின் ஓரத்தில் முளைவிட்ட சிறு நம்பிக்கையோடும் பார்த்தாள் சங்கீதா!

ஆனால், நடந்ததோ... தலைகீழ்!

கல்லூரியில் யாரோ ஒரு மாணவி விபத்தில் இறந்துவிட்டாள் என்று அன்று ஒருநாள் விடுமுறை விட்டிருந்ததால் யோகா வீட்டில் இருந்தாள்.

சும்மாயிருக்கப் பிடிக்காமல் கதவு, சன்னல் திரைச்சீலைகளை மாற்றுவதும், அலமாரியில் இருந்த பொருட்களை தூசி துடைத்து வைப்பதுமாய் உள் வேலைகளை முடித்துவிட்டு வெளிவாசலுக்கு வந்தாள்.

தாறுமாறாய் ஓடியிருந்த மல்லிகைப் பந்தலை கயிறு போட்டு கட்டி சீராக படர பாடுபட்டுக்கொண்டிருந்தபோதுதான்... கார் வரும் சத்தத்திற்கு பாம்பு போல் தலையை தூக்கிப் பார்த்தாள்.

வெள்ளை கான்டசா காரும், அதை தொடர்ந்து வால்பிடித்தாற் போல் சாக்லேட் நிற மாருதியும் வந்து நின்றது.

கான்டசாவிலிருந்து இறங்கிய அந்த பணக்கார தம்பதிகளைப் பார்த்து புரிந்தும் புரியாமல் விடுவிடுவென உள்ளே ஓடினாள்.

சங்கீதா கணவனை மெல்ல சீண்டிவிட்டு சொன்னாள்.

"அவள்தான்!"

"தெரியறது. போட்டோவில் பார்த்திருக்கிறேனே!"

உள்ளே ஓடிய யோகா மூச்சுவாங்க அம்மா எதிரே நின்றாள்.

"என்னடி... ஏன் இப்படி மூச்சுவாங்குது?"

"அம்மா... யாரோ... கார்ல..."

"யாருடி? யார் வந்திருக்கா?"

"அன்னைக்கு சொன்னியே... நந்தினியை பொண்ணு கேட்டு வந்தாங்கன்னு... அவங்கன்னுதான் நினைக்கிறேன்..."

அதிர்ச்சியும், மகிழ்ச்சியுமாய் விநாடியில் வியர்த்தது ராணி அம்மாளுக்கு.

"எவ்வளவு பெரிய இடம். வீடு தேடி நடையா நடக்கறாங்க. ஆனா, இந்த முட்டாள் பெண் கொஞ்சமும் விவேகமின்றி... எடுத்தோம் கவிழ்த்தோம்னு பேசி அனுப்பறா! மறுபடி எதுக்காக வந்திருக்காங்க?

"என்னம்மா... வந்தவங்களை 'வா'ன்னு போய் கூப்பிடும்மா முதல்லே... இங்கேயே நின்னுட்டு இருந்தா என்ன அர்த்தம்!" யோகா அம்மாவை உசுப்பினாள்.

"அப்பா எங்கேயிருக்கார்?"

"அடுத்த அறையில்."

"நீ போய் அப்பாகிட்டே சொல்லி வரச்சொல். நான் அவங்களை அழைக்கிறேன்" தலைமுடியை கையால் கோதி சரிபண்ணிக்கொண்டு, சேலை சுருக்கங்களை நீவிவிட்டபடி ஹாலுக்கு விரைந்தாள்.

"வாங்க... உள்ளே வாங்க..." என்றவளுக்கு ராம்குமாரைப் பார்த்ததும் வயிற்றை பிசைந்தது.

எவ்வளவு பெரிய மனிதர்! ஐயோ... நந்தினி ஏடாகூடமாய் எதுவும் பேசி...!

ராம்குமார் கண்களால் அந்த வீட்டை எடைபோட்டார்.

ராணியம்மாள் காட்டிய சோபாவில் அமர்ந்தார். சங்கீதாவும் அவர் பக்கத்தில் அமர்ந்தாள். அவள் இதயமும் படபடவென அடித்துக்கொண்டது.

அதற்குள் சோமசுந்தரமும் வந்து வரவேற்றார்.

"வாங்க சார்... வாங்கம்மா!"

"அலோ, நான் ராம்குமார்... நந்தகுமாரோட அப்பா!"

"தெரியும்ங்க... நீங்கள்லாம் எங்க வீட்டுக்கு வர்றது அந்த ஏழுமலையானே வர்ற மாதிரி..."

"உங்களுக்குப் புரியுது... உங்க பொண்ணுக்குப் புரியலியே!"

ராம்குமார் பேசட்டும் என்று வாயே திறக்காமல் அமர்ந்திருந்தாள் சங்கீதா.

"ஏற்கனவே என் மனைவி வந்து, உங்கள் மகள் மறுத்து அனுப்பியும், திரும்பவும் இவங்க ஏன் வந்திருக்காங்கன்னு குழம்பிப்போய் இருக்கீங்க... அப்படித்தானே?"

"ஹி...ஹி... அதெல்லாம் இல்லே!" அசடுவழிய சிரித்தார் சோமசுந்தரம்.

அவருக்கென்று இருந்த தனித்தன்மை, ராம்குமாரின் பகட்டின் முன் தலைகுனிந்து நின்றது.

"ஒரு சொடக்குப் போட்டா... கிலோமீட்டர் கணக்கா என் பிள்ளையை கட்டிக்க வரிசையில் நிப்பாங்க பெண்கள். ஆனா



## கோலப் போட்டி

ஒவ்வொரு கோலத்துக்கும் ரூ. 100 பரிசு!
அனுப்பவேண்டிய முகவரி: கோலப்போட்டி, "ராணி முத்து", சென்னை-600 007.

பரிசுபெற்ற கோலம்:

### ஸ்வஸ்திக் கோலம்!



**24** புள்ளி 8 வரிசை, நேர்புள்ளி 8-ல் நிறுத்தவும்.

### மயில் கோலம்!



**17** புள்ளி 3 வரிசை 3-ல் நிறுத்தவும்.

—சி. அருள்மொழி, கோட்டைக்காடு.

அவ்வளவு பணம், புகழ், அந்தஸ்து, அழகுன்னு இருந்தும், காதலுக்காக தன் உயிரையும் மாய்ச்சிக்க துணிஞ்சிட்டான் என் மகன்!"

"அய்யோ... அவருக்கு ஒன்னும் ஆபத்தில்லையே...!"

"எப்படியோ... என் முன்னோர்கள் புண்ணியம். அவன் பிழைச்சிட்டான். ஆனா, அவன் உயிருக்கு இனி உத்திரவாதம் தரமுடியாத அளவுக்கு நிலைமை கட்டுக்குமீறி போயாச்சு!"

"........"

"ஒன்னு, நந்தினியை எனக்கு கல்யாணம் பண்ணுங்க... முடியலைன்னா... எனக்கு கருமாதி பண்ணிடுங்கன்னு விரக்தியா பேசறான். தவமிருந்து பெத்த ஒரே மகன். வளர்த்து ஆளாக்கினது, அல்பாயுசுல வாரிக்கொடுக்கவா? இளவரசனைப் போல் செல்லமா வளர்த்தோம். பாருங்க. அவன் உங்க பொண்ணை காதலிச்சான். உங்கப் பொண்ணுக்கு விருப்பமில்லேன்னாலும், அவனை நான் முதல் முதலா பார்க்க வரும்போது, வெறுங்கையை வீசிக்கிட்டு போகக்கூடாதுன்னு... ஒரு சின்ன பரிசோட என் மகன் என்னை இங்கே அனுப்பியிருக்கான்..."

சோமசுந்தரமும், ராணியும் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டு எச்சில் விழுங்கினர்.

"கந்தா..." வாசலைப் பார்த்துக் குரல் கொடுத்தார் ராம்குமார்.

அதற்காகவே காத்திருந்த டிரைவர் கந்தன் பவ்யமாய் தன் முதலாளி முன் நின்றான்.

"சாவியைக் கொடு."

சட்டைப் பையிலிருந்து எடுத்துக் கொடுத்தான்.

"நீ போகலாம்!"

அவன் சென்றபிறகு, சோமசுந்தரத்தைப் பார்த்து மென்மையாய் புன்னகைத்தார்.

"இது கார் சாவி! இந்த வீட்டு உபயோகத்துக்காக என் மகன் தரும் சின்ன பரிசு!"

வியர்த்துப்போய் நிமிர்ந்தனர் இருவரும்.

"கா...காரா? வே...வேணாம் சார்! எங்கள்ல யாருக்கும் கார் ஓட்டத் தெரியாது. தவிர, நந்தினி..."

"நான் நந்தினிக்கிட்டே சொல்லிக்கிறேன். கார் ஓட்ட கத்துக்கறது கம்ப சூத்திர வேலையா... என்ன? ஏம்மா... நீங்களாவது உங்க மகள்கிட்டே எடுத்து சொல்லுங்களேன்!"

ராணிக்கு உச்சிக் குளிர்ந்தது.



# இதயம் பேசுகிறது!

நாவலைப் படித்துவிட்டு, உங்கள் கருத்துக்களை எழுதி அனுப்புங்கள்.
முகவரி: இதயம் பேசுகிறது, "ராணிமுத்து", சென்னை - 600 007.

## திருப்தியான நாவல்!

அனுராதா ரமணனின் "காதோரம் ஒரு கவிதை"யை படிக்கப் படிக்க என் கல்லூரிக்கால நண்பர்களின் நினைவு வந்து விட்டது.

செ. அரவிந்தன்,
நாகர்கோவில்.

'காதோரம் ஒரு கவிதை' ஒரு குடும்பப் படத்தை பார்த்த திருப்தி இருந்தது.

அ. செல்வலெட்சுமி,
மன்னார்குடி.

அனுராதா ரமணனின் ஒவ்வொரு வரிகளும் கற்கண்டாய் இனித்தது. மருத்துவ முன்னேற்றத்தை மிக அழகாய், தெளிவாய் விளக்கியிருந்தார்.

பாக்யலெட்சுமி, ஊட்டி.

தம்பியின் வீட்டில் வந்து அம்மாவும், அக்காவும் இப்படியா கொட்டமடிப்பார்கள்? போதாக்குறைக்கு அக்காவின் யாப்பிள்ளை பரக வேறு அவ்வப்போது வெறுப்பேற்று றொர்.

புனிதவதி, சேலம்.

அனுராதா ரமணன் முடிவில் குமாரையும், சித்ராவையும் எங்கே பிரித்துவிடுவாரோ என்று நெஞ்சை பிசைந்துகொண்டிருந் தோம். நல்லவேளையாக இருவரை யும் சேர்த்து வைத்துவிட்டார்.

புஷ்பமூர்த்தி,
பாளையங்கோட்டை.

சிவிமா துளிகள் ஒவ்வொன் றும் தித்திப்பாய் இருந்தது. மம்தா தமிழில் இருந்துதான் இந்திக்கு போனார் என்பதை தெளிவாக விளக்கிவிட்டார்.

பா. அழகேசன், மாயவரம்.

ஓவியர் ஜெ.யின் அட்டைப் படம் ஒவ்வொன்றும் "ராணி முத்து"க்கு மணிமகுடமாய் அமைந்துவிடுகின்றன.

மாலதி, கூத்தாநல்லூர்.

நானும் ஒவ்வொரு "ராணி முத்து"வையும் வாங்கி முக்குத்தி பரிசு பெற்றவர்கள் பட்டியலில் என் பெயர் இடம்பெற்றிருக்கிறதா என்று பார்த்துப் பார்த்து ஏமாந்து போகிறேன்.

இ. பத்மாவதி, நெல்லூர்.

"அப்பா தர்றதை மறுக்காதீங்க..." என்றவன் அவனே ராம்குமாரிடமிருந்து சாவியை பெற்றுக்கொண்டான்.

"அப்புறம்... நாங்க கிளம்பறதுக்கு முன்னால் நந்தினிக்கிட்டே ரெண்டு வார்த்தை பேசலாமா?"

"இதோ அழைச்சிட்டு வர்றேன்!" ராணி நந்தினியின் அறையினுள் நுழைந்தாள்.

குப்புறப் படுத்துக்கொண்டு ஏதோ ஒரு கதைப் புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தாள் நந்தினி.

"நந்தினி..."

"உம்..."

"கொஞ்சம் எந்திரிச்சி வாயேன்!"

"எதுக்கு?"

"அவங்க வந்திருக்காங்க!"

"யாரு?"

"நந்தகுமாரோட அம்மாவும், அப்பாவும்!"

"சரி, அவங்க வந்தால் எனக்கென்ன?"

அவர்கள் வந்தது, பேசியது எல்லாமே அவள் காதிலும் விழத்தான் செய்தது. அவர்களின் செய்கையால் திலகன் மீதிருந்த காதலும், அவனை தவிர வேறு யாரையும் உயிரே போனாலும் மணப்பதில்லை என்கிற தீவிரமும் வலுப்பெற்றதேயொழிய குறையவில்லை.

"பெரியவங்க மதிச்சி கூப்பிடறாங்க... உனக்கென்ன அவ்வளவு தலைக்கனம்? மரியாதையா வந்து ரெண்டு வார்த்தை பேசு..."

ராணியின் குரலில் உஷ்ணம் மிகுந்திருந்தது.

படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி மூலையில் வீசி எறிந்தவள் அம்மாவை ஏற இறங்க அலட்சியமாய் ஒரு பார்வையை பார்த்து விட்டு ஹாலுக்கு வந்தாள்.

சடுதியில் உடை மாற்றி புத்தம் புதுமலராய் தங்கள் முன் வந்து நின்ற நந்தினியை சின்ன சிரிப்போடு தலையசைத்து வரவேற்றார் ராம்குமார்.

அந்த கண்கள், பணிவு, சிரிப்பு, சற்றே அவளை தடுமாறவே செய்தது.

"உக்காரும்மா..."

"பரவாயில்லே... சொல்லுங்க!"

"நான் நந்தகுமாரோட அப்பா..."

"தெரியும்."



"நான் இப்ப எதுக்கு வந்திருக்கேன் தெரியுமா?"

"........."

"என் பிள்ளைக்கு உயிர் பிச்சைக் கொடு."

"........?!"

"உனக்குத் தெரியும்... என் சொத்தோட மதிப்பு, கவுரவம், அந்தஸ்து... எல்லாமே!"

"என் மகனைப் பற்றியும் தெரிந்து வைத்திருப்பாய். பக்கா ஜென்டில்மேன் அவன்!"

"........."

"அவன் உன்மேல உயிரையே வைச்சிருக்கான் நந்தினி. நீ மறுத்திட்டேன்னதும் சாக துணிஞ்சிட்டாம்மா! இப்படி உயிரா நேசிக்கிற ஆளை கணவனாப் பெற எந்தப் பொண்ணுமே கொடுத்து வைச்சிருக்கணும்! நீ எடுக்கப்போற முடிவுலதான் என் பிள்ளை யோட......"

"ப்ளீஸ்..." போதும் என்பது போல் கையமர்த்தினாள் நந்தினி.

"நீங்க பெரியவங்க... சொன்னா புரிஞ்சுப்பீங்கன்னு நம்பறேன். பணம், புகழ், அந்தஸ்து, கவுரவம் எல்லாத்திலேயும் உயர்ந்தவங்க. உலகம் முழுக்க உங்க பேர் கொடிகட்டிப் பறக்குது. உங்க நிறுவனத்துல வாட்ச்மேன் வேலை கிடைக்கறதைக்கூட பெருமையா நினைக்கிறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. அதுவும் லட்சக்கணக்குல உங்க கம்பெனிகளில் பணிபுரியற பணியாட்களுக்கு நீங்க தெய்வம். நானும் உங்களை தெய்வமா மதிக்கிறேன். உங்க மகன் என்மேல் வைச்சிருக்கிற அன்பை நினைச்சி பெருமைப்படறேன், பிரமிச்சுப்போறேன். அவரை, அவரோட அன்பை மதிக்கிறேன். அதே சமயம் மறுக்கவும் செய்கிறேன். காரணம் என் சூழ்நிலை!"

"அதான் ஏன் நந்தினி? அவனை மதிக்கிற உன்னால் ஏன் மணக்க முடியாது?"

"தெரியாத மாதிரி கேக்கறீங்களே சார்! உங்க மகன் நான் கிடைக்கலேன்னு உயிரை போக்கிக்க துணிஞ்சிட்டார். எனக்கு திலகன் கிடைக்கலேன்னா... நானும் உயிரோட இருக்கமாட்டேன் சார்!"

"ந...ந்...தி...னி!"

"ஆம்... என் காதலும் வலியது. திலகன் என் உயிர். நான்விடும் மூச்சு. அவரில்லா வாழ்க்கை உயிரற்ற உடல் போன்றது."

"நந்தினி...!" அடிக்குரலில் அதட்டினார் அப்பா.

"ஏம்ப்பா... திலகன் பேரை சொன்னாலே எரிஞ்சிவிழறீங்க?
திலகனும் இவர் போல பணக்காரர் ஒருவரின் மகனென்றால் உடனே
சம்மதிச்சி இருப்பீங்க இல்லே! என் திலகன் உழைக்கத் தயங்காதவர்.
அவரே சுயமாய் தொழில் செய்து உன்னதமான உயர்நிலைக்கு
வரத்தான் போகிறார். நீங்களும் பார்க்கத்தான் போகிறீர்கள்!"

"இதுதான் உன் முடிவா?" குரலில் தொய்வு.

"வேற வழி தெரியலே சார் எனக்கு! என் நிலைமையும் சற்று
யோசித்துப் பாருங்கள்..."

இதயத்தில் சுருக்கென வலித்தது ராம்குமாருக்கு. எப்படியாவது
பேசி, பணத்தைக் காட்டி தன் வழிக்கு கொண்டுவந்துவிடலாம்
என்கிற நம்பிக்கையெல்லாம் இப்போது காணாமல் போய்விட்டிருந்
தது. தன் மனைவியை அடிபட்ட வலியோடு பார்த்தார்.

அதைக் காண சகியாத சங்கீதா ஆறுதலாய் அவர் கையைத்
தட்டிக்கொடுத்தாள்.

ஒரு நீண்ட பெருமூச்சை வெளியிட்டவர் எல்லோருக்கும்
பொதுவாய் கையெடுத்து கும்பிட்டார்.

"அப்ப... நாங்க புறப்படறோம்!"

"தயவுசெய்து காபி சாப்பிட்டுவிட்டு..." நந்தினி தயவாய்
கேட்டாள்.

"பரவாயில்லைம்மா... நாங்க கிளம்பறோம்!"

"எங்கள் வீட்டிற்கு வந்து காபிகூட சாப்பிடாமல் போனால்
எப்படி? என் மீது இன்னுமா கோபம்?"

"அதெல்லாமில்லை..."

"அப்புறம் என்ன தயக்கம்? அம்மா..." என்றாள் குறிப்பாக.

"யோகா தயார்பண்ணிட்டு இருக்கா..." ராணியம்மாள் முகத்தில்
வேதனை விஞ்சியிருந்தது.

'எப்பேர்ப்பட்ட சம்பந்தம்? ஏழு ஜென்மத்திலும் புண்ணியம்
செய்தாலும் கிடைக்குமா இந்த வாழ்க்கை? எல்லாம் கைமீறி
போச்சே?'

சோமசுந்தரமும் தனக்குள் நந்தினியை நினைத்துக் குமுறிக்
கொண்டுதான் இருந்தார்.

"அப்புறம்... இந்த கார் சாவியை நீங்க திரும்ப வாங்கிக்கணும்!"
அம்மாவிடமிருந்து பிடுங்காத குறையாய் வாங்கி அவர் முன்
நீட்டினாள்.

"ஏம்மா!" தயங்கினார்.



"இதெல்லாம் எதற்கு சார்? உங்கள் அன்பு ஒன்றே போதுமே! நான்
உங்கள் மகனை சந்தித்து பேசுகிறேன். என் நிலைமை எடுத்து
சொல்கிறேன். அவர் மனதை நான் மாற்றுகிறேன்!"

'முடிகிற காரியமா?' என்பது போல் உதட்டைப் பிதுக்கினார்.

"சார்... காபி!"

காபியுடன் வந்து நின்றாள் யோகா!

கணவனும் மனைவியும் ஒருசேர எழுந்து நின்றனர் அதிர்ச்சியில்!

## 13

**வே**லை செய்த களைப்பில் வியர்த்திருந்த யோகா குளித்து
உடை மாற்றி காபி தயாரித்து டிரே தட்டில் வைத்து எடுத்து
வந்திருந்தாள்.

ராம்குமாரும், சங்கீதாவும் திறந்த வாயை மூடாமல் நந்தினியையும்,
யோகாவையும் மாறி மாறி பார்த்துக்கொண்டிருந்தனர்.

இருவருமே... யோகாவை இப்போதுதான் பார்க்கின்றனர்.
நந்தினியின் நகலாய், அதே புன்னகையோடு நின்றிருந்த யோகாவை
பார்த்து பிரமித்துப் போயினர்.

"இது... இது...!"

"இவளும் என் பெண்தான். யோகநந்தினி என்று பெயர். யோகா
என்று அழைப்போம். நந்தினியும், இவளும் இரட்டையர். ஒரு மணி
நேரம் தாமதித்து யோகா பிறந்தாள்" சோமசுந்தரம் விளக்கிச்
சொன்னார்.

ராம்குமாருக்குள் பலவித யோசனைகள், திட்டங்கள் உருவாகத்
தொடங்கின. அதே எண்ணம் சங்கீதாவுக்கும் உற்பத்தியானது.

நிம்மதியாய் மூச்சுவிட்டுக்கொண்ட ராம்குமார் மனசுவிட்டு
சிரித்தார்.

"ஒரு பெரிய கண்டத்திலிருந்து தப்பிச்சாச்சு! ஏம்மா, யோகா...
உன்னிடம் ஒரு கேள்வி. தப்பா மட்டும் எடுத்துக்காதே! நீ யாரையாவது
காதலிக்கிறியா?"

யோகாவுக்கு அவர் ஏன் அப்படியொரு கேள்வியை கேட்கிறார்
என்று புரியவில்லை. என்றாலும் புன்னகை மாறாது பதிலளித்தாள்.

"இல்லை சார்!"



"மிஸ்டர் சோமசுந்தரம்... பிடிங்குங்கள் இந்த கார் சாவியை!"

"ஏ...எதுக்கு சார்?" கண்ணன் தயக்கமாய் நந்தினியை ஏறிட்டது.

நந்தினிக்கும் எதுவும் புரியவில்லை.

"எதுக்கு சம்மந்தின்னு கேளுங்க சம்பந்தி?"

"எ...என்ன சொல்றீங்க?"

"உங்க மகளை என் மகனுக்கு கல்யாணம் செய்தால் நீங்க எனக்கு என்ன உறவு?"

"எப்படி? நந்தினிதான்..."

நந்தினி இல்லாவிட்டால் என்ன? யோகா இருக்கிறாளே!"

"யோ...கா...வா...?"

அனைவரும் வாயைப் பிளந்தனர்.

"அதெப்படி சாத்தியம்? உங்க பிள்ளை இதுக்கு சம்மதிக்கணுமே!"

"நந்தினியை கட்டிக்க ஊசிமேல தவமிருக்கான். அவன் நந்தினியை கட்டிக்கடா என்றால்... வேண்டாம் என்றா சொல்லப் போறான்?"

"திரும்பவும் குழப்புறீங்களே... என் அக்காவை விரும்பின உங்க மகனால் என்னை மணக்க முடியுமா?" யோகா கேட்டாள்.

"முடியும்!"

"எப்படி?"

"நீ... நந்தினியா நடிக்கப் போறே!"

"எ...ன்...ன....?"

"ஏன்... பெண்ணென்று பிறந்தாய்?" பாடலை பாடிக்கொண்டே டிரஸ் செய்துகொண்டிருந்தான் நந்தகுமார்.

எப்போதும் ஆங்கிலப் பாடல்களை முணுமுணுத்துக் கொண்டிருந்த மகனை இன்று தமிழ்ப்பட காதல் பாடலை பாடவைத்த காதலின் மகத்துவத்தை எண்ணி வியந்தார் ராம்குமார்.

"நந்தினி உன்னை கல்யாணம் செய்துக்கொள்ள சம்மதிச்சிட்டா நந்தா!" என்று அன்று ஒரு வார்த்தை சொன்னதுதான் தாமதம். பந்து போல் படுக்கையிலிருந்து துள்ளியெழுந்தான்.

"உண்மையாவா சொல்றீங்க? பொய்... இருக்காது. அவள் சம்மதிக்க மாட்டா!"

"உண்மையைத்தான் சொல்றேன் நந்தா!"

"எ...எப்படிப்பா... எப்படி சம்மதிச்சா? அந்த இளைஞனை மறந்து

வியாபாரமும் செய்கிறேன். அதற்கான பணத்தையும் உங்களிடமே பெற்றுக்கொள்கிறேன். ஆனால், இலவசமாகவோ அன்பளிப்பாகவோ அல்ல... கடனாக...!" திலகன் தீர்மானமாய் கூறினான்.

ராம்குமார் பெருமையுடன் இந்த இளைஞனின் தோள்களைப் பற்றி அழுத்தினார்.

திருமணம் எளிமையாய் நடந்தது.

எல்லோரிடமும் ஆசிபெற்ற பிறகு, நந்தினி தன் குடும்பத்தினரை கட்டிப்பிடித்து கண்ணீர்விட்டு அழுதாள்.

சோமசுந்தரமும், ராணியும் தங்கள் அழுகையை மறைக்க முகத்தைத் திருப்பிக்கொண்டனர்.

ராம்குமாரே முன்னின்று எல்லாவற்றையும் நடத்தி வைத்தார்.

நந்தகுமாருக்கு இது விசயம் எதுவுமே தெரியாது.

யோகா, நந்தினியின் கைகளை கெட்டியாகப் பற்றிக்கொண்டாள்.

"என் திருமணத்திற்கு நீ கண்டிப்பாய் வரவேண்டும் நந்தினி!"

'நானா?' என்பதுப் போல் பார்த்தாள் நந்தினி.

"ப்ளீஸ்..." கண்கள் கெஞ்ச...

"சரி" என்று தலையாட்டினாள் நந்தினி!

திருமணம் முடிந்த கையோடு திலகன், நந்தினி, மீனாட்சிப் பாட்டி மூவரும் மும்பைக்கு பயணமாயினர்.

## 14

நந்தகுமார் – யோக நந்தினி!

உயர்ரக திருமண அழைப்பிதழில் தங்கநிறத்தில் பெயர்கள் தகதகத்தன.

"எப்படி நந்தா? திருமண அழைப்பிதழ் பிடிச்சிருக்கா?" ராம்குமார் கேட்டார்.

"ரொம்பவே பிடிச்சிருக்கு.. ஏம்ப்பா நந்தினியோட முழுப்பெயர் யோக நந்தினியா? எனக்கே இப்பத்தான் தெரியும்!"

பதில் கூறாது புன்னகைத்தார்.



"அப்புறம், அந்த திலகனுக்கும் ஒரு அழைப்பிதழ் அனுப்பினோமா?"

"அதுக்கு அவசியமேயில்லை. இப்ப அவன் சென்னையில் இல்லை. ஒரு மாதத்திற்கு முன்பே எங்கோ வெளியூர் போய் செட்டிலாகி விட்டதாகக் கேள்விப்பட்டேன்!"

"ஓ...!" என்றான் யோசனையுடன்.

திருமண நாளும் வந்தது.

நாள் நெருங்க... நெருங்க... யோகாவிற்கு அடிவயிற்றை கலக்கியது.

ஆரம்பத்தில் பெருமிதமாய் சம்மதித்துவிட்டாளே ஒழிய... நினைத்துப் பார்க்க பார்க்க... பயம் எழுந்தது.

"எத்தனை நாட்களுக்கு உண்மையை மூடிமறைக்க முடியும்? நான் நந்தினி இல்லை, யோகா என்று தெரிந்துவிட்டால் என்ன ஆகும்? நந்தகுமார் அதை எப்படி எடுத்துக்கொள்வார்?

'நான் நேசிக்கப்பட்ட, பூஜிக்கப்பட்ட பெண் இவளில்லை என்று தெரிந்தால்... அவர் இதயம் தாங்குமா?'

சந்திரன் அத்தான் விசயத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தாலே... உண்மை விளங்கிவிடுமே!

இப்பவும் மாறாத ஒரே உருவ அமைப்புடன் இருந்தும் அவர் இதயமும் நந்தினியைத் தானே நாடியது! நந்தினிக்கு திருமணமாகப் போகிறது என்றறிந்ததும் மனம் நொந்து, எங்கோ தொலைதூர ஊருக்கு மாற்றலாகிப் போனாரே!

நானோ, நானும் நந்தினி இல்லை என்று அறிந்தால்... என்னை ஏசமாட்டாரா? இது எவ்வளவுப் பெரிய துரோகம்? ஏமாற்று வேலை? கடவுளே... இனிவரும் நாட்களை எப்படி சமாளிக்கப் போகிறேன்?"

அவ்வளவு மனஉளைச்சலிலும் நப்பாசையுடன் நந்தினி திருமணத்திற்கு வரமாட்டாளா? என்று ஆவலாய் எதிர்பார்த்து ஏமாந்தாள் யோகா!

அதே நேரம்...

"இந்நேரம்... யோகாவின் கழுத்தில் தாலி ஏறி இருக்கும் அல்லவா! பாவம்... நம்மை எதிர்பார்த்து ஏமாந்திருப்பாள்..." நந்தினி வாய்விட்டு அரற்றிக்கொண்டிருந்தாள்.

திலகன் அவளை மென்மையாய் தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

"உன் மனதில் ஓராயிரம் ஆசைகள் குவிந்துகிடக்கிறது. என்னால் உன்னைப் புரிந்துக்கொள்ள முடிகிறது கண்ணம்மா! உண்மையிலேயே ஒரு பெரிய தியாகத்தை செய்துவிட்டாய். என் உயிரே, எப்படியோ

போனால் எனக்கென்ன? என்று நினைக்காமல்... இப்படி சொந்த பந்தங்களை விட்டுவிலகி, நல்லது கெட்டதுகளில் பங்கெடுத்துக் கொள்ளாமல்... தொலைதூரத்தில் வந்துவிட்டாயே... உன்னை நினைத்தால் எனக்கு பெருமையாக இருக்கிறது நந்தும்மா!"

"நீங்கள் மட்டும் என்ன! என் முடிவுக்கு தலை சாய்த்து நீங்களும் ஊர்விட்டு ஊர் வர ஒப்புக்கொண்டீர்களே..."

"ஜாடிக்கேற்ற மூடி என்கிறாயா?"

இருவரையும் சாப்பிட அழைக்க வந்த மீனாட்சி பாட்டி வந்த சுவடு தெரியாமல் திரும்பிவிட்டாள் இவர்களைப் பார்த்து.

நாட்கள் விரைந்தன.

இரு தம்பதிகளும் மகிழ்ச்சியாகவே நாட்களை கடத்திக்கொண்டு வந்தனர்.

திலகன் ராம்குமாரிடமிருந்து கடனாகப் பெற்ற பணத்தை கொண்டு ஆரம்பித்த வியாபாரம் சூடுபிடிக்கத் தொடங்கியது.

நந்தகுமார் தன் புது மனைவியுடன் இனிதாய் இல்லறம் நடத்தி வந்தான். நந்தினிக்கு ரோகிணி மட்டுமே தங்கை என்ற அளவில் அவனுக்கு விவரம் தெரியும். சாமர்த்தியமாய் மறைத்துவிட்டனர்.

நந்தினி இப்போது ஏழு மாத கர்ப்பிணி!

அவ்வப்போது வீட்டிற்கு கடிதம் எழுதுவாள். சென்னையிலிருந்தும் பதில் வரும். நந்தினிக்கு அம்மா, அப்பாவை பார்க்க வேண்டும் என்கிற ஆசை, ஏக்கமாக மாறி உறக்கத்திலும் பிதற்றத் தொடங்கினாள்.

கர்ப்பிணிப் பெண் ஆசைப்பட்டுவிட்டால் நிறைவேற்றி ஆகணுமே!

ஆனது ஆகட்டும் என்று சென்னைக்கு நந்தினியோடு பயணமானான் திலகன்.

ஆனால்...

திடுதிப்பென்று வந்து நின்ற நந்தினியையும், திலகனையும் பார்த்து, அப்போதிருந்த மனநிலையிலும், மனநிறைவுடன் வரவேற்றாள் ராணி.

ரோகிணியை கட்டிப்பிடித்து கன்னத்தை ஈரப்படுத்தினாள் நந்தினி.

பரவசமாய் வீடு முழுக்க வலம் வந்தாள்.

"நல்லா இருக்கியா நந்தினி?"

"எனக்கென்னம்மா குறைச்சல்? உங்க பக்கத்துல இருக்க முடியலையேங்கற குறையைத் தவிர..."

"இப்படியெல்லாம் மனசை அலட்டிக்காதே நந்தினி! வயித்துல





குழந்தை வைச்சுக்கிட்டு... ஏக்கத்தை வளர்த்துக்காதேம்மா... சீக்கிரமே எல்லாம் சரியாயிடும்!"

"யோகா எப்படி இருக்காம்மா? மகிழ்ச்சியா இருக்காளா?"

"நல்லா இருக்காம்மா! அவளும் இப்ப உண்டாகியிருக்கா... நேத்துக்கூட அப்பாவைப் பார்க்க வந்திருந்தா..."

"அடடா! ஆமா... நானும் வந்ததிலேர்ந்து பார்க்கறேன்... அப்பா கண்ணிலேயே படலியே... எங்கம்மா?"

அம்மா இணறினாள். உதடுகள் துடித்தன.

"ஏம்மா... கண்ணு கலங்குது?"

"அப்பாவுக்கு உடம்பு சரியில்லை நந்தினி! மாரடைப்பு வந்து ஒரு வாரமா மருத்துவமனையில் வைச்சிருந்து நேத்துதான் வீட்டிற்கு அழைச்சிட்டு வந்தோம்!"

"அ...ம்...மா!" நந்தினி அலறினாள்.

"இவ்வளவு நடந்திருக்கு! என்னிடம் ஒரு வார்த்தை சொல்ல தோணலை இல்லை? ஏம்மா ஒரேயடியா என்னை தலை முழுகிட்டீங்களா?"

"அழாதே நந்தினி! அவர் மனசுபூரா உன்னை பிரிந்திருக்கும் வருத்தம்தான். வாயும் வயிறுமா இருக்கிற உனக்கு அந்த தகவலை சொல்லி உன் மனசை துன்பப்படுத்த விரும்பலைங்கறதை தவிர, வேறு காரணம் ஏதுமில்லை நந்தும்மா!" கண்களை துடைத்துக்கொண்டாள்.

"சரி... இப்ப... அப்பா எங்கே?"

"இதோ... இங்கே இருக்கேன்... நந்தும்மா!" உள் அறையில் படுத்துக் கொண்டிருந்தவர் நந்தினியின் குரல் கேட்டு எழுந்து வந்திருந்தார் சோமசுந்தரம்.

பத்து நாள் தாடி... முகத்தை சோகமாக்கி, நடையில் தளர்வை தந்திருந்தது.

"அப்பா!" ஓடிச்சென்று கட்டிப்பிடித்து அழுதாள்.

குளித்து முடித்துவந்த திலகன் மாமனார் காலைத் தொட்டு வணங்கி நலம் விசாரித்தான்.

அதே நேரம் வெளியில் கார் சத்தம்.

யோகா இறங்கி வந்தாள்.

"யோ...கி..." நந்தினி மகிழ்ச்சியாய் கூவ... ஆச்சரியத்தில் விழிகள் விரிய யோகா நந்தினியை கட்டிக்கொண்டாள். இறுக்கமாய் கட்டிக் கொள்ள முடியாதபடி இருவரின் வயிறும் தடுத்தது.



போன கதை, வந்த கதை அத்தனையும் பேசி முடித்தனர்.

நேரம் போனதே தெரியாமல் அளவளாவினர்.

"நந்தகுமார் எப்படியிருக்கார் யோகா?"

"எனக்கே யோகான்ற பெயர் மறந்துபோச்சு. அந்தளவு நந்தினி, நந்தினின்னு பூவாய் தாங்கறார்..."

"நீ மட்டும் தனியே வந்திருக்கே?"

"அவரும் வருவதாகத்தான் இருந்தது. நல்லவேளை... ஏதோ மீட்டிங் இருக்கிறது என்று போய்விட்டார்."

"நல்லது... ஒரு வாரத்துக்கு நீயும் இங்கே வராதே! நாங்கள் ஊருக்கு போகும்வரை!"

"அவருக்குத் தெரியாமல் நான் வருவேன்!" செல்லமாய் சிணுங்கினாள்.

"நந்தினி... சுக்குகாபி அருமையாய் போடுவாயே! உன் கையால் போட்டுக்கொண்டு வர்றியாம்மா?" அப்பா அன்பாய் கேட்டார்.

"இதோ... இரண்டே நிமிடத்தில்..." அறையைவிட்டு வெளியே வந்தவள் சமையல்கட்டுக்குள் நுழைந்தாள் நந்தினி!

"நந்து..." கார் சாவியை சுழற்றியபடி உள்ளே நுழைந்துக் கொண்டிருந்தான் நந்தகுமார். டிரேயில் சுக்குகாபி அடங்கிய கோப்பைகளை அடுக்கி சமையலறையை விட்டு வெளியே வந்த நந்தினி... தன் எதிரே வந்து நின்ற நந்தகுமாரை கண்டு உச்சபட்சமாய் அதிர்ந்தாள். கைகள் நடுங்கியது. கோப்பைகள் நடனமாடின.

"என்ன நந்தினி அப்படி பார்க்கறே! மீட்டிங் கேன்சலாய்டுச்சி... சரி... அப்படியே மாமாவை பார்த்துவிட்டு போவேமே என்று வந்தேன். மாமாவுக்கு இப்ப எப்படியிருக்கு? ஆமா, ஏதோ வித்தியாசம் தெரியுதே உன்கிட்டே! காலையிலே பார்த்ததுக்கும் இப்ப பார்க்கறதுக்கும்... என்ன வித்தியாசம்! உம்..." அவளை சுற்றி சுற்றி வந்துப் பார்த்தான்.

நந்தினிக்கு மூச்சே நின்றுவிடும் போல் இருந்தது.

"..........."

"வயிறு!"

"..........?!"

"காலையில் பார்த்ததைவிட கூடுதலாய் வயிறு உப்பி இருக்கே... குழந்தை கிடுகிடுன்னு வளருதா! காம்ப்ளான் அதிகமா சாப்பிடாதேன்னு சொன்னா கேக்கறியா!" கிண்டல் பண்ணினான்.

நந்தினிக்கு தலையை சுற்றுவது போலிருந்தது.

அம்மா...!" தாங்கமாட்டாமல் கூவி அழைத்தாள்.

"ஏய்... எதுக்கு அம்மாவைக் கூப்பிடறே?" என்றபடி நந்தினியின் கழுத்தில் கைகளை மாலையாகப் போட்டு முகத்தை நெருங்கினான்.

"அய்யோ... விடுங்க..." பயத்தில் கையிலிருந்த காபித்தட்டு கீழே விழுந்து சிதறியது.

"அச்சச்சோ..." என்றபடி சட்டையை உதறிக்கொண்டான்.

சத்தம் கேட்டு... அத்தனை பேரும் ஹாலுக்கு வர... நந்தகுமார் மயக்கம் வராதகுறையாய் தடுமாறினான்.

வியப்பாய்... திகைப்பாய்... கண்களை கசக்கி... கசக்கி பார்த்தும் இதயத்தின் படபடப்பு அடங்கவில்லை.

"என்ன நடக்குது இங்கே?" டென்சன் மிகுதியில் கத்தினான் நந்தகுமார்.

திலகனை பார்த்த பார்வையில் டன்டன்னாய் வெறுப்பிருந்தது.

யோகாவையும், நந்தினியையும் பார்க்க பார்க்க தலை கிறுகிறுத்தது.

உண்மையை சொல்ல யாருக்கும் துணிவு வரவில்லை. கடைசியில் திலகன் எல்லாவற்றையும் கூற முன்வந்தான்.

எல்லாம் சொல்லி முடித்தபின் அனைவர் முகத்திலும் பீதி.

நந்தகுமார் எந்தவிதமாய் ஆர்ப்பாட்டம் பண்ணப் போகிறானோ?

ஆனால், நடந்ததோ அதற்கு நேர்மாறாய்!

"அடக்கடவுளே! எனக்குத் தெரியாமல் இத்தனை நிகழ்ச்சிகள் நடந்துவிட்டதா? என்னிடம் உண்மையை சொல்லியிருந்தால், இத்தனை அலைச்சல், நாடு கடத்தலெல்லாவற்றிற்கும் அவசியமே ஏற்பட்டிருக்காது."

"..........?!"

"நந்தினியைப் போன்றே யோகா என்றொரு பெண் இந்த பூமியில் இருப்பது எனக்குத் தெரியாது. என்னை கவர்ந்தது நந்தினியின் அழகு. அதே அழகு யோகாவிடம் கிடைக்கும்போது மாட்டேன் என்றா சொல்லப் போகிறேன்? நந்தினி... இதை நீங்களாவது என்னிடம் சொல்லியிருக்கலாமே!"

"அன்றைய சூழ்நிலையில் எனக்கு வேறு வழியே தெரியவில்லை."

"திலகன்... நான் உங்களிடம் தவறாக ஏதேனும் நடந்திருந்தால் மன்னித்துவிடுங்கள். என் நண்பரே எனக்கு சகலையாக வாய்த்திருப்பதில் மகிழ்ச்சியே!"

மகிழ்ச்சியுடன் அவன் கையைப் பற்றிக் குலுக்கினான் திலகன்.



## அறிவுப் போட்டி – 304 முடிவு!

சரியான விடைகளும், பரிசுபெற்றவர் விவரமும் அடுத்த "ராணி முத்து"வில் வெளிவரும்.

"யோகா..." என்றான் தன் அம்மாவிடம் ஒண்டி நின்றபடி நிலத்தை நோக்கி குனிந்திருந்தவளைப் பார்த்து.

முதன்முதலாய் அவன் பெயர் சொல்லி அழைக்க... பரவசமாய் நிமிர்ந்தாள் யோகா.

"எ...என்னை மன்னிச்சிடுங்க. நான் உங்களை ஏமாத்திட்டேன்!"

"இதில் உன் தவறு ஏதுமில்லை யோகா! இதனால் எனக்கு எந்த வருத்தமும் இல்லை! பயப்படாதே... அப்போதுதான் என் குழந்தைகள் நல்லபடியா பிறக்கும்!"

"என்னது குழந்தைகளா?"

நந்தினியும் திலகனும் அவர்களை கேள்விக்குறியாய் பார்க்க...

"ஆமாம்! மருத்துவ பரிசோதனையில் என் யோகாவின் வயிற்றில் இரண்டு குழந்தைகள் இருப்பது தெரிய வந்தது" என்றான் குதூகலமாய் சட்டைகாலரை தூக்கிவிட்டபடி நந்தகுமார்.

"அட..... ராமா!" திலகன் தலைசுற்றி விழுவதுப் போல் பாவ்லா பண்ணினான்.

"என்ன திலகன்?"

"இங்கேயும் இரட்டைதான்!" திலகனின் சுட்டுவிரல் நந்தினியை நோக்கி காட்ட...

'ஹோ'வென்ற மகிழ்ச்சி கூக்குரல்கள் எழும்பியது.

அந்திவான சிகப்பு அத்தனையும் இப்போது நந்தினியின் கமல முகத்தில் அப்பியிருந்தது.

(முடிந்தது)

---

ராணி பப்ளிகேசன் சார்பில் வெளியிட்டவர், ஆசிரியர். அ.மா. சாமி, 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007. அச்சிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ்சாலை, சென்னை–600 007.